Registered as a News Paper
பக்கம் – 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் – 16 | வெள்ளி – 16 | 10 – 16 – யூன் – 2005



## களமாடிய புலி...




## எத்தனை... இடர்ப்பட்டோம். எவ்வளவு... துயர்கண்டோம்.



# சுதந்திரபுரம் படுகொலை...

# நறுக்கென...

## இந்தியாவின் புதிய நிலைப்பாடு



இலங்கை விவகாரங்களின் இந்தியாவின்-'இந்தியப் பார்வை' மிகவும் கூர்மை கொள்ளத்தொடங்கியுள்ளதை அதன் அண்மைக்கால நகர்வுகள் துல்லியமாக இனம்காட்டி வருகின்றன.

ஒரு காலத்தில் தனது செயற்பாடுகள் அனைத்தையும், முற்றாக நிராகரித்தும்- எதிர்த்தும் வந்த ஜே.வி.பியை மிகச் சாதுரியமாக சுருட்டி மடிக்குள் போட்டுக்கொண்ட இந்தியா ஹெலஉறுமய பிக்குகளையும் எப்படியோ தனது கைக்குள் சிக்கவைத்துவிட்டு இலங்கை தொடர்பான தனது அபிலாஷையை நிறைவேற்றிக் கொள்வதற்கான வியூகங்களை அமைக்கத் தொடங்கிவிட்டது.

இலங்கை விவகாரங்களில் அமெரிக்காவினதும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்குலகினதும் அதிகரித்து வரும் செல்வாக்கின் ஆளுமையை இந்தியாவால் ஜீரணிக்கவே முடியாத சூழ்நிலையில் அதனை உடைக்க ஜே.வி.பியையும் ஹெல உறுமயப்பிக்குகளையும் கருவிகளாகப் பயன்படுத்தத்தொடங்கியுள்ளது. பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அதன் அணுகுமுறைகள் நிரூபித்தன.

இந்தியாவின் பின்பலம் தந்த உற்சாகத்தால் சற்று எல்லைமீறியே பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவகாரத்தில் சந்திரிகாவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அறிக்கைகளை விடுத்தும் பிரசாரங்களை மேற்கொண்டும் வந்த ஜே.வி.பியினரும், ஹெலஉறுமயக்காரரும் மட்டுமல்ல கொழும்பிலிருந்துகொண்டு இந்திய நலன்களை கவனித்து அறிக்கைகள் விடுத்துவந்த ஆனந்தசங்கரி கும்பலுக்கும் கூட, சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் பின்னர் இந்தியா பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகக் கூறியுள்ள புதிய நிலைப்பாடு குறித்த கருத்துக்கள் அதிருப்தியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாம்!

எல்லா அமைப்புகளையும் அதில் இணைக்கவேண்டும் என இந்தியத்தரப்பு கருத்து வெளியிட்டுள்ளது. ஒரு கண்துடைப்பு நடவடிக்கைதான் என சலித்துக்கொண்ட ஜே.வி.பி ஆதரவுக் கொழும்புப் பிரமுகர் ஒருவர் 'எங்களை அதில் இணைப்பதல்ல பிரச்சினை. புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை மேற்கொள்ளக் கூடாது என்பதே முக்கியம்' என்றாராம்.

இதுதான் இந்தியாவை முதன்மை எதிரியாக- ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட வல்லாதிக்க சக்தியாக தங்கடை மறைந்த தலைவர் ரோகண விஜேவீர வகைப்படுத்தியிருந்தமைக்கு காரணம் என்ற அவர் இந்தியாவை நம்பவே கூடாது. தேவையேற்படின் அது புலிகளை அங்கீகரித்தாலும் ஆச்சரியப்படமுடியாது எனவும் சலித்துப் போய் கூறினாராம்.

எதுவானாலும் பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு 'உப்புச்சப்பற்ற' விடயம் என்பது இந்தியாவுக்குத் தெரியும். புலிகள் அதுகுறித்து பேசினாலும் கூட அதனை அவர்கள் மிக முக்கியமான விடயமாகக் கருத்தில் கொள்ளவில்லை என்றும்- இந்தியா விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சந்திரிகா ஏதோ ஒரு கட்டத்தில் பொதுக்கட்டமைப்பை ஏற்கவேண்டிய அழுத்தம் அதிகரித்துவருகின்றதென்றும் இந்தியா உணர்ந்துள்ளதாலேயே! புதிய நிலைப்பாட்டை எடுக்க நேர்ந்தது என்பதே உண்மை...

இதனைப் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்போர் புரிந்துகொள்ளாமைக்கு அவர்களின் அறியாமையே காரணம் அப்படித்தானே.

## மங்கள சமரவீர பாடிய மங்களம்



பாவம் மங்கள சமரவீர..........

அவரைத் தனக்குத் தானே மங்களம் பாட வைத்து விட்டார் அதிகார அம்மணியார். மங்களவும் தனக்கு இப்படி ஒரு நிலை வருமென்று கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்.

எவ்வளவோ பாடுபட்டு பொதுசன ஐக்கிய முன்னணியுடன் ஜே.வி.பியை ஒட்ட வைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கி ஆட்சியை மீண்டும் 'அரும் பொட்டிலென்றாலும்' கைப்பற்ற மங்கள எடுத்த முயற்சியை அறியாதார் இலர்.

முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் சந்திரிகாவின் முதன்மை வட்டத்துள் அதி முக்கிய நபராகத் திகழ்ந்த அவரின் எத்தனையோ தில்லுமுல்லுகளை சனாதிபதி என்ற பதவிநிலையை வைத்து சந்திரிகா மறைத்த விதம் நாடறியும்.

இப்போது அதே மங்களவின் கைக்குள் இருந்த ஊடகத்துறை அமைச்சர் பதவியை அவராகவே கைவிட சந்திரிகா மேற்கொண்ட மூலோபாயம் பயனளித்துவிட்டது.

மங்கள சமரவீரவின் ராஜினாமாவை சந்திரிகா ஏற்றும் விட்டார்.

ஊடகத்துறை மங்களவிடம் இருந்தபோது அரசமற்றும் அரசசார்பு ஊடகங்களில் ஜே.வி.பியினர் குறித்த செய்திகளும் பிரசாரங்களும் கொடிகட்டிப் பறக்கவே செய்தன.

சந்திரிகா ஐந்து சதத்திற்கும் பெறுமதியில்லாத ஒருவர். அவருக்கு இன்று பெறுமதி மிக்க நிலையை ஜே.வி.பிதான் அளித்துள்ளது என்ற செய்தியைக் கூட சில அரசசார்பு ஊடகங்கள் வெளியிடுவதற்கு மங்களவின் பங்கு அதிகம் என்று கூறப்படுகிறது.

சரி மங்களவின் பதவி விலகல் ஜே.வி.பி க்கும் ஒரு 'அடி' என்றும் கூறப்படுகிறதை வைத்துப் பார்க்கும் போது ஜே.வி.பியின் சனாதிபதி மற்றும் அரசிற்கு எதிரான பிரசாரங்களுக்கு ஒரு ஆப்பு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம். அரசுக்குள் இருந்து கொண்டே "அரசியையும்" "ஆட்சியையும்" விமர்சித்து தமது பலத்தை விஸ்வரூபமாக்கிக்காட்டி வந்த ஜே.வி.பிக்கு சந்திரிகாவின் இப்புதிய நகர்வு எரிச்சலூட்டவே செய்யும்.

அது சரி சந்திரிகாவுக்கும் ஜே.வி.பிக்குமிடையே 'ஒட்டை' ஏற்படுத்த மங்கள பயன்படுத்திய "பசை"யான அநுரா எங்கே ஆளையே காணோம்.... மங்களவுக்கு பலமாக நிற்காது எங்கே பதுங்கியிருக்கிறார்?

பாவம் சனாதிபதி பதவிக்கனவில் எங்கேயாவது 'மெய்மறந்த நிலையில்' ஒதுங்கியிருக்கலாம் போலும்....

இந்த நிலையில் மங்கள- அநுரா இருவரதும் 'புரோக்கர்' பணி முடைவடைந்து விட்டதால் ஜே.வி.பி குறித்து பரிந்து பேச அரசில் எவருமில்லாமல் போய்விட்டது என்றே கூறவேண்டும்....

இது ஜே.வி.பிக்கான சந்திரிகாவின் அதிர்ச்சி வைத்தியமாகவும் இருக்கலாம்.

## பாவம் புத்தர் என்ன செய்வார்?



போகிற போக்கைப் பார்த்தால் புத்தரே யுத்த நிறுத்தம் உடைவதற்குக் காரணமாகி விடுவார் போலுள்ளது.

புத்தர் வேண்டாமென்று அரச மரத்தடியை சரணடைந் தாலும் கூட அவரை அரசியலுக்குள் இழுத்தே தீருவோம் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு களம் இறங்கியுள்ள ஜாதிக ஹெல உறுமய பிக்குகளும் அவர்களின் 'அடியார்'களும் அவரை சந்திக்கு சந்தி இருத்தி சர்ச்சையை உருவாக்கி ஆதாயம் தேடும் மூலோபாயத்தை தொடர்வதில் வைராக்கியத் துடன் இருப்பதாகவே தெரிகிறது.

ஐம்பதாயிரம் பேரை பலி கொடுத்தாலும் பெரும் இரத்தக்களறி ஏற்பட்டாலும் தங்களின் நிலைப்பாட்டில் இருந்து விலகவே போவதில்லை என சூளுரைத்துள்ள அத்துரலிய ரத்னதேரர் ஒரு இரத்த வெறிகொண்ட இராணுவ அதிகாரியாகவே தன்னை இனம் காட்டத் தொடங்கியுள்ளார்.

திருமலையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலையைச் சுற்றி முட்கம்பி வேலிப்பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் அவருக்கு பலத்த இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது விரைவில் அப்பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யக்கோரியும் பிக்குமார் போராட்டம் நடத்தினாலும் நடத்தலாம்.

கனவில் கூட புத்தர் தனக்கு இவ்வாறானதொரு அவமானகரமான நிலை புத்தபிக்கு களாலேயே ஏற்படும் என எண்ணியிருக்கமாட்டார்.

ஹெல உறுமய பிக்குகளுக்கு அரசியல் நடாத்த புத்தரை விட்டாலும் வேறுவழியில்லை. பொதுக்கட்டமைப்பை எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளதாக பிரசாரம் செய்யப்பட்டுவரும் சோபிததேரரின் கடந்தகால அரசியல் உத்திகள் குறித்து கூறத்தேவை யேயில்லை.

அவரது சாகும் வரை உண்ணாவிரதத்தைக் கண்டுகொள்ளாது பொதுக்கட்டமைப்பை எப்படியும் ஏற்படுத்துவேன் என அடிக்கடி வெற்று அறிக்கைகளை விட்டு வரும் சந்திரிகா மீது அவர் மிகுந்த கடுப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சந்திரிகா எடுத்துள்ளதாகக் கூறப்படும் நிலைப்பாடு குறித்து எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற அமர்வுகளை ஹெல உறுமய உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பதாகக் கூறியுள்ளது நாடாளுமன்றத்திற்கு நிம்மதி தரும் செய்தியென்றே கூறவேண்டும்.

புதிய அரசு ஆட்சியைத் தொடங்கியபோது நாயும் பூனையுமாக இருந்த ஹெல உறுமயவும் ஜே.வி.பியும் புத்தர்சிலை விவகாரம், பொதுக்கட்டமைப்புப்பிரச்சினைகளில் நெருங்கி ஆனால் மோதாமல் செயற்பட இணங்கியுள்ளதாகத் தெரிகிறது.

பொதுக்கட்டமைப்பு விவகாரம், புத்தர்சிலை விவகாரம் இது இரண்டையும் வைத்தே இரு தரப்பினரும் இப்போதைக்கு அரசியல் பண்ணிக் காலம் தள்ள முடியும் என நினைக்கிறார்கள் போலும். பாவம் புத்தர்...! அவ்வளவுதான்.....!

## ஏட்டிக்குப் போட்டி



தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப் பிழையாக அது இருந்தால் போதும் என்பது ஒரு 'கிழமொழி'

ஒரு வேளை 'பொதுக்கட்டமைப்பு' ஏதோ ஒரு சூழலில், ஏதோ ஒரு வகையில் ஏற்பட்டு விட்டால் அரசாங்கத்தையும் சனாதிபதியையும் தாங்கள் எதிர்க்க வேண்டிய அவசியம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட நேரின்அரசியல் குழப்பம் ஏற்பட்டால் சனாதிபதி அரசைக் கூட கலைக்கலாம். அதன் பின்னர் வரும் தேர்தலில் 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி' கூட்டு இல்லாமல் போனால் தாங்கள் தனித்து நின்று என்ன செய்வது என்பது குறித்து ஜே.வி.பி யினர் யோசிக்கத் தொடங்கியுள்ளதன் விளைவாக சில மறைமுக அரசியல் நகர்வுகளை அவர்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

ஒரு புறம் இன்றைய ஆட்சியின் ஆரம்பம் முதல் முட்டிமோதிக் கொண்டிருந்த ஜாதிக ஹெல உறுமயவை தம்மோடு கூட்டுவைத்துக்கொள்ள வருமாறு ரகசிய அழைப்பை விடுக்கத் தொடங்கியுள்ள ஜே.வி.பியினருக்கு இந்த ஆலோசனையை மங்கள சமரவீரதான் கூறியுள்ளதாகக் கேள்வி.

இரண்டாவதாக பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் குழப்பத்தை உண்டு பண்ணி அதனை உடைக்கும் ஆரம்ப முயற்சிகளிலும் அவர்கள் இறங்கிவிட்டுள்ளனர். முதலில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் சந்தேக முரண்பாடுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ள ஜே.வி.பியினர் தமது ஆதரவை ராஜபக்ஷவுக்கு அளிக்க முன்வந்துள்ளதுடன், அடுத்த சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை போட்டியிட வைத்து அவரைத் தோல்வியை தழுவ வைக்கவே சந்திரிகா முயன்று வருவதாகவும் கூறியுள்ளனர்.

அடுத்தது அநுராவுக்கும் அக்கா சந்திரிகாவுக்கும் இடையே மனஸ்தாபங்களை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் ஜே.வி.பி தீவிரம்காட்டத் தொடங்கியுள்ளது.

அடுத்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கனவில் இருக்கும் அநுராவை அக்காவிடம் இருந்து பிரித்துவிட்டால் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு உடைவுகள் அதிகமாக அது முற்றிலும் பலவீனமாகிவிடும் எனவும் இந்நிலையில் அடுத்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடையும் என்றும் கணக்குப் போடும் ஜே.வி.பி யினர் அப்போது மீண்டும் சந்திரிகா தம்மிடம் துணை தேடி உதவி கோரும் நிலை ஏற்படலாம் எனவும் அதனைப் பயன்படுத்தி தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முடியும் என்றும் ஜே.வி.பி யினரின் மிரட்டல் போகிறதாம்.

எதுவானாலும் கூடாத கூட்டத்துடன் கூட்டுச் சேர்ந்ததன் 'தவறையும்' அதன் தாக்கங்களையும் சந்திரிகா இப்போது உணரத் தொடங்கியுள்ளதாக பொதுசன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் அது காலம் கடந்துவிட்ட ஞானோதயம் தான்.

இதேவேளை ஜே.வி.பிக்குள் சோமவன்ஸ அமரசிங்கவின் அதிகாரம் அதிகரிக்கத் தொடங்கியதால் வீரவன்ஸ, ரில்வின் சில்வா போன்றோரின் ஆதிக்கம் வலுவிலக்கத் தொடங்கியுள்ளதாகவும் தெரிகிறது. இந்த நிலையில் சோமவன்ஸ எதிர்ப்பாளர்களை தம்வசமிழுக்க சந்திரிகா முயன்று வருவதாகவும் அறியவந்துள்ளது. சபாஷ் சரியான போட்டி என்று செல்லலாமா?

செங்குட்டுவன்


**தீர்ப்பினை இன பேதமின்றி எந்த உள்ளூர் மனித உரிமை அமைப்பும் கேள்வி எழுப்ப வில்லை. அதுமட்டுமல்லாது இலங்கை மனித உரிமை கள் அமைப்பு இடைக்கால அறி க்கை (Interim Report) ஒன்றை வழங்கியிருந்தது. அதனை ஆதாரப்படுத்தவோ அல்லது மனிதஉரிமை அமைப்பின் அணுகுமுறை என்றோ கருத முடியாதளவுக்கு மிகமோசமா கவும் பக்கச் சார்புடையதாகவும் அமைந்திருந்தது.**

இதில் கொல்லப்பட்டவர்களின தும் காயப்பட்டவர்களினதும் வயது 14-23இற்கு இடைப்பட்டதாகவே காணப்படுகிறது. அதில் பத்துப் பேரின் வயது 12 என்றும் அதில் ஒருவருக்கு 11வயது என்றும் தெரியவந்துள்ளது. ஏறக்குறைய அரைவாசிப்பேர் சிறுவர்களா கவே இருந்துள்ளனர். உள்ளூரில் இயங்கும் சிறுவர் பாதுகாப்பு அமைப்புகளும், சர்வதேச நாடு களிலிருந்து இங்கு முகாமிட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு உரிமை யாளர்களும் என்னுமே மௌன மாகவே இருக்கின்றனர். அது மட்டுமல்ல இலங்கை மனித


சிறப்பானதாகவே உள்ளது. சர்வதேச மனித உரிமையமைப்பு களாவது இவ்வளவற்றை கண்டிருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரியவிடயமாகும். உள்ளூர் அமைப்புகளும் இல ங்கை மனித உரிமை அமைப்பு களும் எதனை தமது பணியாக ஆற்றிவருகின்றன. அவர்களின் இனசார்பு நிலையும் அதற்கான காரணிகளை உருவாக்கம் செய் வதுமே அவர்களின் பணியாக இருக்கும் என்பது தெளி

இலங்கை ஆட்சியில் எழுத்து வடிவிலும் இனநடைமுறையிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இத்தகைய விதிமுறைக்குட்பட்ட நடவடிக்கை இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தினால் பல தடவை நிறுவப்பட்டுள்ளது. அது மீண்டும் ஒரு தடவை காட்டப்பட்டுள்ளது.

ஆசியான் சர்வதேச அமைப்பு களும் தாம் காட்டிய எதிர்ப்பி னையும், ஆவேசத்தையும். கண்டு இலங்கை அரசாங்கம் மிரண்டு போகவோ தீர்ப்பினை உடனடி யாக மாற்றவோ போவதில்லை.



# சிறிலங்காவின் நீதித்துறையும் மனித உரிமைகளின் எதிர்காலமும்



தீர்ப்பினை இன பேதமின்றி எந்த உள்ளூர் மனித உரிமை அமைப்பும் கேள்வி எழுப்பவில்லை. அதுமட்டுமல்லாது இலங்கை மனித உரிமை கள் அமைப்பு இடைக் கால அறிக்கை (Interim Report) ஒன்றை வழங்கி யிருந்தது. அதனை ஆதா ரப்படுத்தவோ அல்லது மனிதஉரிமை அமைப் பின் அணுகுமுறை என்றோ கருதமுடியாதளவுக்கு மிக மோசமாகவும் பக்கச்சார்பு டையதாகவும் அமைந் திருந்தது.

மனித உரிமைக்கான ஆர்வ லர்களும், அதன் அமைப்புகளும் 27-05-2005இல் இலங்கையின் உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பினை கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. அதுமட்டுமல்ல மனிதஉரிமைக்கான உணர் வாளர்கள் அதனை கண்டு வெட் கப்படாமலும் இருந்திருக்க முடி யாது. அந்தளவுக்கு மிகமோச மான ஏற்றுக்கொள்ள முடியாத தீர்ப்பொன்றை உயர் நீதிமன்றம் வழங்கியது. இலங்கையின் நீதித் துறை மீண்டுமொருதடவை இன வெறியையும் துவேசத்தையும் காட்டியுள்ளது.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கொல்லப்பட்ட அப் பாவி தமிழ்ச்சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் விடயத்தில் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்ற குற்றவாளிகளை விடு தலை செய்தது பற்றியே மேல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சுவா ரசியம் எதுவென்றால் மேற் படி

சுய அறிவில் பொலிசார் இல்லை என்பதோடு காயப்பட்ட வர்களை இராணுவ வைத்திய சாலையில் வைத்தே விசாரணை நடத்தியிருந்தமையும் இராணு வத்தினரின் ஒத்துழைப்போடு காயப்பட்ட ஏனைய தமிழ் இளை ஞர்கள் விசாரிக்கப்பட்டனர் என்ப தும் தெரியவந்துள்ளது.

இவற்றைவிட இம்முகா முக்கான பராமரிப்பில் பல்வேறு பட்ட அமைப்புகள் தொடர்புபட்டி ருப்பதாகவும் தெரியவந்துள்ளது. சனாதிபதி செயலகம், சிறுவர் பாதுகாப்பு அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு, புனர மைப்பு அமைச்சு, தேசிய இளை ஞர்மன்றம், டொன்போஸ்கோ தொழில்நுட்ப நிலையம் என்பன. ஆனால் இவை எதுவும் தெளி வான, முழுமையான விசார ணைக்கு ஒத்துழைப்பையோ, சரி யான தகவல்களையோ வழங்க முன்வரவில்லை.

உரிமை அமைப்பு திட்டமிட்டு நடத்தப்பட்ட படு கொலையை வேண்டுமென்றே மறைக்க (White wash) முயற் சிக்கின் றதை காணமுடிகின்றது.

இது தொடர்பாக சர்வதேச அமெனிஸ்ரி அமைப்பும், மனித உரிமைகளுக்கான நிலையமும் கடுமையாகச் சாடியுள்ளன. இலங்கை ஒரு சனநாயக நாட் டுக்குரிய நீதித்துறையைக் கொண்டிருக்கவில்லை என்ப தோடு-சனநாயக நாட்டுக்குரிய இயல்பை இழந்துவிட்டதாகக் கூறு

**-ஐங்கரன்-**

கின்றது. 1983ஆம் ஆண்டி லிருந்து இன்றுவரை நிகழ்ந்த படுகொலைகளில் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றுக்கான தீர்ப்பு களும் இவ்வாறே அமைந் துள்ளதென தெளிவுபடுத்தி யுள்ளது. சத்துருக்கொண்டான் (184 கிராமவாசிகள்), குமாரபுரம் (58ஆண்கள்), கொக்குவில், பனிச்சயடி, பிள்ளையாரடி என பெரும் படுகொலைகளை நிகழ் த்திவிட்டு பின்னர் நிகழ்த்தும் நீதி விசாரணையிலும், தீர்ப்புகளிலும் தமது தரப்பினரை தப்பிக்க அர சாங்கம் முயன்றுவருவதாக ஆசி யான் மனித உரிமை மையம் குற்றம் சாட்டியுள்ளது.

சனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது இதுபற்றி கலந்துரையாடப்படுவதற்கு இவ்வமைப்பு கோரியிருப்பதுடன் உடனடியாக மீள் விசாரணைக்கு உட்படுத்துமாறு சனாதிபதியைக் கோரியுள்ளது.

இத்தகைய நடவடிக்கை

வாகிவிட்டது. இவை யாவற்றிட மும் நீதி,நியாயம் கிடைக்கு மெனக்கருதிச் செயல்படுவதை தமிழர்கள் கைவிடவேண்டும் என்பதே இதன் எதிரொலிப் பாகும்.

இனரீதியான பகையைக் கையாளும் பெரும்பான்மைச் சமூகம் உலகத்திற்குக் காட்டும் கேவலமான வடிவமே இதுவாகும். இத்தகைய வடிவத்தை சர்வ தேசத்திற்கு இனியும் தொடர்ந்து காட்டமுடியாததென்பது உணர்த் தப்படும்.

மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனத்தின் உறுப் புரை ஐந்து கூறுவதனை அவ தானிப்போம். "எவரும் சித்திர வதைக்கோ அல்லது கொடு மையான மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடை முறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தலாகாது" அவ்வாறு நான்காவது உறுப்புரை, "எவரும் அடிமையாக வைத்திருக்கப் படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப் படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடைசெய்யப்படுதல் வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றை எல்லா அரசும் ஏற்றுக்கொள்வதுடன் தமது அரசி யலமைப்புக்குட்பட்ட வரைபில் ஏற்ற அடிப்படை மனித உரிமைப் பிரகடனங்களை பேணுதல் வேண்டுமெனக் கூறுகின்றது.


எனவே சர்வதேச வரை முறையிலும் சரி அரசியலமைப் புக்கு உட்பட்ட விதத்திலும் சரி

அவ்வாறு அது மேற்கொள்ள வேண்டுமாயின் சர்வதேச மட்டத் தில் முதன்மை பெறும் சக்திகள் தலையிடுவதோடு, தொடர்ச்சி யான நெருக்கடியை வழங்க வேண்டும்.அதற்கான ஏற்பாட்டை மனித உரிமை மையங்கள்கூட மேற்கொள்வது கடினம். ஏனெனில் அவற்றின் அணுகு முறைக் கேற்றவகையில் உலக நாடுகள் இருப்பதில்லை என்ப தோடு அவற்றின் பேணுகையை அரசுகள் அனுமதிப்பதில்லை. காரணம் அரசுகளும் ஏறக்குறைய அப்படியான பணிகளையே உல கத்தில் நிகழ்த்தி வருகின்றன.

எனவே மனிதஉரிமை அமைப்புகளும் அவற்றின் தொழில்பாடுகளும் அவர்களது பிரகடனங்களுக்குள் அல்ல. அவைகளின் நலனுக்குள்ளும் பாதுகாப்புக்குள்ளுமே தங்கி யுள்ளன. அதிலிருந்து அவை மீள மாட்டாது என்பது மட்டுமன்றி நிரந்தரமான மாற்றத்தை காண வும் முடியாது. மாறாக சுதேசப் பலத்தோடு தமக்கென தனித்து வமான கட்டுமானத்தை ஏற்படுத் தும். அதில் தனித்துவமான மனித உரிமை அமைப்பை கட்டி வளர்ப்பதுவுமே பொருத்தமான தாகும்.

இலங்கை இனவாத அரசும் அதன் மனித உரிமையும், நீதியும் அதற்கு இசைவானதே. அதிலி ருந்து பாதுகாப்பதென்பது தனித் துவமான ஆட்சியையும் உரி மையை நிலைநாட்டுவது தவிர வேறுமாற்று வழி தென்பட வில்லை.

# அறிவுசார் கருத்துகளும் மனித விசாரணைகளும்





**மேலை நாட்டுத் தத்துவத்தில் பகுத்தறிவுக் கொள்கை என்பது அறிவை அடிப்படையாகக் கொண்டது தான் மேம்பாடு எனும் தத்துவவாதிகளின் கொள்கையைக் குறிக்கும். அங்கு கி.பி 17-18 ஆம் நூற்றாண்டில் தலை சிறந்த தத்துவ ஞானிகளான தேகாற்றே, இஸ்பினோசா, இலைபினிற்சு ஆகியவர்கள் தத்துவத்திற்கு 'ஏற் புடைத் தான முறை' பகுத்தறிவுக் கொள்கை தான் (Rational-ism) எனக் கொண்டு அதன் மூலம் கடவுள் உலகம் மாயை மற்றும் அடிப்படை உண்மைகளை அறிவு முறையில் ஆராய்ந்தனர். தத்துவத்தில் பகுத்தறிவுக் கொள்கை என்பது அவர்களின் தத்துவ முறையையே குறிக்கும்.**

அறிவியல் ஆரம்ப காலத்தில் பிரபஞ்சத்தின் அடிப்படை உண்மையைத் தேடும் அறிவியலாகவே காணப்பட்டது. பிரபஞ்சம் பற்றிய தத்துவ விசாரணையோடுதான் விஞ்ஞானப் பரிணாமம் ஆரம்பமாகின்றது. அனைத்திற்கும் ஆதாரம் எது? அடிப்படை எது? எனும் தத்துவ ரீதியான ஆய்வே, விஞ்ஞானம் ஒரு அணுகுமுறையாகப் பரந்த அறிவாக மலர ஆதாரமாகியது. இவ் வகையில் விஞ்ஞானப் பாகுபாடானது, இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என இரு வகையாக அமைந்துள்ளது. கண்ணால் காணக்கூடிய காட்சிப் பொருட்களைக் கொண்டு இயற்கையைப் பற்றி ஆய்வு செய்வதாக இயற்கை விஞ்ஞானம் அமைந்தது. மாறாக சமூகத்தைப் பற்றிய ஆராய்வில் ஈடுபடுவதாக சமூக விஞ்ஞானம் அமைந்தது.

ஹெகலியச் சிந்தனையின் கட்டுக்கோப்பின் மையம் காரண-அறிவு (Reason) எனும் கருத்தாக்கமாகும். தத்துவச் சிந்தனைக்கு அப்பாற்பட்டது ஏதும் இல்லை என்றும், வரலாறு என்பது அறிவின் வளர்ச்சி பற்றிய வரலாறே என்றும், அரசு என்பதில் அறிவு நிறைவு பெறுகிறது என்றும் ஹெகல் கருதினார். சுதந்திரம், அகம், மனம், கருத்து ஆகியவை 'அறிவு' என்ற கருத்தாக்கத்திலிருந்து வகுக்கப்பட்டவை. மனிதனின் அறிவு அவனது உள்ளுறை ஆற்றல்களையும் புரிந்துகொள்ளுமாறு செய்கிறது. அவன் தன்னைச் சுற்றியுள்ள உண்மைகளை மேலும் ஒரு உயர்ந்த தளத்திற்கு- அறிவின் தளத்திற்கு இட்டுச் செல்லக்கூடியவன். இவ் அறிவைப் பின்பற்றும்போது, நிலவுகிற நிலைமைகள் அறிவிற்குப் பகையாக உள்ளன என்பது புலப்படும்.

மாக்ஸிசம் இயற்கை, மனிதன் இரண்டையும் புறப்பொருட்களின் உலகமாகக் கருதுகிறது. மனிதனுக்கு மேலான ஒரு அப்பாலை முதன்மைப் பொருளுக்கு வழங்குகிறது. வரலாற்றால் மனிதன் முற்றிலுமாக நிர்ணயிக்கப்படுகின்றான் என்ற கண்ணோட்டத்தைத் தருகிறது. இயற்கையின் இயங்கியலானது ஜடப் பொருளுக்குரிய விதிகளை மானிட உலகிற்கு ஏற்றுகிறது. பொருண்மைத் தத்துவக் கோட்பாடுகள் மாக்ஸியர்களுக்கு நிச்சயமான, முற்றான உண்மைகளாக இருக்கின்றன. மாக்ஸ் இந்தச் சூழலிலிருந்து தான் மனித வாழ்க்கைக்கு உன்னதமான, உயரிய் இலட்சியங்களை வகுக்கின்றார். வரலாற்று வெள்ளத்தில் மனிதனைக் கரைத்து வரலாற்று வெள்ளத்துக்கு மேலும் அவன் உந்துதல் தர வேண்டும். என்று மாக்ஸியம் எதிர்பார்க்கின்றது.

மாக்ஸ் ஒரு பொதுவுடைமை வாதி மட்டுமல்ல, தனிமனித சுரண்டலையும் எதிர்ப்பவர். தனது குறுகிய நலன்கள், குறுகிய குடும்ப நலன்கள் முதலியவற்றிலிருந்து மனிதனை விடுத்து, வரலாற்றில் மனிதனைக் கலக்க வைப்பதன் மூலம் உலகில் இதுவரை விளக்கப்பட்ட தத்துவங்கள் அனைத்தையும் விட மனிதனுக்கு மாபெரும் இலட்சியங்களை, ஆற்றல்களை மாக்ஸியம் தருகிறது. மனிதனுக்கு விரிந்த பார்வையை, விரிந்த உலகத்தை, விரிந்த அலகுகளை மாக்ஸியம் வழங்குகிறது. இவற்றைப் பெறுவதன் மூலமே மனிதன், மனிதனாக இருப்பதற்கான உரிமையை, நியாயத்தைப் பெறுகிறான் என்பதை மாக்ஸியம் தெளிவுபடுத்துகிறது. தேங்கி விட்டவன் மனிதனல்ல. இயங்குபவனையே மனிதனாக்குகிறது மாக்ஸியம்.

அறிவானது ஆக்கபூர்வமான சிந்தனைக்கும் செயலுக்கும் வழிசமைக்க வேண்டும். தனிமனித வாழ்வுடன் விளையாட்டை ஏற்படுத்தி வேடிக்கை பார்ப்பது அறிவல்ல. அறிவெனும் பெயரால் பிறரின் மனதை, சிந்தனையை நோகடிப்பவர்கள், பிறர் தமது அறிவால் திருப்பி உணர்த்தும்போது உணர்ந்துகொள்ள மறுக்கும் காரணம் யாது? ஒருவனது வாழ்வை வளம்படுத்த, வழிப்படுத்தப் பயன்பட வேண்டிய அறிவு புரளிகளாலும், அநீதிகளாலும் வாழ்வையே அழித்துவிடச் செய்கிறதே ஏன்? திடசங்கற்பங்கள் கூட தனி மனிதவாழ்வை பூச்சியத்தின் திசைகளுக்கு உருமாற்றும் வன்முறைகளாக அறிவு வளர்ந்து விட்டதா?

விஞ்ஞான ஆய்வு முறையால் ஏற்படும் பயன்பாடாக மனித அறிவு விருத்தி காணப்படுகின்றது. இவ் அறிவினூடாக (Preduction) எதிர்வு கூறக் கூடியதாக உள்ளது. ஆய்வு என்ற பணி, மனிதன் தோன்றிய காலம் முதல் இருந்து வந்தது என்றாலும், அதன் முறைகள் பல மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. அவற்றில் பலவாக நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு அதன் அணுகுமுறை (appraach), அதன் பார்வை (Out look) முக்கியமானவை. இவ் அணுகுமுறைகள் தர்க்க முறை அல்லது அளவையியல் முறை (Logical Method), விஞ்ஞானமுறை (Scientific Method), அமைப்பு முறை (Systems Method) என மூன்று கட்டங்களாகவும் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

ஆய்வுப்பரிமாற்றங்கள் யாவும் தனிமனிதனை, சமூகத்தைச் சேர்ந்தவையாக முன்னேற்றப் பாங்காகவே அமைந்திருந்தன. கிறிஸ்துவுக்கு முன் வளம் பெற்று நின்ற இந்திய நாகரிகம், கிரேக்க நாகரிகம், ரோம நாகரிகம் அனைத்திலும் தர்க்கரீதியான வாதங்களின் அடிப்படையில் உண்மைகளை நிலை நிறுத்தும் வழி பின்பற்றப்பட்டது. மாறாக தம் உயர்வையும் பிறரின கீழ் நிலையையும் பெருமையுடன் தம் செயற் பாங்கினூடாகக் கட்டியம் கூறும் மனிதர்களிடையே "அன்பு", "புரிந்துணர்வு" எனும் பதங்களுக்கு புதுமையான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதே உத்தமமானது. நாகரிகத்தை வளர்த்த அறிவு சமூக முன்னேற்றத்தை தனிமனித விசாரணைகள் வழிநிறுவியது.

ஆய்வாளர்களுக்கு விஞ்ஞானமுறையை (scientific Method) அறிமுகப்படுத்திய வர்களில் கலிலியோ தலைமையான வராவார். இந்த விஞ்ஞான முறையின் முக்கிய அம்சம் அனுபவத்தில் பரிசோதித்தலாகும். பிற்காலத்தி லேற்பட்ட தொழிற் புரட்சிக்கும், அதனடிப்படையிலமைந்த தொழில் யுகத்திற்கும் (Industriailage) இந்த அணுகு முறை அல்லது ஆராய்ச்சி வழி பெரிதும் காரண

**மாதங்கி**

மாயிருந்தது. பல்வேறுபட்ட விஞ்ஞானங்கள் வளரவும், விரிவடையவும் பரிசோதனை ஆய்வு கூடங்கள் தோன்றவும் இவ்வணுகுமுறை வழி வகுத்தது.

விஞ்ஞானமுறை ஒரு தனிப்பட்ட அறிவுத்துறையின் அடிப்படையிலமைந்த அமைப்புக்களை ஆராயவே உதவியாயிருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எழுந்த பல் அமைப்பிற்கும் பல்துறை அறிவு வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்தனவாயிருந்தன. அவற்றை ஆராயவும், அவற்றின் தன்மைகளை, அவை இயங்கும் முறைகளைப் புரிந்து கொள்ளவும் துறைப் பரிமாற்ற (Inter-Diciplinary) அடிப்படையிலமைந்த ஆய்வு தேவைப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் விஞ்ஞான முறையினின்றும் முன்னேறிய, வளர்ச்சி பெற்ற , ஆய்வுமுறை தேவைப்பட்டது.

இத் தேவையின் அடிப்படையில் உருவானது தான் அமைப்புமுறை (System Method) ஆகும். இன்று விஞ்ஞானம், பொறியியல் போன்ற துறைகளில் இம்முறை பெரிதும் பயன் படுத்தப்படுகிறது. இவ் இயங்கும் பல் துறைசார் அறிவு மனிதனை வாழவைப்பதற்குத் தானே பயன்பட்டிருக்க வேண்டும்.

மேலை நாட்டுத்தத்துவத்தில் பகுத்தறிவுக்கொள்கை என்பது அறிவை அடிப்படையாகக் கொண்டதுதான் மேம்பாடு எனும் தத்துவவாதிகளின் கொள்கையைக் குறிக்கும். அங்கு கி.பி 17-18 ஆம் நூற்றாண்டில் தலை சிறந்த தத்துவ ஞானிகளான தேகற்றே, இஸ்பினோசா, இலைபினிற்சு ஆகியவர்கள் தத்துவத்திற்கு 'ஏற்புடைத்தான முறை' பகுத்தறிவுக் கொள்கைதான் (Rationalism) எனக் கொண்டு, அதன் மூலம் கடவுள், உலகம், மாயை மற்றும் அடிப்படை உண்மைகளை அறிவு முறையில் ஆராய்ந்தனர். தத்துவத்தில் பகுத்தறிவுக் கொள்கை என்பது அவர்களின் தத்துவ முறையையே குறிக்கும் என்றாலும், கி.பி 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் முக்கியமாக தேகாற்றே பிறந்த பிரெஞ்சு நாட்டில், மூட நம்பிக்கைகளை ஒழிக்கும் ஓர் இயக்கமாக உருவெடுத்த பகுத்தறிவு வாதத்திற்கும் இப் பெயர் பொருந்தும். அறிவின் வளர்ச்சிக்கு உதவுவது பகுத்தறிவும், அனுபவ ஞானமுமே என இவ்விரு தத்துவஞானிகளும் கருதினர். ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் தத்துவ விளக்கங்கள் பகுத்தறிவும், அனுபவமும் மக்களுக்கு மேம்பாட்டைக் கொடுக்கும் இருவழிகளாகும். அவற்றுள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது என்பதில் தத்துவஞானிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமையில் சிலர் பகுத்தறிவு வாதிகள் என்றும் (Rationalists) சிலர் புலனியல் வாதிகள் (Sesationalists) என்றும் கருதப் படலாயினர்.

சமூக தத்துவமானது மனிதனையும், அவனது இலட்சியத்தையும், சமூகத்தில் அவனது பங்கையும், அவனுக்குரிய மதிப்பையும் புலப்படுத்துவதாகும். இத் தத்துவம் மனிதனுடைய சுய எண்ணம், அவனுடைய ஆளுமை, அவனுடைய இலட்சியம் முதலியவற்றைக் கருதுகின்றது. திட்டமிடப்பட்டுள்ள சமூகத்தில் அவனை நல்லவனாக இயக்குவிக்கின்றது. சமூக விஞ்ஞானத்தினுடைய முக்கிய நோக்கம் முறையியலைப் பற்றியதாகும். நல்ல சமூகம் எவ்வாறு அமைய வேண்டும்? அதன் அமைப்பு முறை, நிலைக்கும் தன்மை முதலியவற்றைப் பற்றி சமூக விஞ்ஞானி கவனிப்பான். அதனோடு விஞ்ஞான முறைப்படி இவற்றைப் பரிசோதித்துப் பார்க்கவும் முற்படுவான். இவ்வகையில், சமூகவியல் ஆய்வின் இன்றியமையாதபடி முறைகளாக எண்ணக் கருவாக்கம் (Conceptnalization), எண்ணக்கரு விரைவிலக்கணம் (Concept definition) ஆகிய இரண்டும் கருதப் படுகின்றது.

(மிகுதி அடுத்த வாரம்)

# இந்திய சாம்ராச்சியவாதம்




அன்பரசு

**இந்தியப் பெருந் தேசியவாதம் இந்திய நாட்டுக்கு நண்பர்களை தேடிக்கொடுக்க வில்லை. இந்தியாவைச் சூழ உள்ள நாடுகள் எல்லாம் பகைமை பாராட்டுகின்றன. இதை இந்தியாவின் சாம்ராச்சியவாதம்பெற்ற பரிசாகக் கொள்ளலாம். பணிக்கர் வகுத்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இந்துமாகடல் ஊடா கச் செல்லும் கடற் பாதைகளை தனது கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் இந்திய முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. மாறாக படுவேகமாகச் செயற்படும் சீனா இந்துமாகடலில் தனது பிரசன்னத்தை வலுவாக்கி வருகின்றது.**

நாடுகளுக்கிடையிலான அரசியல், இராசதந்திர உறவுகள் கால அடிப்படையில் குறுந்தூர, இடைத்தூர, நெடுந்தூர இலக்குகள் என மூவகைப்படுகின்றன. ஆதிக்க சிந்தனையுள்ள பெருந் தரைப்பரப்பு நாடுகள் தமது பக்கம் உள்ள சிறிய நாடுகள், தீவுகள் என்பனவற்றைத் தமது கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் கொள்கையை வகுக்கின்றன. இங்கு புவியியல் காரணிகள் வெளியுறவுக்கொள்கையின் கருப்பொருளாக அமைகிறது. இந்தியத் தரைப்பரப்பு இலங்கைத்தீவிலும் பார்க்க 58 மடங்கு பெரியது. இந்திய மக்கள் தொகை இத்தீவு மக்கள் தொகையிலும் பார்க்க 53 மடங்கு கூடியது. இருநாடுகளையும் பிரிக்கும் நீரின் அகலம் 22 கடல் மைல் மாத்திரமே மேலெழுந்த வாரியாக ஆசிய வரைபடத்தை நோக்குவோர் இத்தீவை இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதியென்றுகொள்ள வாய்ப்புண்டு.

இந்தியச் சுதந்திரத்திற்கு முன்பே இலங்கைத்தீவை தமது நாட்டோடு இணைக்கும் நெடுந்தூர இலக்கை இந்தியத் தலைவர்கள் கொண்டிருந்தனர். 1940 களில் பெருந்தலைவர் இராஜகோபாலச்சாரியார், இலங்கைத் தீவு இந்தியாவுடன் ஒன்றிணைந்து ஒரு நாடாக வேண்டும் என்ற கோரிக்கையைப் பகிரங்கமாக விடுத்தார். இதற்கு சிங்கள மகாசபைத்தலைவர் எஸ். டபியூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா நான்கு ஆங்கிலச் சொற்கள்மூலம் காட்டமாகப் பதிலளித்தார். ‘அது விரும்பத்தகாதது, தேவைப்படாதது’ என்பது ‘NEITHER DESIRABLE NOR NECESSARY’ நான்கு ஆங்கிலச் சொற்களின் தமிழாக்கமாகும்.

மார்ச்சு 1940இல் நடந்த இந்தியத் தேசியக் காங்கிரசின் றாம்கார்நகர் மாநாட்டில் பங்குபற்றியபின் நாடு திரும்பிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வேறு விதமான கருத்தைக் கொண்டிருந்தார். அதேவருடம் அவர் ஜவஹர்லால் நேருவுக்கு எழுதிய கடிதத்தில் “சுதந்திரமடைந்த இந்தியாவும் சுதந்திரமடைந்த இலங்கையும் ஒரு கூட்டாட்சி அல்லது நெருக்கமான இணைப்பாவதைத் தான் விரும்புவதாக” தெரிவித்தார். அது தன்னையொரு காந்தியவாதியாக ஜெயவர்த்தனா காட்சிப்படுத்திய காலத்தில எழுதப்பட்ட கடிதம் எனலாம். இருப்பினும் எண்ணங்கள் நிழல் உருவம் பெற்றிருந்தன என்று கூறுவதில் தவறில்லை.

இந்திய கடலாதிக்கச் சிந்தனையின் பிதாமகரான கேரளத்தைச் சேர்ந்த கே.எம். பணிக்கர் 1944-45 இல் எழுதிய ஐந்தாவது வேதம் என்று போற்றப்படும் ‘இந்தியமாகடலின் கேந்திர உபாயப்பிரச்சினைகளும் இந்தியாவும் இந்துமாகடலும்’ என்ற நூல் இந்திய சாம்ராச்சியவாதத்தை மிகவும் தெளிவான கோட்பாட்டு வடிவமாகத் தருகிறது. ‘THE STRATEGIC PROBLEMS OF THE INDIAN OCEAN AND INDIA AND INDIAN OCEAN. K.M PANIKKAR 1944-45 என்ற நூல் இந்திய கடற்படையின் கையேடாகவும், இந்திய இராசதந்திரிகளின் பாடநூலாகவும் இடம்பெறுகின்றது.

இந்த நூல் கூறும் செய்திகள் மிகவும் சுருக்கமானவையாக இருப்பினும் இந்தியாவைப் புரிந்துகொள்வதற்கு நன்கு உதவுகின்றன. இந்தியாவின் பாதுகாப்பும், வர்த்தக நலனும் இந்து மாகடலைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் தங்கியுள்ளன. பதினாறாம் நூற்றாண்டில் கடலாதிக்கத்தை இழந்தபின்பு இந்தியா படிப்படியாகத் தனது சுதந்திரத்தை இழந்து அந்நியர் வசமாகியது. ஆகையால் இந்து மாகடல் இந்தியமாகடலாக இருத்தல் வேண்டும். இதை உறுதிப்படுத்துவதற்காக இந்து மாகடலின் தூர விளிம்பிலுள்ள சிங்கப்பூர், மொறீஷியஸ், ஏடன், சொக்கொத்திரா போன்ற வற்றை இந்தியா தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். பாதுகாப்பு மற்றும் அரசியல் நோக்கில் இலங்கை பர்மா போன்ற அயல் நாடுகளை இந்திய அரசியல் பரப்புக்கள் இணைக்க வேண்டும். இவையாவற்றையும் மிகவும் விரிவாகத் தனது அரசியல் சித்தாந்த நூலில் கூறும் பணிக்கர் இந்துமாகடலினுள் சீனாநுழைவதால் எழும் பிரச்சினைகள் பற்றியும் அன்றே எதிர்வு கூறியுள் ளார்.

இலங்கையின் தேசிய நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் வெளியார் தலையீட்டை பிரதமர் பண்டாரநாயக்கா கடுமையாக நிராகரித்தார். திருகோணமலை கடற்படைத் தளத்தை அவர் 1957 இல் பிரிட்டிஷ் கடற் படையிடமிருந்து மீளப் பெற்று தேசிய உடமையாக்கினார். அடுத்த வருடம் கட்டுநாயக்காவில் உள்ள பிரிட்டிஷ் விமானப் படைத் தளத்தையும் தேசிய உடமையாக்கினார். “இன்றுதான் எங்கள் சுதந்திரம் முழுவடிவம் பெற்றுள்ளது” என்று அதன் பின் அவர் கூறினார். 1949 இல் அதே பண்டாரநாயக்கா இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாவி சீத்தாராமையாவுடன் ஒரு மிகவும் சுவையான கருத்து மோதலில் ஈடுபட்டார். இந்தியச் சாம்ராச்சிய வாதத்திற்கும் அப்போது இலங்கை கடைப்பிடித்த தீவிர தன்னாட்சிக்கும் இடையிலான கருத்து மோதலாக அது இன்று பார்க்கப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டின் இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீத்தாராமையா ஏப்ரல் 1949 இல் பம்பாய் நகரில் இருந்து பகிரங்கமாக வெளியிட்ட “இலங்கை இந்தியாவுடன் கட்டாயமாக ஒன்றிணையவேண்டும்” என்ற கருத்து கொழும்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதுடில்லியில் டாக்டர் பட்டாபி சீத்தாராமையாவைச் சந்தித்த ஒரு கொழும்பு பத்திரிகை நிருபர் அவரிடம் இருந்து மேலதிக விளக்கங்களை கோரினார். “இன்றோ நாளையோ ஒரு உடன்படிக்கை மூலம் இந்தியாவின் அரசியல் உறுப்பாக இலங்கையை இணைப்பதற்கான கட்டாய நடவடிக்கையை” எடுக்கவேண்டிய அவசியத்தை சீத்தாராமையா உறுதிப்பட எடுத்துக் கூறினார். இதற்கு பண்டாரநாயக்கா அளித்த பதிலில் “டாக்டர் சீத்தாராமையா மனதில் உள்ள கீழ்ப்படிய வைக்கும் நோக்கை இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் ஏற்க மாட்டார்கள்” என்ற கருத்தை காணக்கூடியதாக இருக்கிறது. சிங்களப் பேரினவாதத்தின் நூல் வடிவம் எனப்படும் ‘கோயிலில் கிளர்ச்சி” (REVOLT IN THE TEMPLE) என்ற பௌத்தத்தின் பக்கம் 472 இல் இது பற்றிய மேலதிக விபரங்களை பார்க்கலாம்.

இந்தியப் பெருந்தேசியவாதம் இந்திய நாட்டுக்கு நண்பர்களை தேடிக்கொடுக்கவில்லை. இந்தியாவைச் சூழ உள்ள நாடுகள் எல்லாம் பகைமை பாராட்டுகின்றன. இதை இந்தியாவின் சாம்ராச்சியவாதம் பெற்ற பரிசாகக் கொள்ளலாம். பணிக்கர் வகுத்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இந்துமாகடல் ஊடாகச்செல்லும் கடற்பாதைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இந்திய முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. மாறாகப்படுவேகமாகச் செயற்படும் சீனா இந்துமாகடலில் தனது பிரசன்னத்தை வலுவாக்கிவருகின்றது. இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான் தீவுகளுக்கு அருகாமையிலுள்ள கொக்கோஸ் தீவுகளில் பர்மாவுடன் உடன்படிக்கைசெய்து ஒரு பாரிய கடற்தளத்தை சீனா உருவாக்கியுள்ளது. இங்கிருந்து மலாக்கா நீரிணையைக் கண்காணிக்கும் வசதியை சீனா பெற்றுள்ளது. பர்மாவின் தரைப் பாதைகள் ஊடாக வங்களா விரிகுடாவுக்குள் நுழையும் வசதியும் சீனாவுக்குக் கிடைத்துள்ளது. வங்காளதேசத்தின் சித்தாகொங் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் அங்குள்ள வசதிகளைப் பெருக்குவதற்கும் சீனா பேருதவி புரிந்துள்ளது.

அமெரிக்காவின் பென்ரகன் பாதுகாப்புத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கைப்படி மிகவும் விரிவான கடற்படை மற்றும் வர்த்தகத்துறை உதவிகளை வங்காள தேசத்திற்குச் சீனா வழங்கத் தொடங்கியுள்ளது. கம்போடியா நாட்டிற்கு கடற்படைப் பயிற்சியும் உபகரணங்களும் வழங்குவதற்கான பேச்சுக்களில் சீன-கம்போடிய அரசுகள் இப்போது ஈடுபடுகின்றன. ஏப்ரல் 06, 2005 ஆம் நாள் பாகிஸ்தான் கடலோரத்தில் குவதார் என்ற பெயரில் ஒரு பாரிய கடற்தளத்தை சீனா திறந் துள்ளது. இதற்கான மொத்தச் செலவு 248 மில்லியன் டொலர். இதில் 80 வீதம் சீனாவினால் வழங்கப் பட்டது. ஒரு“முத்து மாலைக்கு” ஒப்பான தொடர் கடற்தளங்களை இந்துமாகடலில் சீனா அமைத்து வருகிறது. ஈரான் நாட்டுடன் இதுபோன்ற ஒழுங்கைச் செய்யும் நிலை யில் சீனா உள்ளது. அரேபியன் கடலுக்குள் சீனா கால் பதித்து நெடுங்காலமாகிவிட்டது. அத்தோடு இந்துமாகடலில் ஆதிக்கம் செலுத்துவதற்கும் அது தயாராகி வருகிறது. டிசெம்பர் 2004ஆம் ஆண்டு தொடக்கம் அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை சீனா அறிமுகம் செய்துள்ளது.

அதேசமயத்தில் பாகிஸ்தானும் சிறிலங்காவும் மிகவும் நெருங்கிவருவதற்கான சான்றுகள் தென்படுகின்றன. பெப்ரவரி 2005இல் நடந்த கராச்சிநகர் இருநாட்டு ஒன்று கூடலில் இராணுவ, பொருளாதார ஒத்துழைப்புப் பற்றிப் பேசப்பட்டது. முன்னாள் சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெரிதிசில்வா அதில் பேசும் போது, முற்றாக இந்தியாவை இத் தேவைகளுக்காக நம்பியிருப்பதின் ஆபத்துகள்பற்றிக் குறிப்பிட்டார். பாகிஸ்தான் சார்பில் பேசிய ப.்.மிதா அஷ்றாப் கடந்த காலத்தில் சிறிலங்காவும் பாகிஸ்தானும் பல்வேறு தருணங்களில் ஒருவருக்கொருவர் உதவியுள் ளன என்று உதாரணம் காட்டி விளக்கினார்.

இந்தியாவின் நெடுந்தூர இலக்கு நோக்கிய வெளிவிவகாரக்கொள்கை படுதோல்வி கண்டுள்ளதை எம்மால் உணர முடிகிறது. புதிய சூழல் மற்றும் கால நேரத்திற்கு ஏற்ப தன்னை மாற்றியமைக்கும் திறன் இந்திய வெளிவிவகாரக் கொள்கைக்கு அறவே கிடையாது. பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு, இனங்களின் தேசிய எழுச்சி போன்ற புதியபரிமாணங்களை எதிர்கொள்ளமுடியாது அது தவிக்கின்றது.கடந்தகால வரலாற்றிலிருந்து இந்தியத் திட்டமிடல் அதிகாரிகள் பாடம்படித்ததாகத் தெரியவில்லை. இந்திய இராசதந்திரத்தின் எதிர்காலம் விவேகமற்றதாகத் தெரிகிறது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 10 . 06 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## சந்திரிகா எதைச் செய்வார்...?

வரலாற்றில் மிகமுக்கியமானதொரு காலகட்டத்தில் இலங்கைத்தீவு இப்போது நிற்கின்றது. இலங்கைத்தீவின் மீதான சர்வதேசத்தின் பார்வை என்றுமில்லாத அளவுக்கு திரும்பியுள்ளது. இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா அந்த வரலாற்றுக் காலகட்டத்தில் நிற்கும் அரச தலைவராகவும் காணப்படுகிறார்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் முன் இரண்டு பிரதானவிடயங்கள் காத்திருக்கின்றன.

ஒன்று- சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பிரதேசத்திற்கான பொதுக்கட்டமைப்பு விடயம்.

இரண்டாவது- சிங்களத் தேசத்தில் அரசுக்கு எதிராக இன்று தோன்றியுள்ள உள்ளேயும் வெளியேயுமான நெருக்கடி.

இந்த இரண்டு விடயங்களையும் புறந்தள்ளிவிட முடியாத நிலையில் துணிந்து முடிவுகளை எடுக்க வேண்டிய ஒரு அரச தலைவராக சனாதிபதி சந்திரிகா காணப்படுகிறார்.

இதில் சனாதிபதி சந்திரிகா இன்று கிளம்பியிருக்கும் பௌத்த பேரினவாதத்தின் உச்ச எதிர்ப்பை முறியடிக்கப்போகிறாரா? அல்லது அதன் முன் மண்டியிடப்போகிறாரா என்பது எதிர்வரும் வாரங்களில் தெளிவுபடப்போகிறது.

இதன்மூலம் எந்தவொரு அரசியல் கட்சியாயினும் சரி அரசியல் தலைவராக இருந்தாலும் சரி பௌத்த பேரினவாத எதிர்ப்பிற்கு துணிந்து முகம்கொடுத்து எடுக்கும் முடிவுகளில்தான் இலங்கைத்தீவில் நிரந்தர சமாதானம் என்பது சாத்தியமாகும்.

ஆனால் இந்த பௌத்த பேரினவாதத்துக்குள் அரச நலனும் கட்சி நலனும், எதிர்கால அரசியல் இலாபங்களும் புதைந்துகிடப்பதால் இதுவரை இலங்கைத்தீவில் பௌத்தப்பேரினவாத எதிர்ப்பின் முன் மண்டியிட்ட அரச தலைவர்களே காணப்படுகின்றனர்.

கட்சி நலனையும் அரசியல் இலாபங்களையும் பதவிகளையும்விட தீர்க்கப்படவேண்டிய தமிழ் மக்களின் உரிமைகள் என்பதோ, வழங்கவேண்டிய உதவிகள் என்பதோ இந்த அரச தலைவர்களுக்கு இரண்டாம்பட்சமாகவே இருந்துவருகிறது.

இந்தநிலையில் பலநெருக்கடிகளால் சூழப்பட்டிருக்கும் சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் கணக்கு பலகோணங்களில் திரும்பக்கூடிய வாய்ப்புகளே அதிகம் காணப்படுகின்றன.

பண்டாரநாயக்க குடும்பத்தின் முதுசமாக இருந்துவரும் சுதந்திரக்கட்சியின் தலைமையைக் காப்பாற்ற வேண்டியவராகவும், பதவிக்காலத்தின் ஆயுள் முடிவுறும் தறுவாயை நெருங்கிவருவதால் பதவியைக் காப்பாற்றுவதும் தற்போது இருக்கும் ஆட்சியைக் காப்பாற்றுவதும், என பலநெருக்கடிகள் அவர் முன் இருக்கின்றன.

இந்த நிலையில் பொருளியல் கோட்பாட்டில் வரும் ஒன்றைப்பெறுவதற்காக இன்னொன்றை இழக்கும் அமையச் செலவாகச் சனாதிபதி சந்திரிகா எதை இழந்து எதை உருவாக்கப்போகிறார் என்பதே இன்று எதிர்பார்க்கப்படும் முக்கியவிடயமாக உள்ளது.

அந்தவகையில் சனாதிபதி சந்திரிகா தன்னுடைய இரண்டு பதவிக் காலங்களில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் குறுங்கால நலன்களைவிட நீண்டகால நலனுக்காகவே நிச்சயம் செயற்படப்போகிறார்.

அந்த நீண்டகால நலன் சனாதிபதிக்கு எது என்பதை விரைவில் தெரிந்துகொள்ளலாம்.

அது நிச்சயம் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலானதாக இருக்கப்போவதில்லை என்பது மிகத்தெளிவானது.

வேண்டுமாயின் தமிழ் மக்களின் நலனுக்கூடாக அவர் எத்தகைய நலனைப்பெற்றுக்கொள்ளலாம் என்பதன் அடிப்படையில் காய்களை நகர்த்துவார்.

இதனையே சனாதிபதி சந்திரிகா இந்த வரலாற்று முக்கியத்துவம்மிக்க காலத்தில் செய்யப்போகிறார்.

# இலங்கைத் தீவு எந்தத்திசையில்...


இலங்கைத்தீவு இப்போது எங்கே சென்றுகொண்டிருக்கிறது. என்பது அதிகமாக தெளிவாகி விட்டது. இப்போது சந்திரிகா காட்டும் பொதுக்கட்டமைப்புப் பற்றிய மாயைகள் அதனை இடையிடையே மூடினாலும் பாதை தெளிவாகச் சுட்டப்பட்டு விட்டது.

விடுதலைப் புலிகள் மீது எப்போது சிறிலங்கா அரச படைகள் தாக்குதலை நடத்தத் தொடங்கினவோ அதற்கு கருணா போன்றவர்களின் பெயரைப் பயன்படுத்தத் தொடங்கினவோ- அப்போதே அதற்கான திசை காட்டப்பட்டுவிட்டது.

கிழக்கிலும் அதனைத் தொடர்ந்து கொழும்பிலும் இதனை ஒரு நிழல் யுத்தமாக சிறிலங்காப் படைகளும் புலனாய்வு அமைப்பும் கொண்டுசென்றன. அது இப்போது யாழ்ப்பாணம் வரை வந்து விட்டது. முன்னதாக வவுனியாவிற்கும் அதன் நடவடிக்கைக் களம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

இவற்றை எல்லாம் சிறிலங்காப் படைகள் போர் நிறுத்த மீறல்கள் என்று தான் மேற்கொள்ளும் தாக்குதல் நிலையில் நின்று ஒப்புக் கொண்டதில்லை. படைத்தரப்பினர் எவராவது கொல்லப்படும்போது மட்டும் அவ்வாறு கூறப்படுவது வழக்கமாகும்.





ஆனால் இப்போது போர் நிறுத்த உடன்படிக்கை ஒரு புறமாக வைக்கப்பட்டு காரியங்கள் நடப்பது போலவே தோன்றுகின்றது. ஏனெனில், ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பித்தபோது இடைவிலகிய வடக்கு கிழக்கு மீதான, வடக்கு-கிழக்கு மக்கள் மீதான ஒடுக்குமுறை வடிவங்கள் திரும்பவும் கட்டவிழ்ந்து விட்டன.

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கட்டுமானப் பொருட்கள் உட்பட பலவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அவற்றை குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொண்டு செல்ல இயலாதுள்ளது. அளவுப் பிரமாணத் துக்கு மேற்பட்டவற்றுக்கு அரச அதிகாரிகளின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் இல்லாதவாறு கிழக்கில் ஏன் அவசரமாக இக் கட்டுப்பாடுகளை படைத்தரப்பு விதித்துள்ளது என்பதே- கேள்வியாகும்? புரிந்துணர்வு உடன்பாட்டில் அவற்றுக்கு உரிமை உண்டு என தனது தடைகளுக்கு நியாயம் கற்பிக்கின்றது.

அப்படியானால் இதுவரை காலமும் அனுமதிக்கப்பட்டது தடுக்கப்படுகின்றது என்றால், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் இடமில்லாமல் போய்விட்டது என்றுதான் அர்த்தப்பட வேண்டும். படைகள் போரை நோக்கி திருப்பப் படுகின்றன என்பதற்கான எடுகோளாகவே இதனைக்கொள்ள வேண்டியுள்ளது.

சமகாலத்தில் திருகோணமலை சம்பூரில் விடுதலைப் புலிகள் விமான ஓடுதளம் ஒன்றை அமைத்து வருவதாக படைத்தரப்பு கூறும் குற்றச்சாட்டு இதற்குத் துணையாக சோடிக்கப்பட்ட கதையாகவே உள்ளது. கட்டுமானப் பொருட்களை கொண்டு சென்று விமானத்தளம் அமைப்பதை தடுப்பதற்காகவே அவை மட்டுப்படுத்தப்பட்டதாக காரணம் கூறப்பட்டுள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டி விமான ஓடுதளம் எதுவும் அமைக்கப்படவில்லை என்று திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் மறுத்திருக்கிறார்.

பொருளாதாரக் கட்டுப்பாடுகளை நியாயப்படுத்தவே இந்த விவகாரம் உருவாக்கப்பட்டிருப்பதாக் கூறியிருக்கின்றார்.

அதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட்டு சந்தேகங்களைத் தீர்த்துக கொள்ளலாம் என்றும் கூறியிருக்கின்றார்.

ஆனால், இன்னும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விமானத்தளம் அமைக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படும் சம்பூருக்குச் செல்லவில்லை. சிறிலங்கா படையினர் விதித்த பொருளாதாரத் தடையினை நீக்கவும் இல்லை.

இது ஒன்றே படையினர் எதனை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றது.

அடுத்து முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது கொழும்பில் கடந்த நாட்களில் இடம் பெறும் படுகொலைகளாகும். குறிப்பாக வடக்கு-கிழக்கில் இருந்து கொழும்புக்குச் செல்லும் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். எந்த இராணுவ, அரசியல் நிலைப்பாடும் இல்லாதவர்களை கொழும்பில் வைத்துக் கொல்வதன்மூலம் சிறிலங்கா படைப்புலனாய்வு அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறது.

சமாதானத்துக்கான காலத்தில் இடம்பெற்ற பயமற்ற, கட்டுப்பாடற்ற தென்னிலங்கைக்கான தமிழர்களின் போக்குவரத்து முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றது. தமிழ் இளைஞர்களை கொழும்புக்கு வரக் கூடாதென்ற எச்சரிக்கை தான் இதன் மூலம் விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதனை உறுதிப்படுத்தும் முகமாக தமிழர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பொலிசார், படையினர் வீதிகளில் ரோந்தில் ஈடுபட வீடுகளுள் புகுந்து சோதனையிடத் தொடங்கியுள்ளனர். இதனை வழமை போல கொழும்பில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கை என்று நியாயப்படுத்த இடமுண்டு.

ஆனால் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்படுபவர்கள் ஆயுதங்களோடு நடமாடுபவர்களா அல்லது பதுக்கி வைத்திருப்பவர்களா என்றால் இல்லை என்பதே விடை.

வடக்கு-கிழக்கிலும் தென்னிலங்கையில் தமிழர் வாழும் இடங்களிலும் நடைபெறும் இக்கெடுபிடிகள் கடந்த செவ்வாயன்று கிளிநொச்சியில் எதிரொலித்திருக்கின்றது. நோர்வேத் தூதுவர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோருடனான சந்திப்பின் பின்னர் அரசியல் துறை பொறுப்பாளர் கூறியவை முக்கியமானவை.

போர் நிறுத்த உடன்பாட்டுக்கும் இதுவரைகால இயல்பான நடைமுறைக்கும் முரணாக சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மாற்றமடையாவிடின் போர் நிறுத்தத்துக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்ற சாரப்பட சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளுங்கட்சிக்குள் எத்தனை முரண்பாடுகள் இருந்தபோதிலும் கூட போரைத் தூண்டுவதற்கான நடவடிக்கைகள் மட்டும் சரியான முறையில் இடம்பெறும் நிலையில்- தென்னிலங்கையின் கைகளில்தான் கால நிர்ணயம் இருக்கின்றது. ●

**ஞாபகன்**

**வடக்கு-கிழக்கில் இருந்து கொழும்புக்குச் செல்லும் தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்கள். எந்த இராணுவ, அரசியல் நிலைப்பாடும் இல்லாதவர்களை கொழும்பில் வைத்துக் கொல்வதன் மூலம் சிறிலங்கா படைப் புலனாய்வு அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை பிரகடனப்படுத்தியிருக்கின்றது.**

# சுதந்திரபுரம் படுகொலை...

**இன்றையஇந்நாள்தமிழ் மக்கள் வரலாற்றில் ஒரு முக்கியமான நாளாகவே கொள்ளப்படுகின்றது. அதாவது 1956 ஆம் ஆண்டு இதே நாள் 150 இற்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழ் மக்கள் அம்பாறையில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.**

கடந்த காலங்களில் சிறிலங்காப் படையினர் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட பாரிய படைநடவடிக்கைகளில் தோல்வியைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழ் மக்களை படுகொலை செய்து வருவது வழமையான ஒன்றாகவே இருந்துவந்தது. அதன் தொடர்ச்சியாகவே 1997 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் தொடர்ச்சியான தோல்வியை சந்தித்த ஒரு கட்டத்தில்தான் அதாவது 1998.06.10. அன்று இதே நாள் முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் 25 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்தனர். இப்படுகொலையின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.



பௌத்த பீடத்தின் ஆசீர்வாதத்துடன், நவீன சப்புமல் குமாரயா, என அழைக்கப்பட்ட ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கை சிறிலங்காவின் முப்படைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, என்றும் இல்லாதவாறான மனிதவலுவுடன் சகல வளங்களும் இப்படை நடவடிக்கைக்கென திருப்பப்பட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாரிய படை நடவடிக்கை சிறிலங்கா வரலாற்றில் மிக நீண்ட ஒரு போர் நடவடிக்கையாக அமைந்ததே ஒழிய அதனுடைய இலக்கையோ அல்லது வெற்றிகளையோ பெறவில்லை. இதனை பொறுத்துக்கொள்ள முடியாத சிறிலங்கா அரசு முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயக் கிராமங்களில் ஒன்றான சுதந்திரபுரம் பகுதியை இலக்குவைத்து 1998 ஆம் ஆண்டு இதேநாள் காலை ஒன்பது மணிக்கு சிறிலங்கா விமானப்படையினரின் கிபிர் குண்டுவீச்சு விமானங்களும் தமது நடவடிக்கைகளை அப்பாவி மக்கள் மீது நடாத்திக் கொண்டிருக்க, இப்பகுதியில் இருந்து காயப்பட்டவர்களையும் ஏனைய மக்களையும் மீட்டுக் கொள்ளமுடியாத அளவிற்கு பரந்தன் புதுக்குடியிருப்புச் சாலையை மையமாக வைத்து வன்னியில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினர் எறிகணைகளை ஏவி மீட்புப்பணிகளை மேற்கொள்ளமுடியாத அளவிற்குத் தடுத்து நிறுத்தினர். இத்தாக்குதல் மூலம் 25 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் ஐம்பதிற்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.



## எத்தனை இடர்பட்டோம் எவ்வளவு துயர் கண்டோம்

இந்த கோரச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகள் அவர்களது காணிக்குள்ளேயே கண்டதுண்டமாகக் காணப்பட்டனர். இந்தக் குழந்தைகளின் தந்தையார் கண்டகாட்சி இன்றும் மனதை நெருடுகின்றது.

அதாவது தோட்ட வேலைக்காகச் சென்றிருந்த தந்தை வெடிச்சத்தம் கேட்டு தனது வீட்டிற்கு ஓடி வந்தபோது தனது குழந்தைகளின் உடல்கள் துண்டு துண்டாக்கப்பட்டு சிதறிக்கிடப்பதையும் தனது குடிசை இருந்த இடத்தை காண முடியாதநிலையில் முற்றத்திலிருந்த மாமரம் தரையில் வீழ்ந்து கிடந்தது. அதனுள் ஒரு குழந்தையினே அனுங்கல் சத்தம் கேட்டது. உடனே மாமரக் கிளையை பிடித்துத் தனது பிள்ளையை தூக்கியபோது அந்தக் குழந்தையின் உடல் கண்கொள்ளாதவாறு கிழிக்கப்பட்டு தசைகள் தொங்கிய வண்ணம் காணப்பட்டதாகவும் தனது பிள்ளையை தூக்கிய போது கையில் எலும்புதான் தட்டுப்பட்டதாகவும் கூறிய தந்தை ஏனைய குழந்தைகளும் இரத்த வெள்ளத்தில் கைகள் வேறு கால்கள் வேறாகக் காணப்பட்டதாகவும் அந்தத் தந்தை அன்று கூறிய அந்த நினைவை எவர் நம்பார்.

**தமிழரின் பலம் உலகறியும் வகையில் சிறிலங்கா அரசிற்கு எதிராக 1990 ஆம் ஆண்டு இதேநாள் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரண்டாம் கட்ட ஈழப்போர் சிறிலங்கா அரசு நடத்திய படுகொலைகளின் எதிரொலியாகவே வெடித்தது.**

பள்ளி நோக்கி தமது எதிர்காலத்தை மேம்படுத்தச் சென்ற பாடசாலை மாணவர்களும் அன்றாடத்தொழில் கடமைகளுக்காகச் சென்றவர்களும் என இப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டனர். இன்றைய இந்நாள் தமிழ் மக்கள் வரலாற்றில் ஒரு முக்கியமானநாளாகவே கொள்ளப்படுகின்றது. அதாவது 1956 ஆம் ஆண்டு இதே நாள் 150 இற்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழ் மக்கள் அம்பாறையில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

**அதன் தொடர்ச்சியாக 1986 ஆம் ஆண்டு இதேநாள் யாழ் மண்டைதீவுப் பகுதி மீனவர்கள் 31 பேர் குருநகர் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவற்றின் தொடர்ச்சியாக 1998 ஆம் ஆண்டு இதே நாள் இச் சுதந்திரபுரம் படுகொலை மேற்கொள்ளப்பட்டது.**

அதன் தொடர்ச்சியாக 1986 ஆம் ஆண்டு இதே நாள் யாழ் மண்டைதீவுப் பகுதி மீனவர்கள் 31 பேர் குருநகர் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவற்றின் தொடர்ச்சியாக 1998 ஆம் ஆண்டு இதேநாள் இச் சுதந்திரபுரம் படுகொலை மேற்கொள்ளப்பட்டது.

தமிழரின் பலம் உலகறியும் வகையில் சிறிலங்கா அரசிற்கு எதிராக 1990 ஆம் ஆண்டு இதேநாள் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரண்டாம் கட்ட ஈழப்போர் சிறிலங்கா அரசு நடத்திய படுகொலைகளின் எதிரொலியாகவே வெடித்தது. மனித உரிமை மீறல்களை மக்களின் மீது மேற்கொள்ளப்படுகின்ற போதே போராட்டங்கள் வெடித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அதே போன்றுதான் சிறிலங்கா அரசும் அதன் அடிவருடிகளும், தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை தொடர்ச்சியாக மேற்கொண்ட போதுதான் இவ்விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட அரசின் கொடுமைகளை எதிர்த்து ஆரம்பிக்கப் பட்ட போராட்டம் இன்று உலக அளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டுக்கொண்டு செல்கின்றது. இவ்வாறான படுகொலைகளின் எதிரொலிகள் இன்றைய மக்கள் போராட்டத்தின் எழுச்சிக்கு வித்திட்டுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

**சு. பாஸ்கரன்**




பஸ்ஸில் பயணித்த இரு இளைஞர்களை வெளியே இழுத்துச் சுட்டுக்கொலை- செய்தி-

*-இனந்தெரியாத நபர்கள்-*

பத்திரிகையாளர் டி.சிவராம் கடத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

*இனந்தெரியாத நபர்கள்*

திருகோணமலையில் நள்ளிரவில் நகரமத்தியில் புத்தர்சிலை வைக்கப் பட்டது.

*இனந்தெரியாத நபர்கள்*

பட்டப்பகலில் புலனாய்வுத்துறை அதிகாரி கொழும்பில் சுட்டுக்கொலை.

*இனந்தெரியாத நபர்கள்*

பொதுக்கட்டமைப்பு புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கைக்கு வழிவிட்டுவிடும்.

*இனவாதம் தெரியாத நபர்கள்*

ஓமந்தையில் கோவில் ஐயரின் காணியில் புத்தர்சிலை வைக்கப்பட்டது.

*இன ஒற்றுமை தெரிந்தநபர்.*

## இது எப்படி சாத்தியம்

காத்திருப்பு... ஏமாற்றம்.. சலிப்பு... இவை விரக்தியை ஏற்டுத்தலாம்.

ஆனால் இதற்கு எதிர்மாறாக நீழும் நிகழ்வுகளும் உண்டு. இந்த காத்திருப்பாலும்.... ஏமாற்றத்தாலும், சலிப்பினாலும் ஏற்படும் விரக்தி ஏற்படுத்தும் இயலாமைக்குள் மூழ்காமல் நிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் அது தமிழ் மக்கள்தான்.

கடந்த மூன்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட கால்த்தில் சமாதானத்திற்காக காத்திருந்து ஏமாற்றமடைந்து... சலிப்பாகிய போதும் விரத்தியாகாமல் இயலாமைக்குள் மூழ்காமல் அடுத்த முடிவை நோக்கி சந்திக்கும் மனத்துணிவோடு காத்திருக்கிறார்கள்.

இது எப்படி சாத்தியம் உதிக்கும் சூரியனின் சுடர்படும் மேனியராய் நிலத்தில் நிமிர... தமிழருக்கு வழிகாட்டும் தமிழர் சூரியனின் பார்வை திசைகாட்டுவதால்.

# களமாடிய புலிமகள்

எறிகணைகளின் வெடிப்புகளுக்குள்ளும் ரவை சிதறல்களுக்குள்ளும் அந்தப் போராளியின் கணீரென்ற குரல் இடைவிடாது ஒலித்துக்கொண்டே இருக்கும்.

அண்ணாக்கள் ஓடிவாங்கோ...

அண்ணாக்கள் வேகமாக... ஓடிவாங்கோ. வேகமா ஓடினாத்தான் முழுமையாய் எங்களின்ர வேலையைச் செய்யலாம்.

அண்ணாக்கள் ஓடிவாங்கோ என்ற "போர் ஒலியுடன்"களத்திற்குள் வேகமாக ஓடி, ஓடி தனக்கென தரப்பட்ட இலக்கை அடையும்வரை ஓயாது குரல் கொடுத்து வேகம், வேகமென சொல்வதோடு நின்றுவிடாமல், தனது களப்பணியினை வேகமுடன் செய்யும் அந்தப் போராளியின் சண்டைக்களச் செயற்பாடுகள் அனைத்தும் வேகமானதாக இருந்தமையினால் பல சமர்களை நாம் வென்றிருக்கிறோம்.

துடி துடிப்பும் வேகமுமான போராளி வீரவேங்கை லெப்.திலகா. இந்தப் போராளியின் உணர்வுகளில் ஈழப்போராட்டத்தின் பற்றும், உறுதியும் எப்போதுமே காணப்பட்டன. அந்த விடுதலைப்போராளி தாயக மீட்புக்காய் களமாடிய சண்டைக்களங்கள் பெரும்பாலும் வித்தியாசமான வேகத்தையும் புதுவித உத்வேகத்தையும் கொண்டிருக்கும்.

தாயக விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் உண்மைத்தன்மையையும் உணர்ந்த அந்தப்போராளி போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டு அதன் பின்னர் தாயக விடுதலைக்காய் ஓயாமல் உழைக்கவேண்டுமென்று பிடிவாதமாய் செயலில் இறங்கினாள். போராட்டப் பணிக்காக தன்னை கிட்டு, குட்டிசிறி ஏவுகருவிப் படையணியில் இணைத்துக்கொண்டாள். அதிலும் தான் முன்னிலை நோக்குநராக செயற்படத் தொடங்கினாள்.

வீரவேங்கை லெப்.திலகா சண்டைக்கு வருகிறாள் என்றால் களம் விரையும் பெரும்பாலான போராளிகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். காரணம் அந்தளவு உற்சாகத்துடன் செயற்படுவாள். இந்தப் போராளியின் அபார செயற்பாடுகளைப் பற்றி அவளோடு சேர்ந்து களம்சென்ற போராளிகள் கதைகதையாகச் சொல்ல கேள்விப்பட்டிருந்தாலும் நாம் நேரடியாகப் பார்த்த அவளது இறுதி நாள் சண்டை என்றும் நினைவழியாமல் நிலைத்திருக்கிறது.

ஓயாத அலைகள் 03இன் தொடர்வெற்றி எதிரியை திணறி ஓடச்செய்தது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த சிங்கள இராணுவம் என்ன செய்வதென்று தெரியாமல் சிக்கித்தவித்தது. யாழ் குடாநாட்டிலுள்ள இராணுவத்தினரின் நிலை பா வேறு. கையை உயர்த்தி சரணடைவதா அல்லது கடலில் பாய்ந்து தப்பிச்செல்வதா என்ற நிலையில் தொண்டைக்குள் பொறுத்த முள்ளாய் சிக்கித்தவித்தனர். தமிழ் மண்ணை காவுகொள்ள வந்த சிங்கள வெறியர்களின் நிலை மிக மோசமானதாகிவிட்டதனால் யாழ்.குடாநாட்டிலுள்ள சிங்கள வெறியர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கை யாழ்.நாவற்குழியில் அரங்கேறியது.

ஓயாத அலைகள் சமரின் தொடர்ச்சி நாவற்குழியில் ஆரம்பித்தபோது லெப்.திலகாவும் அந்தச் சண்டைக்கென உள்நுழைகிறாள். பிரதான அணிகள் எதிரியின் காவலரணை உடைத்தெறிந்து உள்நுழைகின்ற போதே லெப். திலகாவும் வேகமாய் செயலில் இறங்குகிறாள். திலகாவின் ஒருங்கிணைப்பில் எதிரி நிலைகள் மீது எறிகணைகள் துல்லியமாக வீழ்ந்து வெடிக்கின்றன. எதிரியின் நெஞ்சில் வீழ்ந்த அடி, இந்தச்சண்டை என்பதனால் எதிரியும் தொடர்ந்து சண்டை செய்ய முயற்சி செய்கிறான் என்றாலும் தொடர்ந்து சண்டை செய்யவேண்டிய கட்டாயத் தேவையுடன் நாம் சண்டையை செய்தோம்.

நேரடியாக சண்டைக்கான கட்டளையை வழங்கிய மாவீரன் லெப்.கேணல் இராஜசிங்கத்தின் கட்டளை தொடர்ந்துகொண்டே இருந்தது. அதில் முக்கியமாக லெப். திலகாவின் பெயர் உச்சரிக்கப்பட்டது.

திலகா வேகமாப் போடுங்கோ.

**க.மிரேசு**

திலகா ரீமை வேகமா கூட்டிக்கொண்டு தந்த பிச்சுக்கு போங்கோ, திலகா உங்கட கையிலதான் எல்லாம் இருக்கு என்று தொலைத்தொடர்பில் அறிவித்துக்கொண்டே இருந்தார். லெப். திலகாவின் குரல் ஒருமுறை மிகத் திடமாக ஒலித்தது. ரோமியோ... பிரச்சினை இல்லை நான் அணிகளை கொண்டுபோய் சேர்க்கிறன்.

என்று சொன்ன உடனேயே இன்னும் இன்னும் வேகமாக நகரத் தொடங்கினாள். திலகாவின் வேகத்தோடு ஒத்து அணிகளும் நகர்ந்தன. பொழுது விடிவதற்குள் எதிரியின் பல காவலரண்களை கைப்பற்றிப் பெரிய பிரதேசத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தபோது, எதிரியின் 81மி.மீ எறிகணை ஏவுதள முகாம் ஒன்று எமக்கு சவாலாக எழுந்தது. எதிரி 11ஏவுகருவிகளை வைத்து எமது அணிமீது மழைபோல் எறிகணைகளை பொழிந்தான். லெப்.திலகா ஒரு பக்கமாகவும் ஏனைய முன்னிலை நோக்குநர்கள் மறுபக்கமாகவும் இருந்து எமது 120மி.மீ எறிகணைகளையும் ஆட்லறி எறிகணைகளையும் எதிரி நிலைகள் மீது பொழியத் தொடங்கினர்.

லெப். திலகாவின் ஒருங்கிணைப்பில் துல்லியமாக ஏவப்பட்ட எறிகணைகள் எதிரி நிலைகளை துவம்சம் செய்ய எதிரி நிலைதடுமாறினான். சண்டை அணிகளும் தொடர்ந்து தாக்குதலை நடத்த, எதிரி தனது 11ஏவுகருவிகளையும் கைவிட்டு இறந்த சகாக்களின் சடலங்களையும் கைவிட்டு ஓடத்தொடங்கினான். எதிரி பின்வாங்கி ஓடிய பிறகு நாம் அந்த முகாமை சென்று பார்த்தபோதுதான் எங்களது எறிகணைகள் துல்லியமாக எதிரி நிலைகள் மீது வீழ்ந்து வெடித்து எதிரிக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியதை பார்க்கமுடிந்தது. எதிரிக்கு இந்தளவு சேதத்தை ஏற்படுத்தியமைக்குக் காரணம் லெப்.திலகாவேயாகும். அவளது எறிகணை ஒப்புநோக்கும் திறமை, எறிகணைகளை வேகமுடன் சீர்செய்து அடிக்கும் ஆற்றல், தொடர்பாடலில் தெளிவாகவும், திடமாகவும் உரையாடும் தன்மை இவையே பல சண்டைகளை வெற்றிபெறச் செய்தன.

லெப். திலகாவின் பல சண்டைகளை அவளோடு கூட இருந்த போராளிகள் நினைவு கூர்ந்தாலும் குறிப்பாகக் குடாரப்பு தரை இறக்கத்தோடு சேர்ந்து இத்தாவில் சண்டை நடந்தபோது எமது அணிகள் முகாவிலில் ஒரு ஊடறுப்புத் தாக்குதலை செய்தது. அதில் மாவீரன் லெப்.கேணல் சேகருடன் லெப்.திலகாவும் முன்நோக்குநராக உள்நுழைந்தாள்.

டெல்டா 01/டெல்டா 02 என சங்கேத பெயரிட்ட பாதையூடாக உள்நுழைந்த திலகா, சண்டை மிக மோசமாகியபோது எதிரியின் சுடுகருவி ஒன்றை எடுத்து சண்டை பிடிக்கத்தொடங்கினாள். அத்தோடு தனது முன்நோக்குநர் வேலையையும் செய்து எதிரியை நோக்கி எறிகணைகளை அடித்து எதிரிக்குச் சேதத்தை ஏற்படுத்தினாள்.

தனக்குத் தரப்படும் வேலையான அணிகளை உள்கொண்டுசெல்லும் வேலையை மிகவும் சிரத்தையுடன் செய்துமுடிப்பாள். "ஓடிவாங்கோ... வேகமா ஓடிவாங்கோ அணியை வேகமா உள்ளுக்குக் கொண்டு போக வேண்டும் என்று சொல்லிச் சொல்லி தன்னுடன் தரப்பட்ட அணிகளை வேகமுடன் உள்நகர்த்துவதில் நல்ல திறமைசாலி. தனது படையணியை வளர்க்கவேண்டும் என்று மிகுந்த ஆர்வம்கொண்ட அந்தப் போராளி அதற்காகவே உழைத்தவள்.

சிலவேளைகளில் தான் செல்லும் பாதையில் வெற்றி கிடைக்காவிட்டால் அதை நினைத்து நினைத்து அழுவதுண்டு. தன்னை நம்பி விட்டிருந்தும் தான் சென்ற பாதையில் இப்படியாகிவிட்டதே என்றுதான் அழுது புலம்புவாள். அடுத்த சண்டையில் எப்படியும் வென்றுகாட்டவேண்டும். செயலில் முன்னின்று எதிரிக்கு இழப்பை ஏற்படுத்தவேண்டும் என்று மனதில் நினைத்துச் செயல்பட்டு பிறிதொரு சண்டையில் வென்றுகாட்டிய வீராங்கனை லெப்.திலகா.

முகாவில் சண்டையில் லெப். திலகா செய்த செயல் இப்போதும் கண்முன்னால் விரிந்துகிடக்கிறது என்று முகாவில் காவலரண் தொகுதியில் ஜெயந்தன் படையணியின் தளபதியாக இருந்த உமாராம் அவர்கள் வீரத்துடன் நினைவு கூருவார். லெப்.திலகாவின் திறமையை சகல போராளிகளும் பாராட்டுவதுண்டு. சில வேளைகளில் அவளது திறமையே அவளை காப்பாற்றுவதாக அமையும். ஏற்கனவே 04 அலை உணரிகளை உடைத்தவள். 2001ஆம் ஆண்டு 01ஆம் மாதம் 16ஆம் திகதி சண்டைக்கென வெளிக்கிட்டபோது தளபதி பானு அவர்கள் திலகாவிடம் ஐந்தாவது அலை உணரியை கொடுத்துவிட்டு இதையென்றாலும் கவனமாக பாதுகாக்கச்சொல்ல அதையும் உடைத்துவிட்டே வருகிறாள். ஆனால் அந்தச்சண்டையிலும் நன்றாகச் செயற்பட்டதனால் தப்பிவிடுகிறாள்.

லெப். திலகாவின் இறுதி நாள் சண்டையிலும் அவளது அலை உணரி உடைகிறது. என்றாலும் தொடர்புடனேயே நின்று எறிகணைகளை ஒழுங்கமைக்கிறாள்.

யாழ்.மண்ணை கைப்பற்றும் நோக்குடன் நாவற்குழி ஊடாக ஊடறுத்து நெடுங்குளம் சந்திவரை கைப்பற்றியிருந்த பகுதியை மீண்டும் ஆக்கிரமிப்புச் செய்ய சிங்களம் முற்படுகின்றது. 2001ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 10ஆம் திகதி காலை எமது நிலையை ஊடறுத்து உடைத்து உள்நுழைய எதிரி முற்படுகிறான். சண்டை தொடங்கி உக்கிரமாக நடைபெறுகிறது. அணிகள் இடை விடாது தாக்கிக்கொண்டிருக்க, திலகாதான் எறிகணைகளை ஒழுங்கமைக்கிறாள்.

*(21 ஆம் பக்கம் பார்க்க)*



# இனவாதிகளிற்கே பாதிப்பு



சமாதானத்துக்கு எதிரான இனவாதக் கூச்சல்கள் வலுவடைந்து கொண்டே செல்கின்றன. அதிலும் குறிப்பாக நாடாளுமன்றத்தில் 39 உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பியும் 9 உறுப்பினர்களைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமயவுமாக மொத்தம் 48 உறுப்பினர்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களாக இருக்கின்றனர். அதாவது 225 பேர்கொண்ட சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் சுமார் காற்பங்கினர் வெளிப்படையாகச் சமாதான நடவடிக்கைகளை எதிர்க்கின்றனர்.

ஏனையோரிலும் சுமார் 15 வீதமானோர் தான் வெளிப்படையாக சமாதான முயற்சிகளை ஆதரிப்போராகவும் சமாதான முயற்சிகளில் நேர்மையாக நடந்துகொள்ளவேண்டும் என்பதில் யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

இப்பொழுது சமாதான முயற்சிகளுக்கு உந்துதலாக அமையக்கூடும் என நம்பப் படும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் 10 வீதமானோர்களே எதிர்ப்புத் தெரிவிப்பதாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிக்கிறார். ஆனால் அவரது அரசாங்கத்தில் அங்கம் வகிப்போரில் சுமார் 40 வீதமானோர் பொதுக்கட்டமைப்புக்கு வெளிப்படையான எதிர்ப்பாளர்களாகவேயுள்ளனர்.

இதனைவிட அவரது கட்சியினரின் எதிர்ப்பும் இருப்பதாகவே கூறப்படுகின்றது. அவரது பிரதமர் இது பற்றி இன்னமும் முடிவு செய்யவில்லை. அவரின் கட்சியின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்திமிக்கவர்களில் ஒருவரான மங்கள சமரவீரவின் தலைமையில் தான் எதிர்ப்பணி உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது. ஆக மொத்தத்தில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்திற்கு மக்கள் மத்தியில் 90 சதவீத ஆதரவு உள்ளபோது ஆளும் கட்சிக்குள் 50 வீதஆதரவு கூட இல்லை என்றே கூற வேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் தமிழ் மக்களின் அக்கறை என்னவெனில் மிகப் பெரிய ஓர் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலக மக்கள் வழங்கும் நிதி, பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செல்லாமல் இனவாதிகளின் கைகளில் அல்லது செயற்றிறனற்ற ஊழல் பேர்வழிகளிடம் போய்ச் சேர்ந்து விடக் கூடாது என்பதாகும். அவ்வாறு செய்வது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் துன்பமுறச் செய்யவே உதவும்.

இதனை நிதிவழங்கும் உலக மக்களும் புரிந்துகொண்டுள்ளனர் என்பதற்கு பொதுக்கட்டமைப்பை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருவது வெளிப்படுத்துகிறது.

தென்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிலையில் கூட இன்னமும் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. அதற்கு அரச இயந்திரம்தான் காரணமென்பதை சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்தியும் வருகின்றன. இந்நிலையில் வடக்கு கிழக்குப் பகுதிகள் குறித்து எடுத்துக்கூறத் தேவையில்லை.

எனவே யதார்த்த பூர்வமாகப் புலிகளுடன் இணைந்து உருவாக்கப்படும் ஒரு கட்டமைப்பானது வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க உதவும் என உலக நாடுகளும் அமைப்புக்களும் கருதுவதில் தவறில்லை.

இந்நிலையில் தென்பகுதி மக்களுக்கு கிடைக்கக் கூடிய உதவிகளைக் கூட கிட்டவிடாது தடுக்கும்வகையில் இனவாதிகள் தமது பழமை வாய்ந்த கூச்சலைத் தொடர்ந்தும் இட்டுக் கொண்டிருப்பது இன்றைய நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னல் விளைவிப்பதாகும்.

இதனை எதிர்ப்பவர்கள் பொதுக்கட்டமைப்பு "நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும்" ஆபத்து விளைவிக்கும் என்று எனக் கூக்குரலிடுகின்றனர். அவர்கள் மனிதாபிமானப் பிரச்சினை ஒன்றை தீர்த்துவைக்கும் விடயத்தில் இவ்வாறு ஐந்து மாதங்களுக்கு மேலாக முட்டுக்கட்டையாக உள்ளனர்.

ஆனால் உண்மையில் அவர்கள் இந்த விடயத்துக்குக் காட்டும் எதிர்ப்பானது அவர்கள் நினைத்ததைச் சாதிக்க உதவப் போவதில்லை. அவர்கள் எண்ணுவதற்கு நேர்எதிராகவே சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதாவது இவ்வாறு அவர்கள் இனவாதக் கூச்சல் போடுவதை விட பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெற்று இயல்பு வாழ்வுக்குத் திரும்ப உதவுவது அவர்களது வாக்கு வங்கியை மேலும் வளர்க்க உதவக்கூடும். ஆனால் இவ்வாறு இனவாதம் பேசி மக்களின் வாக்குப் பெற்றுவிட முடியும் என எண்ணுவார்களாயின் தற்காலிகமாக அது பயனளித்தாலும் நிரந்தரமாக எதிர்மாறான பயனையே கொடுக்கும்.

இன்று பிரதான கட்சிகளாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டு இனவாதத்தை வளர்த்ததன் மூலமே ஆட்சிப் பீடத்தில் ஏறமுடிந்தது. ஆனால் இன்று தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டமானது அவ்வாறு இனவாதத்தை பேசுவதன் மூலம் தென்னிலங்கையில் அவர்களது வாக்கு வங்கியைப் பலப்படுத்த உதவப் போவதில்லை என்பதை உணர்த்தியிருக்கின்றது.

எனவே இந்த இனவாதக் கூச்சல் அவர்களது வாக்குவங்கியை நிரப்ப உதவப் போவதில்லை என்பதுடன் அவர்கள் கூறுவது போல் "நாட்டின் இறைமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும்" வரப்போகும் தீங்கை தடுத்து விடவும் போவதில்லை. தமிழ்மக்களுடன் இணங்கி வாழும் போக்கிற்கு இவர்கள் வராது விட்டாலே "இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும்" தீங்கு விளையும் என்பது முடிந்த முடிவாகும்.

தமிழ்மக்கள் முன்னர் போல இவர்களிடம் இருந்து எதனையும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. இணங்கி வாழ்வதாயின் தமக்குரிய அரசியல் உரிமை கௌரவம் என்பவற்றுடன் வாழ்வதற்குரிய இணக்கப்பாட்டிற்கு சிங்கள இனவாதிகள் முன்வர வேண்டும். அல்லது தமிழ் மக்கள் தமது தாயக பூமியில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழத்தயார் நிலையிலேயே உள்ளனர்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# என்னதான் நடக்கிறது

அண்மைக்காலமாக இலங்கையில் இடம்பெற்றுவருகின்ற நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும்போது யுத்தநிறுத்த உடன்படிக்கை சேடம் இழுக்க ஆரம்பித்துவிட்டதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அதாவது பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சனாதிபதியின் நிலைப்பாடும், இழுத்தடிப்பும் இது தொடர்பாக சிங்கள இனவாதிகளின் இனவாதக் கூச்சல், குழப்பங்கள், விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திட்டால் அரசை விட்டு வெளியேறிவிடுவதாக ஜே.வி.பியின் மிரட்டல், உலகில் தலைசிறந்த தர்மபோதனை கொண்ட புத்த தர்மத்தினை இலங்கையில் பின்பற்றுகின்ற பிக்குகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்வதற்காக உருவாக்குமாறு கோருகின்ற அமைப்புக்கு எதிராக சத்தியாக்கிரகம், சாகும்வரை உண்ணாவிரதம் என அவர்களின் நடவடிக்கை ஒருபுறம், இதைவிட எல்லா மாடுகளும் ஓடுகிறது எண்டு... ஏதோ ஒரு மாடும் ஓடின கதையாய் அரசில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் கட்சியும், விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பினை ஏற்படுத்தினால் தாங்களும் அரசைவிட்டு வெளியேறிவிடுவதான அவர்களின் எச்சரிக்கை, சனாதிபதியின் பதவிக்காலப் பிரச்சினை, மற்றும் திருகோணமலையில் இடம்பெற்று வருகின்ற பதற்றமான நிலைமைகள், சமீபகாலமாக கொழும்பில் இடம்பெறுகின்ற கொலைகள் குறிப்பாக அப்பாவித் தமிழ் இளைஞர்களின் படுகொலைகள் என இத்தீவில் எல்லாமே இப்போது பிரச்சினையாக மாறியுள்ளது.

மேலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தமிழர் தாயகப்பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகள் மீதான கெடுபிடிகள், இப்போராளிகளின் போக்குவரத்துப் பாதுகாப்புக்கு அரசு தவறின் தங்களுடைய போராளிகளின் பாதுகாப்பினை தாங்கள் வழங்க நேரிடும் எனத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரின் கருத்துக்கு இராணுவப் பேச்சாளர் தயா சந்தகிரி தெரிவித்த கருத்து, அதாவது விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள எல்லைக்குள் பிரவேசித்தால் கைதுசெய்யப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அவரின் அறிக்கை.

இதன்படி நிலைமைகளை நோக்கினால் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபடுகின்ற போராளிகளின் பயணத்திற்கு அரசும், அதன் படைகளும் பாதுகாப்பு வழங்க வேண்டும். ஆனால் அதனை அவர்கள் செய்யவில்லை. இதேநேரம் போராளிகளின் பாதுகாப்பினை தாங்களே மேற்கொள்வதற்கும் அவர்கள் அனுமதி அளிப்பதாகவும் இல்லை. இந்நிலைமைகளைப் பார்த்தால் இப்போது சிறிலங்கா அரசும் அதன் படைகளும் விதண்டாவாத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதை அப்பட்டமாகக் காட்டுகிறது.

சாதாரண பொதுக்கட்டமைப்பு விடயத்திலேயே சிங்கள இனவாதக்கட்சிகளும், இனவாதிகளும் இவ்வாறான கூச்சல்களும், குழப்பங்களும் என்றால் இனப்பிரச்சினைத் தீர்வு, என்று பேசவரும்போது என்ன செய்யப்போகின்றார்கள்.

இந்நிலைமைகள் எல்லாம் இத் தீவில் வாழ்கின்ற அனைத்து மக்கள் மத்தியிலும் ஒருவித பதற்றமான நிலையினைத்தோற்றியுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

இப்போது வன்னிப் பெருநிலப் பரப்பில் பெரும்பாலான வர்த்தகர்கள் குறிப்பாக எரிபொருள் விற்பனையில் ஈடுபடுகின்ற வியாபாரிகள் களஞ்சியப்படுத்தல் (பதுக்கல்) நடவடிக்கைகளில் இறங்கியுள்ளமையினையும், வீடுகள், கட்டடங்கள் கட்டுகின்றவர்கள் விரைவாக கட்டிமுடிக்கவேண்டும். அல்லது சீமெந்து உள்ளிட்ட கட்டடப் பொருட்களை இப்போதே கொள்வனவு செய்துவைத்துக்கொள்ள வேண்டும் என்கிற அவர்களின் நிலைப்பாடுகள் இதைவிட பெற்றோல்களில் இயங்குகின்ற உந்துருளிகளை விற்றுவிட்டு மண்ணெண்ணையிலும் இயங்குகின்ற உந்துருளிகளை வாங்கினால் எதிர்காலத்தில் பிரச்சினை இல்லாமல் இருக்கும் என்கின்ற இவர்களின் நிலைப்பாடுகள் எல்லாம் ஒரு பதற்ற நிலை மீண்டும் தலைதூக்கியுள்ளதையே காட்டுகின்றது.

மேலும் குறிப்பாக கொழும்பில் அண்மை வாரங்களாக இடம்பெற்று வருகின்ற கொலைகள். அதாவது அப்பாவித் தமிழ் இளைஞர்கள் ஆயுததாரிகளினால் சுட்டுக்கொலை செய்யப்படும் சம்பவங்களானது கொழும்பில் வாழ்கின்ற தமிழர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் முப்பத்திரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு கொலை நடப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ கூறியுள்ளார். எனவே ஒட்டுமொத்தமான இதன் விளைவுகள் மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கி இத்தீவு செல்கின்ற பீதியையே இப்போது மக்கள் மனங்களிலும் அவர்களது செயற்பாடுகளிலும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் சிறிலங்கா அரசோ இவ்வாறான நிலைமைகளுக்கு தீர்வுகாண்பதாகத் தெரியவில்லை, சாதாரண பொதுக்கட்டமைப்பு விடயத்திலேயே சிங்கள இனவாதக் கட்சிகளும், இனவாதிகளும் இவ்வாறான கூச்சல்களும், குழப்பங்களும் என்றால் இனப்பிரச்சினைத் தீர்வு, என்று பேச வரும்போது என்ன செய்யப் போகின்றார்கள்?

இதன்படி பார்த்தால் நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்நிலைமையின்படி மக்கள் தற்போதைய பதற்ற நிலையிலிருந்து மீள்வதற்கான சாத்தியக்கூறு மிக மிக அரிதாகவே உள்ளது.

**மு.தமிழ்ச்செல்வன்**

# காரசாரம்

# வீதியும் எங்கள் விதியும்..? இப்படி இருக்கலாமா..?

எங்குபார்த்தாலும், வீதி திருத் திறம் பாதை போடுறம் என்ற வகை யில் புதுமண் கொட்டப்பட்டுள்ளது. ஏதோ பேருக்கு கொஞ்சம் தண்ணி தெளிச்சும் விட்டாச்சு. தொடர்ந்து வரும் கொடும் வெயிலில் நிலம் காயப்புழுதிபறக்க, சரளைக் கற்கள் உருண்டுருண்டு வீதியில் கடுகு பரவியதுபோல நிரம்பியுள்ளது. மிதி வண்டி உந்துருளி இரு வாகனங் களும் ஒற்றை வரிசைச் சில்லுகளைக கொண்டது. இசகுபிசகாகக் கவனம் மாறினால் இந்தக்கற்கள் சறுக்கு வதுடன் பயணியை காலனிடமோ குறைந்தபட்சம் வைத்தியசா லைக்கோ அனுப்பிவிடும்.

இதைவிட இந்த வழிகளில் மிக வேகமாகச் செல்லும் உயரங்குறைந்த சில்லுகளைக்கொண்ட வாகனங்கள் பல. இவை பொதுவாக மேடுபள்ளங் களுக்கென வடிவமைக்கப்பட்டவை உள்ளன. அதாவது பள்ளத்தைக் கண்டாப் பறக்கிற 'கியர்' போடக் கூடியவை. இப்பேர்க்கொத்த வாகனங் களை இப்பேர்க்கொத்த நிரவல் தெருவில்... மன்னிக்கவும் கிரவல் தெருவில் ஓடவிட்டால் அவற்றின் சாரதிகள் விமானப்படைக்கான பயிற் சியை எடுக்க ஆரம்பித்துவிடு கிறார்கள்.

வேகம் வேகம், அவ்வளவு வேகம். நான் நினைக்கிறேன் கீழே இந்தத் தெருவில் ஒத்திகை சரிவந் தால்தான் இவர்களை மேலே பறக்க விடுவார்களோ... என்று. இவர்களது வேகம் பாதையிலுள்ள புழுதியை வாரி சுமார் நூறுயார் தொலைவுக் கும் அப்பாலுள்ள மரஞ்செடி, வீடு வாசல், மனிதர், விலங்குகள் என்று எல்லாவற்றிலும் அப்பிக்கொள்கிறது. இவ்வாகனங்கள் முன்னே போனா லும் சரி கடந்து வந்தாலும் சரி பெரும் இடர்களை மற்றவர்களுக்கு உண் டாக்குகிறது.

ஒரு பெரியவரைச்சந்திக்க, வைத்தியசாலைக்கு, நகரத்தில் பொருட்கள் வாங்க, நண்பரைச் சந் திக்க, திருமணம், பிறந்தநாள் போன்ற வைபவங்கள், கோயில் எனப் புறப் படும் முன் குளித்து, நல்ல ஆடைகள் அணிந்துதானே புறப்படவேண்டும். ஆனால் இந்தத் தெருக்களில் பய ணம் செய்பவர்கள் புதிய ஆடை களைப் பத்திரமாகக் கொண்டுசென்று போகுமிடத்தில்தான் குளித்து மாற்ற வேண்டும்.

வீதியில் நடந்தோ, உந்துருளி, மிதிவண்டி போன்றவற்றிலோ வந்த வர்களைப்பார்த்தால் கிணறு வெட்டி விட்டு வருபவர்களைப் போலவே தெரிகிறது. மாணவர்களின் நிலை சொல்லுந்தரமன்று, வெள்ளைச் சீருடையில் வரும்போது மழையானா லும், வெயிலானாலும் தூரத்தே வாக னத்தைக் கண்டாலும் ஓடிப்பதுங்க வேண்டியுள்ளது.

அப்படி பிள்ளைகள் தம்மைக் கண்டு ஓடிமறைவதைக்காண சில சாரதிகளுக்குக் குஷி பிறக்கிறது. இந்த வீதிகளில் கிளம்பும் தூசி அடங் காமல் இருக்கும் சிலவிநாடிகளுக்கு இப்பயணிகள் கண்களைக் கட்டாய மும், நாசியை இயன்றளவும் மூடிக் கொண்டு முன்னே வருபவர்களை பார்க்கவே முடியாத புழுதியிருளில் வருகிறார்கள்.

இவைதவிர ஏனைன் வீதியின் இருபுறமும் பெரும் அகழ்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக நீர் வடியும் இக்கால்வாய்கள் இன்னமும் ஓரங்கட் டப்படாமலும்-கடவைகள் அமைக்கப் படாமலும் விடப்பட்டுள்ளன. நான் நினைக்கிறேன் அக்கால்வாய்களுக்கு முன் கடை விரித்துள்ள எவருக்கும் ஆம் எவருக்கும் இந்த மண் எங் களின் சொந்தமண் என்கிற உணர்வு அற்றுப்போய்விட்டதோ. சட்டப்படி அந்த வாய்க்காலை ஒப்பந்தகாரர்கள் R.D.A கட்டியே தரவேண்டும். லாப நோக்கில் அதைச் சும்மா கிண்டிவிட்டு அவர் போகமுடியாது. அந்த ஒப்பந்தப் பணத்தை தனிநபர்கள் யாராவது பெறுமுன், இதைச் சுட்டிக்காட்டி வீதி யமைப்பு அதிகாரசபையிடம் கேட்ப தற்கு யாராவது முன் வந்தீர்களா? இல்லை என்றால் ஏன், நீங்கள் உங் கள் வியாபாரத்தில் ஏற்படும் இழப்புப் பற்றி ஏன் சிந்திக்கவில்லை.



பாதை என்பது பாதசாரிக் குத்தான் சொந்தம். இதை வேறு எவ ரும் பயன்படுத்தவேண்டுமாயின் அனு மதி எடுக்கவேண்டும். இப்படி அனு மதிபெற்று வீதியில் வாகனமோடு வோர் பாதசாரிகளுக்கு எவ்வித இடையூறும் வழங்கமுடியாது.

பாதசாரிகளுக்கு சட்டம் போதிய பாதுகாப்பை வழங்கிக் கௌர விக்கிறது. பாதையின்மீது போடப் பட்டிருக்கும் மஞ்சள் தடவிய கடப் பின் மீது ஒரு நடைபயணி கால் வைத்தால் எந்த வாகனமும் அவ னைக் கடக்கக்கூடாது. அவன் கடந்து செல்லும்வரை தரித்து நிற்கவே வேண்டும். இங்கே எந்த வாகனச் சாரதியும் அப்படிச்செய்யவில்லை. மஞ்சள் கோட்டின்மீது பாய்ந்து பாய்ந்து ஓடும். நடைபயணிகளை நாம் பார்க்கிறோம். அல்லது அவ் விடத்தில் ஒரு காவல்துறை உறுப் பினர் நின்று உதவுவதைக் காண் கிறோம்.

சாதாரண சட்டங்களையும் கூடவே மனிதாபிமானத்தையும் கொண்டிராத சாரதிகளையும் வீதியை செப்பனிடுகிறோம் என்ற பெயரில் வீதியின் மருங்கே குழி பறித்துள்ள ஒப்பந்தக்காரரையும் தட்டிக்கேட்பது யார்? சில வீதிகளில் திடீரெனத் தடை போட்டு வேலை செய்யவேண்டிய தேவை உண்டுதான். அவ்விடத்துக்கு வரும் முன்னுள்ள சந்தியில் அதை அறிவிப்பதில்லை கிட்டவந்தபின் புறுபுறுத்தவாறே பயணிகள் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக உள் ளது. பாதைகளில் இன்னோரன்ன இடையூறுகளை வைத்துக்கொண்டு விபத்துக்களைத் தடுப்பதெப்படி? குறிப்பாகக் கனகபுரம் டிப்போவீதி மாவீரர் துயிலுமில்லம் வரை தார்ச் சாலையாக உள்ளது மகிழ்ச்சி. ஆனால் அது ஏனைன் சாலையிலி ருந்து புகையிரதப்பாதை வரை எவ் வளவு நெருக்கடியைச் சந்திக்கிறது.

தொடர்ந்து செல்லும்பாதை ஓணான் முதுகுபோன்றது நடுவே வரும் வாகனத்துக்கு விலக பக்கம் போனால் படுபள்ளம். இடையே ஓரி டத்தில் தோண்டிய பள்ளம் நிரவப் படவில்லை. அன்புச் சோலையரு கேயும் அதிலிருந்து சில யார் கடந்தும வரும் சிறுபாலம் அடியோடு கிண்டுப் பட்டு ஏழெட்டடி வீதியே அவ்விடத் தில் மீதமுள்ளது. அதற்கென எந்த அபாய அறிவிப்புமில்லை. இரவில் பயணிப்பவர்களின் நிலை என்ன.

இதே தெருவில் கோணாவில் அக்கராயன், கந்தபுரம், மல்லாவி, ஜெயபுரம், முழங்காவில் போன்ற அநேக இடங்களுக்கான பேருந்து செல்கிறது. இந்த வீதிகளையும் இக் கிராமத்தெருக்களையும் பாவிக்கும் மக்கள் பாவிகளேயன்றி வேறென்ன? முன் பின்னாகச் செல்லும் வாகனங் களை முந்தியோட முயலும் சாரதிகள் பயணிகளைப் பற்றிச் சற்றும் சிந்திப் பதில்லை. மண்ணேற்றச் செல்லும் பெரும் பாரஊர்திகள் இந்த வீதியில் பயணிப்பதால் எப்போதும் புழுதி மூட்டமாகவே காணப்படும் வீதி இது. திருநகர் வீதிக்கும் ஏதோ நல்ல காலம் என நினைக்கும் வண்ணம். எதற்கோ மண்போட்டது போல ஆங் காங்கே சிறு குவியல் மண்போட்டுத் தடவியாயிற்று. அதுவும் ஒருகிலோ மீற்றர்தான். மீதி வீதி வானத்தைப் பார்த்துக் காத்திருக்கிறது. ஏனெனில் ஒரு நல்ல மழை வந்தால் போட்ட வீதி போடாத வீதியுடன் சமரசம் செய்துகொள்ளும் வாய்ப்புள்ளது.

வீதிகளை என்றைக்காவது மக் கள் பயன்படுத்தும் வகையில் எந்த அரசு எந்தக் காலத்தில் செய்தது. ஒரு போதுமில்லை. ஒட்டுமொத்த வன்னிக்கான நிதி ஒதுக்கீட்டை இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுள முடக்கிவைத்த கடந்தகால அரசிய லில்கூடப் பயணிகளும் அவர்க ளுடைய வசதிகளும் கவனிக்கப் பட்டதில்லை.

இன்றும் வவுனியா நகரசபைக் குட்பட்ட மிகப் பிரபலமான தெருக் களில் ஒற்றைச்சில்லு வாகனமெனப் படும் உந்துருளி மிதிவண்டி போன் றவற்றையே ஓட முடியாதுள்ளது. கட லில் படகு செலுத்துவது போல் எழுந் தும் விழுந்தும் செல்லும் வாகனங்கள் நெளுக்குளம், குழுமாட்டுச்சந்தி, தெற் கிலுப்பைக்குளம், கோவில்குளம் வீதி, தவசிகுளம், உக்குளாங்குளம் மதவு வைத்தகுளம், பண்டாரிகுளம், உள் ளக வீதிகள், பூந்தோட்டம், கம்பஸ் வீதி என அடுக்கிக்கொண்டே போகலாம்.

வவுனியா பஜார் வீதியின் பின் புறம், கிழக்கே பெரும் வர்த்தக நிறு வனங்கள் ஆலயங்கள் உள்ள தெருக்களும் அப்படியேதான் உள் ளன. ஆகமொத்தத்தில் நடைபாதைப் பயணிகளின் வசதிகள் எதுவும் கவ னிக்கப்படுவதில்லை. வீதித்திருத்தக் காரரோ, வாகன சாரதிகளோ, அரசாங் கமோ வரிகேட்கும் போதும், வோட் டுக் கேட்கும் போதும் காட்டும் பரி வைத் தொடர்ந்து காட்டினால் என்ன? சாரதிகள் தாம் ஒரு தடவை தரையில் நடந்துபோவதைக் கற்பனை செய்து பார்த்து மற்றவர்களை மதித்து நடந்தால் என்ன.

"இப்ப ரோட்டுக்கு மண்போட்டது தான் பிழை, என்ற தவறான சிந்தனை தோன்றக் காரணமாவான் ஏன்?

-மாயா-



# விசுக்விசுக் விசாலாட்சி

கேட்டியேடா கதைய முத்தலிப்பச் சுட்டுப் போட்டாங்களாம். ஆரோ எவரோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். அது சரி வலு விண்ணாணமாத்தான் நடந்திருக்கு. போன கிழமையும் ஒரு யாவாரியச் சுட்டுப் போட்டாங்கள். அதில்லைக் கதை அதுக்குமுதல் இன்னுஞ் சில்லறையாக் கனபேர் சுடுபட்டவைதான். குமார் பொன்னம்பலத்திலயிருந்து தராக்கிவரையும், கௌசலியன், குயிலின்பனாக்களையுங் கூட இதுக்க பட்டியல்ல விடலாம்.

அது சரியடா, ரெலிபோனில கூப்பிட்டுச் சுடுகிறதெண்டு ஒருவகைக் கொலை தொடர்ந்து நடக்குது. ஒருக்காப் பிழைபாடாக்கிடந்த இல்ல நடந்த விசயத்த தொடர்ந்தும் நடத்துகினமெண்டா. அந்த கூப்பிட்டுக் கதைச்சவைய ஆரெண்டு பிடிக்க இந்த விஞ்ஞான யுகத்தில எவளவு வழியள் இருக்கு. ஆனாப் பாவம் இலங்கைப் புலனாய்வுத்துறைக்கு இதில ஒண்டுந் தெரியாது. கடைசியா... இப்ப முதலுக்கே மோசம் வந்திட்டுது. சுடுறவைக்கும் இவையட தராதரம் நல்லா விளங்கிவிட்டது. ஊடகக் காறரைக் கடத்திக்கொண்டு போகேக்க கண்டவையும் இருக்கினம். கண்டதை விண்டவையும் இருக்கினம். ஆனா கொன்றவையத் தான் கண்டு பிடிக்க முடியேல்லயாம். இப்பிடியெல்லாம் சாட்சியில்லாமக் கனவேலையள் நடந்திருக்க, பொதுமக்கள் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கலங்கி நிக்க சட்டம் ஒழுங்கைச் சகடையில ஏத்தி அனுப்பினவை. ஆனா தங்கட பாட்டியில ஏதும் நடந்திட்டா, பொட்டிட்டாப் போல அப்பிடியே 'கப்' பெண்டு பிடிச்சிருவினம். ஆர்... புலிதான் சுட்டது. பகிரங்கமா கொழும்புத் தெருவில வாகனத்துக்கு முன்னால வந்து நிதானமாச் சுட்டுப்போட்டுப் போட்டாங்கள். இப்பிடித்தான் கௌசலியனையுஞ் சுட்டவங்கள். அது ஆரெண்டு தெரியா. இது புலியளாம் எப்பிடியிருக்குக் கதை. இப்பிடி ஒரு துணிஞ்ச வேலை செய்தா... அது புலியாலதான் ஏலும். எண்டொரு சேட்டிப்பிக்கேற் போட்டுவச்சிருக்கினம். பின்ன கோழைத்தனமா நித்திரையில வச்சு சுட்டுத் தள்ள, நிறை இருட்டில கடத்திக் கொண்டே எது ஆயுதமில்லாம கொஞ்சம் குடிவகையும் பாவிச்சிட்டு, அசண்டையீனமா நிண்டவனை கடத்த ஒரு வான். நாலைஞ்சு ஆக்கள் எண்டு வேலை செய்யிறவை ஆராயிருக்கும்... சும்மா யோசிச்சுப் பாருங்கோ அதுக்கும் மிஞ்சி தமிழ் முஸ்லிம் வர்த்தகர்களின்ர படுகொலையளும் கதைக்க ரெலிபோனில கூப்பிட்டுத் தான் நடந்திருக்கு. கடைசியா 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்டனி என்ற தொழிலதிபரைச் சுட்ட ஆயுதமும் முற்று முழுதாப் புது ரகமாம். ஆனாப் பாருங்கோவன் உந்த ஊருப்பட்ட தமிழ் இனப் பொடியள அழிச்சு சித்திரவதை செய்து அதுகளின் குடும்பங்களையே நாசமறுத்த முத்தலிப்ப ஆர்சுட்டாலும் நல்லதத் தான் செய்திருக்கிறாங்கள். ஆனா இந்த தரம்பிரிக்கிற விசயத்தில இன்னும் புலியளச் சரியான தராசிலதான் வச்சிருக்கிறாங்கள். துணிஞ்சடிச்சாப் புலி பயத்தில மறிச்சு இருட்டடியெண்டா அது கண்டுபிடிக்கேலாது. பசாசுகளின்ர வேலை பின்னப் செய்து பாருங்கோவன்.

இப்பிடியே யுத்தம் துவங்கி நடக்குது கேட்டா சமாதான காலமாம் பேச்சு வார்த்தை நடத்தப் போகினயாம்.. ஊருக்குச் சொல்லுமாம் பல்லி களனிப்பானையில விழுமாந்துள்ளி. கேளடாப்பா கதைய ஒங்கட இனவாதக் கொள்கையள இவையும் கைவிடப் போறதில்ல, இவயட பத்திரிகையளும் விடப் போறதில்ல. சனத்தை கிளப்பி விட்டிட்டு தலைவர்மார் கதிரையளக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு நிக்கப் போயினம். கதையோட கதை இன்னொரு விசயமடா பிந்துனுவேவச் சிறையில பச்சப்பாலனுகள அடைச்சுவச்சு கொலை செய்தவையில நாலுபேருக்கு தூக்குத் தீரயில்லயே...ங அவைக்கு இப்ப விடுதலை கிடைச்சிருக்கு. இதை என்ன புதுக்கதையெண்டு நினைக்கிறியே. போடா போ- இனக்கலவரத்துக்கு தலைமை தாங்கினவைக்கும் ராசீவ் காந்திக்கு அடிச்சவனுக்கும் வெலிக்கடையில வேலை செய்தவனுக்கும் தண்டனை என்ன? பதவி உயர்வு, பதக்கம் இப்ப புதுசா என்ன நடக்கப்போகுது- எல்லாம் "எப்போதோ முடிந்தவிசயம்"

## மருத்துவம்

# ஆரோக்கியமான கர்ப்பகாலம்



ஒரு பெண் தாய்மை யடையும் போது, அவள் தன்னை மட்டுமல்ல அந்தக் குடும்பத்தையே மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்து கிறாள். கருவுற்ற காலம் தொடக்கம் ஆரோக்கியமாக இருந்தால் தான் தாய்க்குமட்டுமல்ல வளரும் குழந்தைக்கும் நல்ல ஆரம்பமாய் அமையும். பிரச்சினைகள் இல்லாமல் கற்பகாலமும் பிரசவமும் அமையும் என்று யாராலுமே உறுதியளிக்க முடியாது. ஆனால் ஆரோக்கியமான வழிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

கற்பகாலம் ஆரோக்கியமாய் அமைய பத்து வழிகள்.

***1. சமவீத உணவை உட்கொள்ளல்:-***

பாண், தானிய வகைகள், பழவகைகள், காய்கறி வகைகள், இறைச்சி, மீன், முட்டை போன்ற வற்றை உண்ணவேண்டும்.

***2. போலிக்கமிலம் மாத்திரைகள்:-***

நீங்கள் கற்பம் தரிக்க தீமானிக்கும்போதிலிருந்து கற்பம் தரித்து பன்னிரண்டாவது வாரம் வரை தினமும் 400 mg மாத்திரையைத் தவறாமல் உட்கொள்ள வேண்டும். முதுகெலும்பில் ஏற்படும் குறைபாட்டைத் தடுக்க போலிக் கமிலம் உதவுவதால் சுகாதார அமைப்புக்களில் இதைச் சிபார்சு செய்து வருகிறார்கள். கீரை வகைகள், புறோக்கோழி, தானியங்கள் சேர்க்கப்பட்ட பாண், தானியங்கள் மற்றும் மாமைட் போன்ற உணவுகள் போலிக்கமிலம் நிறைந்தவையாகும்.

***3. தவிர்க்க வேண்டிய உணவுப் பொருட்கள்:-***

மென்மையான பதப் படுத்தப்படாத பாற்கட்டிகள் (ஸீஸ்) நன்றாக வேகவைக்கப்படாத இறைச்சி, அவிக்கப்படாத முட்டை போன்றவற்றை தவிர்ப்பதன் மூலம் லிஸ்டீயா, சால்மனெல்லா போன்ற கிருமிகளால் பரவும் நோய்களைத் தடுக்கலாம். விற்றமின் ஏ மாத்திரைகள் மற்றும் ஈரல் போன்ற விற்றமின் ஏ நிறைந்த உணவுப் பொருட்களை தவிர்ப்பதன் மூலம் குழந்தைக்கு பிறப்பில் ஏற்படும் குறை பாடுகளைத் தடுக்கலாம்.

***4. ஓய்வுக்காக நேரம் ஒதுக்குங்கள்:-***

சிறிது நேரமேனும் ஓய்வு எடுக்காமல் வேலை செய்யின் குறை மாதப்பிரசவமாக வாய்ப்பிருக்கிறது. ஆகவே கர்ப்பிணிகள் ஓய்வு எடுப்பது அவசியமாகும். தியானம், யோகாசனம் போன்றவை உங்களுக்கும் உங்கள் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் மிகவும் சிறந்ததாகும். தினமும் எளிய உடற்பயிற்சிகளைச் செய்வதன் மூலம் உற்சாகமாக இருப்பதுடன் இலகுவில் பிரசவமாகவும் உதவும். (சிலருக்கு தவிர்க்க முடியாத சில காரணங்களால் உடற்பயிற்சியைத் தவிர்க்கும்படி மருத்துவர் ஆலோசனை கூறி இருப்பின் தவிர்க்கலாம்)

***5.தவிர்க்க வேண்டிய மருந்துகள்:-***

கர்ப்பகாலத்தின் போது மருத்துவரின் ஆலோசனையின்றிக்கடையில் வாங்கி மருந்துகள் ஏதும் உட்கொள்ளக்கூடாது. நீங்கள் நீண்ட கால மருந்து உபயோகிப்பவராயின் கற்பம் தரித்துவிட்டதாகத் தெரிந்த வுடனேயே மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது மிகவும் அவசியம்.

***6. மருத்துவரை உடனே அணுக வேண்டிய நிலைகள்:-***

உங்கள் உடல் நலனைப் பற்றி ஏதேனும் சந்தேகம் ஏற்படினும் யோனிமடல் வழியே குருதி அல்லது நீர்கசிதல், கை கால் முகம் வீக்கம், பார்வையில் ஏதேனும் மாற்றம் அல்லது அதிக ஒளி வீசுவது போன்ற உணர்வு, வயிற்றுவலி அல்லது தலைவலி முதலிய அறிகுறிகள் காணப்படின் உடனே மருத்துவரை அணுகவும்.

***7.டோக்சோ பிளாஸ்மோசிஸ்:-***

இது ஒரு ஒட்டுண்ணி யால் ஏற்படும் நோய். இந்நோய் கர்ப்பகாலங்களில் ஏற்படின் குழந்தைக்குப் பலவகை உடற் கோளாறுகளை ஏற்படுத்தும். இதைத் தவிர்க்க,தோட்ட வேலைகள் செய்யும்போது எச்சங்கள் கைகளில் படாமல் இருக்க கை உறைகளை அணியுங்கள். நன்றாக வேக வைக்கப்படாத இறைச்சியினை உண்ணாதீர்கள்.

***8. பரிசோதனை நேரம்:-***

கற்பகாலத்தின்போது மருத்துவரும் தாதியும் சில பரிசோத னைகள் செய்வதற்காக உங்களை அழைப்பார்கள். இதற்காக ஒதுக் கப்பட்ட நேரத்தை தவிர்க்காதீர்கள். இப்பரிசோதனைகள் செய்வதன் மூலம் உங்கள் உடலிலும் உங்கள் குழந்தைக்கு ஏற்படக்கூடிய பல பிரச் சினைகளை முற்கூட்டியே கண்ட றிந்து நிவர்த்திசெய்ய வாய்ப்பிருக்கின்றது.

***9. மது அருந்துவதைக் குறைக்க வேண்டும்:-***

அதிக அளவில் மது அருந்தினால் குழந்தையின் மூளை பாதிக்கப்படும். அதனால் ஒன்று அல்லது இரண்டு அலகளவே (யுனிட்) அனுமதிக்கப்பட்டுள்ளது. (ஒரு யுனிட் என்பது அரை பொயின்ட் பியர் அல் லது ஒரு திராட்சைரசக் கிண்ணம் (வயின்) அளவு என அளவிடப்படும்.

***10. புகைப்பிடித்தலை தவிர்த்தல்:-***

எமது கலாசாரத்திற்கு அப் பாற்பட்டதாயினும் மேலை நாடுகளில் வாழ்ந்து வரும் நாம் இதனையும் கருத்தில் கொள்ளவேண்டும். கற்பம் தரிக்க வேண்டும் என தீர்மானிக்கும் போதே புகைபிடிப்பதை நிறுத்தி விடுவது நன்று. இல்லையேல் குறைப்பது மிகவும் அவசியம். புகை பிடித்தலினால் குழந்தைக்கு ஆபத்து மட்டுமன்றி குறைமாதப் பிரசவம் ஆகவும் வாய்ப்பிருக்கிறது.

***மேலும் சில துணுக்குகள்:-***

1.நீங்கள் எங்கு செல்வதானாலும் உங்கள் கைப்பைக்குள் கற்பகால கையேட்டை எடுத்துச் செல்ல மறவாதீர்கள். இது ஏதும் பிரச்சினைகள் வந்தால் எந்த ஒரு மருத்துவரும் உங்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.

2. முதல் மூன்று மாதங்கள் வரை அதிகாலையில் வாந்தி வருவது வழக்கமான ஒரு அறிகுறியாகும். வாட்டிய பாண், கிரக்கர் பிஸ்கட் உலர் தானிய வகைகள் (சீரியல்) போன்ற உணவுகளைக் காலையில் எழுந்ததும் முதல் வேலையாக உட்கொண்டால் வாந்தி குறையும். உணவுகளை சிறிய அளவில் அடிக்கடி உண்ணுவதாலும் பொரித்த உணவுப் பதார்த்தங்களை தவிர்ப்பதாலும் வாந்தியைக் கட்டுப்படுத்தலாம்.

3. சிறு வயதில் ருபெல்லா தடுப்பூசி போடப்படாமல் இருப்பின் நீங்கள் கற்பமாக வேண்டும் என தீர்மானிக்கும் முன்னே உங்கள் மருத்துவரை அணுகி தடுப்பூசியைப் பெற்றுவிட்டு கற்பமாவது அவசியம்.

4. கற்பகாலத்தின் போது அம்மை நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவருடன் தொடர்பு ஏற்படின் உடனடியாக மருத்துவரை அணுகி உங்கள் உடலில் அந்த நோயை எதிர்க்க, எதிர்ப்பு சக்தி இருக்கிறதா? என்பதை இரத்தப் பரிசோதனை செய்து அறிய வேண்டும்.

ஆணின் பங்கு என்ன? ஒரு குழந்தையை உருவாக்க ஆணின் பங்கும் அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. இது முழுமை பெற ஆண்களும் பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

1.நல்ல ஆரோக்கியமான உணவு.

2. புகைப்பிடிப்பதை தவிர்த்தல்- புகைபிடிப்பின் ஆரோக்கியமான அணுக்கள் உருவாகாது.

3. மது அருந்துவதில் அளவைக் குறைத்தல்.

4. இறுக்கமான உள்ளாடைகள், அதிக வெப்பமான நீரில் குளித்தல் சில மருந்து வகைகளைத் தவிர்த்தல் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே மேற்போன்ற நடைமுறைகளைப் பின்பற்றி தாயாகப் போகும் அந்த காலத்தினையும் ஆரோக்கியமாகவே வைத்திருங்கள்.






# "செல்போன் ரோபோ"

ஜப்பானியர்கள் இந்த உலகத்தில் ஒரு வித்தியாசமானவர்கள். நாளுக்குநாள் புதிய புதிய இலத்திரனியல் பொருட்களைக் கண்டுபிடிப்பதில் வல்லவர்கள்தான், அந்தவகையில் அண்மையில் உலகில் முதன் முறையாக கைத்தொலைபேசி மூலம் இயங்கும் அதிநவீன ரோபோவை ஜப்பானைச்சேர்ந்த ஒரு நிறுவனம் வடிவமைத்துள்ளது. கைத்தொலைபேசியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு ஏற்ப, இந்த ரோபோ மனிதனைப்போன்று நடப்பது, துள்ளிக் குதிப்பது போன்ற செயல்களை மேற்கொள்கிறது. அடுத்த மாதம் சந்தையில் இந்த ரோபோ விற்பனைக்கு வரவுள்ளது.

இந்த விஞ்ஞான வளர்ச்சியின் முடிவு எதுவரை செல்லப்போகின்றதோ தெரியவில்லை. ஆனால் எல்லாம் நன்மையாக இருந்தால் சரி.

# இன்னுமொரு கிரகமா..?

அஞ்ஞானிகள் மனித வாழ்க்கையில் நிம்மதியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானிகள் பூமிக்கு அப்பாலும் பல விசயங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆம்! பூமியைப் போன்றே ஒரு கிரகத்தைக்கண்டு பிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இம்முயற்சியில் ஓரிரு ஆண்டுகளில் வெற்றி கிட்டும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். விண்வெளியில் சூரிய மண்டலத்துக்கு அப்பால் கிரகங்கள் இருப்பது 1995ஆம் ஆண்டு முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவரை 145 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றில் உயிரினங்கள் வாழமுடியாது என்பது தெரியவந்துள்ளது. ஆனால் உயிரினங்கள் வாழக்கூடிய பூமி போன்ற கிரகங்கள் உள்ளதா என்று கண்டறியும் ஆராய்ச்சியில் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். பூமியைப் போன்ற அளவுள்ள சிறிய கிரகங்களை விரைவில் கண்டறிவோம் என்ற குறிக்கோளுடன் அவ் விஞ்ஞானிகள் மென்மேலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். எவ்வாறோ கண்டு பிடிக்கப்போகின்ற கிரகத்திலும், தங்களது காலணித்துவத்தினை ஏற்படுத்தி நாசம் விளைவிக்காமல் இருந்தாலே அதுவே இதைவிட மகிழ்ச்சியான விடயமாக இருக்கும்.



# நவீன ஏ.சி இயந்திரம்

எலக்ட்ரோலக்ஸ் நிறுவனம் 0.80 தொன் நிறையுள்ள ஏ.சி இயந்திரம் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. இலங்கை ரூபாக்களின்படி இருபத்தையாயிரம் ரூபா விலையில் சந்தையில் விடப்பட்டுள்ளது. ஜன்னலில் பொருத்தக்கூடிய சிறந்த நவீன வடிவமைப்புக்களுடன் மற்றும் ரிமோட்கொன்றோல் வசதியுடன்கூடிய தொழில் நுட்பத்துடன் காணப்படுகிறது. இந்த ஏ.சி இயந்திரம் ஓட்சிசன் ஏ.சி வகையானது இது மின்சாரத்தை சிக்கனப்படுத்துவதோடு, சத்தம் வராது எனவும் இதன் பாகங்களை எளிதில் பிரித்து சுத்தம் செய்யலாம் என்பதோடு இதில் உள்ள மூன்று அடுக்கு பில்டர்கள் கிருமிகளையும், மற்றும் புகையையும் தடுக்கக்கூடியது எனவும் உற்பத்தியாளர்கள் கூறுகின்றார்கள். நவீனம் எங்கு போகின்றதோ...?



# செவ்வாய்க்கு புதிய ஆய்வுக்கலம்

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத் செவ்வாய்க் கோளிற்கு புதிய ஆய்வுக்கலம் ஒன்றை அனுப்பவுள்ளது. ஏற்கனவே நாசா வின் இரு ஆய்வுக்கலங்கள் செவ்வாய்க்கோளில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவரும் நிலையில் இதற்குரிய அனுமதியை அரிசோனா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களுக்கு நாசா வழங்கியுள்ளது. 2007ஆம் ஆண்டு ஏவப்படும் இவ் ஆய்வுக்கலம் 2008இல் செவ்வாயில் தரை இறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




பார்வதிக் கிழவி கிழித்துப் போட்ட நாரென படுக்கையில் கிடக்கிறாள். கை கால்களில் இயக்கமில்லை; விழிகளில் தேடல் இல்லை. உயிர் இன்னும் எஞ்சியிருப்பதன் அடையாளமாக நெஞ்சறைக்கூடு மாத்திரம் அடிக்கொரு தடவை மேலுயர்ந்து பின் தாழ்ந்து கொள்கிறது.

அடுத்தவீட்டு அலமேலு அவள் உடலை சற்றே வலதுபுறம் சரித்து முதுகின் கீழ் அழுக்கடைந் திருந்த துணிகளை அகற்றினாள், பதிலுக்குப் புதிது விரித்தாள். அருகிலுள்ள முக்காலிமீது அலுமினியச் சட்டியில் களி தேடுவாரற்றுக் கிடந்தது. முன்வீட்டு பங்கயம் காலையில் செய்துவைத்தது. ஏராளமான இலையான்கள் அதை 'ஒருகை' பார்த்துக்கொண்டிருந்தன.

'உள்ள பிரச்சினையளுக்க இலையான்களின்ர தொல்லை தாங்கமுடியேல்லை' அலமேலு தனக்குள் முணுமுணுத்தாள்.

அந்த நேரம் படலையை அகலத் திறந்தவாறு பங்கயம் கையில் உணவுப் பாத்திரத்துடன் வந்தாள்.

"கேட்டியேடி பிள்ளை, காலமை வச்சிட்டுப்போன களி அப்பிடியே கிடக்குது! கரண்டிமூலமா குடுத்துப்பார்த்தன். ஒரு வாய்தானும் உள்ள இறங்குதில்லை..." என்றாள் அலமேலு மாமி கவலையுடன்.

"வர வர மனிசியின்ர நிலைமை மோசமாகிக்கொண்டு போகுது. மாமி... கால்கை இழுத்து எண்ணி இருவது நாள் கடந்திட்டுது! எனக்கெண்டால் இனித்தேறுமெண்ட நம்பிக்கையில்லை..."

"ம்... எங்கட கிராமத்துக்கே பரோபகாரியா இருந்த மனிசி இப்பிடி பேச்சிழந்து கிடக்கிறது சகிக்கமுடியேல்லை... ஊரில நல்லது கெட்டதுக்கெல்லாம் முன்னுக்கு ஓடிவந்து உலையுற ஜென்மம்! என்னோட மூத்தவளின்ரை கலியாணத்துக்கு நல்லா மாய்ஞ்சு மாய்ஞ்சு உழைச்சது. ஏன் பேந்து தலைப்பிள்ளைப் பேறு சமயம் கூட இருந்து நல்ல ஒத்தாசை செய்ததெல்லே...?"

"எல்லாம் அவன் எழுதி வைச்சபடிதானே நடக்கும். எங்கட கையில எதுவுமில்லை..." பங்கயம் வானத்தைக் காட்டி கைகளை விரித்தாள்.

"தனிக்கட்டையாக வாழ்ந்த மனிசி ஒரு சுகத்தையும் கண்டதில்லை. இருந்த ஒரு பொடியனும் நாட்டுக்கெண்டு போனவன்தான் பிறகு..." என்ற அலமேலுவை பங்கயம் இடைமறித்தாள்.

"நான் நினைக்கிறன் 'பொடியனை ஒருக்கா பாத்திட்டு ஒரேயடியாகக் கண்ணைமூடத்தான்' இப்பிடி மனிசி சேடமிழுத்தபடி கிடக்குதெண்டு..."

"எனக்கு நம்பிக்கையில்லை யடி பிள்ளை... இந்தப் பன்ரெண்டு வரியமும் பெத்த பொடியனைப் பார்க்கவேணுமெண்டு மனிசி என்னமாய் அலைஞ்சுது. ம்... அங்க நிக்கிறன்... இங்க நிக்கிறன் எண்டு ஆள் அனுப்பி சொல்லுறவன் ஒருக்காலாயினும் மனிசியை வந்து பாக்க வில்லையே? ஒண்டு ரெண்டு வரியமே... பன்ரெண்டு வரியம்-பெத்தவயிறு ஏங்கித் தவிக்காதே....!"

"போன வரியம் ஒப்பந்தம் வந்த கையோட 'ஏனைன்' பாதையும் திறந்தாச்சு. மற்ற இயக்கப்பெடியளும் வன்னியிலிருந்து லீவில வருகுதுகள். பெற்றார் உறவுகளைக் கண்டு திரும்புதுகள்... இவன் மட்டும் எங்க இருக்கிறான் எண்டது பார்வதி மாமிக்குத் தெரியேல்லை"

"எக்கணம் உவன் பெடி வன்னியிலயோ இல்லாட்டில் தூர பிரதேசமொண்டில ஏதேனும் முக்கிய பொறுப்பில இருக்கக்கூடும்...! ஆர் கண்டது" அலமேலு பெருமூச்செறிந்தாள்.

"எனக்கெண்டால் அவன் இனிமேலும் வருவானெண்ட நம்பிக்கையில்லை..."

# இறுதி யாத்திரை



"...ம், கிராமத்தில எல்லாக் குடும்பத்துக்கும் உழைச்ச மனிசி அந்த நன்றிக்கு உசிர் பிரியுமட்டும் எங்களால ஆன பரிகாரத்தை செய்வம்" என்ற அலமேலு பழைய துணிகளுடன் கிணற்றடிக்குப்போனாள்.

மதியவேளை கிராம வைத்தியர் பரஞ்சோதி வந்து பார்வதியை பரிசோதித்தார். அருகில் அலமேலு கையில் மருந்துப் பொடியை தேனில் குழைத்தவாறு...

"இரண்டு நாளாக தண்ணி, சாப்பாடு எதுவுமே உள்ள இறங்குதில்லை டாக்குத்தர். முன்னமெண்டால் அங்க இங்க பாத்து மாறாட்டமாயெண்டாலும் கதைச்சுது. இப்ப கண்ணைத் திறந்து பார்க்கிறது கூட இல்லை... நாள் முழுக்க ஒரு அசுமாத்தத்தையும் காண முடியுதில்லை" அலமேலு மாமி அங்கலாய்த்தாள்.

நாடித்துடிப்பைப் பரிசோதித்த வைத்தியர் உதட்டைப் பிதுக்கினார்.

"நாடித்துடிப்பும் ரொம்ப பலவீனமாத்தான் அடிக்குது. உடம்பில நீர் வத்திப்போய்ச்சு... இப்போதைக்கு ஒரு சேலைன் போடுறன்" வைத்தியர் வேகமாக நாளத்திரவம் ஏற்றுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்தார். கைகள் தான் இயந்திரகதியில் இயங்கினவேயொழிய மனம் பார்வதிக்கிழவியைச் சுற்றியே வந்தது. கிழவியின் மேலிருந்த அனுதாபத்தின் காரணமாகவே அவளது ஒரே மகன் முரளியின் கல்லூரிப்படிப்பிற்கு உதவியிருந் தார். அந்த நன்றிக்கு ஈடாக உடலியக்கம் இருந்த மட்டும் அவர் வீட்டில் எடுபிடி வேலைகள் செய்தாள் பார்வதி.கடைசியாக வைத்தியர்தான் கண்டிப்பாகச் சொல்லி அவளுக்கு ஓய்வு கொடுத்திருந்தார்.

"இதப்பார் பார்வதி, உவன் முரளி படிக்கக்கூடியபிள்ளை. படிச்சு நல்லா முன்னுக்கு வரவேணுமெண்டுதான் அவன்ர கல்லூரிப் படிப்புக்கு உதவி செய்தனான்... ம் இப்ப அவன் நாட்டுக்கெண்டு போட்டான்! இனியும் நீ என்ர வீட்டில வந்து உழைக்கிறது எனக்கே சங்கடமாயிருக்கு"

நாளத்திரவம் ஏறத்தொடங்கி யது. வைத்தியர் மருந்துப்பையிலி ருந்து குளுக்கோஸ் பெட்டியொன்றை வெளியேயெடுத்தார்.

"இயலுமெண்டால் இதைக் கரைச்சு பருக்குங்கோ... முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அடிக்கொரு தடவை உடம்பைத் திருப்பி விடவேணும்- வலது கைப்பக்கமாக சரிந்தபடி... அடுத்து நிமிர்ந்த நிலையில... பிறகு இடது கைப்பக்கமாக சரிந்த நிலையில... இல்லாது போனால் படுக்கைப்புண் போட்டிடும். அது வந்தால் அப்புறம் மாற்றுவது கடினம்..." என்று எச்சரித்தார்.

துளித்துளியாக விழுந்த நாளத்திரவம் படிப்படியாக அவள் குருதியுடன் கலந்து கொண்டிருந்தது.

★ ★ ★ ★

**தயாபரன்**

வன்னியில் மாவீரர் பணிமனை.

சேரன் நிமிர்ந்து மாவீரர் பதிவேட்டைப் புரட்டினான். 'கடந்த ஆண்டு மாவீரர் தினத்தில் கணிப்பிட்டிருந்தோரைவிட இம்முறை மேலதிகமாக சிலரை இணைக்கவேண்டியுள்ளது. கூடவே கடந்த காலங்களில் தவிர்க்க முடியாத காரணங்களினால் இதுவரை அங்கீகரிக்கப்படாதிருந்த பலரை சேர்க்கவேணும்...'

அண்மையில் கிடைக்கப் பெற்றிருந்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களைக் கொண்ட பைலைத் திறந்தான்.

ஜெயசிக்குறு நடவடிக்கை சமயத்தில் வித்துடல் கிடைக்காதுபோன.. இருவர்...

மணலாற்றில் வேவுக்காகச் சென்று அரவந்தீண்டி சென்றமாதம் எலும்புக்கூடாகக் கண்டெடுக்கப்பட்ட-போராளி...

திருமலை ரவுணுக்குள் இயங்கியபோது படையினரால் கைதாகியதாகக் கருதப்பட்ட - ஆனால் தற்போது உயிரிழந்து விட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட போராளிகள் இருவர்...

இறுதியாக அது-

கரும்புலியாகச் சென்ற வருட ஆரம்பத்தில் காவியமாகிவிட்ட தற்கொடைப் போராளியின் விபரம்.

புகைப்படம் கூட பல வருடங்களுக்கு முன்னர் எடுத்திருக்க வேணும். மீசை காணாத நெடிதுயர்ந்த தோற்றம்.. கண்களில் பளிச்சிடுகின்ற ஒளிப்பிரவாகம் நிச்சயம் அது நாட்டுக்காகச் சாகத் துணிந்துவிட்ட மகிழ்ச்சியின் வெளிப்பாடு! கூடவே நான்காக மடிக்கப்பட்ட ஓரங்கள் நைந்து போன மடலொன்று.. சேரன் அதை விரித்தான். அந்தக்கரும்புலி தாய்க்கு வரைந்த இறுதியான மடல். தாய்ப்பாசத்தை குண்டு குண்டான அவனது எழுத்துக்களில் காணமுடிந்தது.

".... அம்மா! இறுதியாக எனக்குள்ளே எழுகின்ற ஒரு சின்ன ஏக்கம் கடைசியாக ஒரு தடவை.. ஒரேயொரு தடவை உன்னைக் காணும் பாக்கியம் கிட்டாதா? வீட்டு முற்றத்து மல்லிகைப் பந்தலின் கீழ் உன்மடிமீது தலைசாய்த்தபடி.. கதைகள் பல பேசியபடி நீ குழைத்து ஊட்டிவிடும் ஆனந்தத்தில் திளைக்க விரும்புகிறேனம்மா. ஆனாலும் என் செய்வேன் தாயே? இராணுவ வேலிக்குள் நிற்கும் உன்னிடம் நேரில் வந்து விடை பெறமுடியவில்லையே? என் பிரிவிற்காக கலங்காதே அம்மா...!"

இறுதி வரிகளில் மை கரைந்து கோடு கிழித்திருந்தது. அந்த வீரன் நன்கு அழுதிருப்பான் போலும். அந்த எ்ஃகு மனிதனுள் விரவிநின்ற பாசம் சேரனை மெய்சிலிர்க்க வைத்தது.

கீழே முகவரியைப் பார்த்தான். 'முரளி.. மானிப்பாய், யாழ். கனத்த நெஞ்சோடு அந்தக் கரும்புலியின் விபரங்களைக் குறிப்பெடுத்தான்.

"இராணுவக் கட்டுப்பாட்டினுள் வாழ்ந்த அந்தத்தாய் தன் மகனின் முடிவை கேள்வியுற்றிருப்பாளோ..?"

பத்துத்திங்கள் சென்று விட்டன. ஏனைன் பாதை திறப்புடன் மக்களிடையே தொடர்புகளும் நெருக்கமாகி விட்டன. பெரும்பாலும் அறிந்திருக்கலாம்.

இந்த இறுதி மடல் கூட அவன் தாய்க்கு கிட்டவேண்டிய தல்லவா..!" சேரனுக்கு நெஞ்சம் வலித்தது.

★ ★ ★ ★

எப்படியும் இதனை உரிய முகவரியில் சேர்க்க வேணும். ஆற்றாத அந்தத்தாய் மனதுக்கு சிறு ஆறுதலைத் தானும் அது தரக்கூடும்.!

பிரதான வீதியிலிருந்து பிரிந்த ஒழுங்கையில் மிதிவண்டியைச் செலுத்துகிறான் சேரன். குடியிருப்புகளில் எவ்வளவோ மாற்றங்கள்... முகங்கள் கூட இதுவரை பரிச்சயமில்லா தவையாக இருந்தன. மருதடி விநாயகரை அடையாளம் வைத்து தொண்ணூற்றைந்துக்கு முந்திய ஊரை நினைவிற்கொண்டுவர முயன்றான்.

கோயிலைக்கடந்து செல்ல வீதியோரத்தில் தேநீர்க்கடை யொன்று எதிர்ப்பட்டது. சீர்காழி கோவிந்தராஜனின் காலத்தால் அழியாத பாடல்கள் ரேப்பில் ஒலித்துக்கொண்டிருந்தன. கடைக்காரரிடம் முகவரித்துண்டை காட்டினான்.

"தம்பி நீர் தேடிவந்தி ருக்கிற விலாசத்தில இருக்கி றவை சம்பந்தமாக மேலதிக தகவலேதும் தெரியுமே?' கடைக்காரர் குழப்பத்துடன் கேட்டார்.

"நான் கூட இது வரைக்கும் அவரை நேரில சந்திச்சதில்லை. இப்ப நான் அவசர தேவையொண்டுக்காக குறிப்பிட்ட வீட்டுக்குப் போகவேண்டிக்கிடக்குது."

"வீட்டுக்காரரோட பேரென்ன சொன்னனீர்...?'

அவன் மனப்பாடம் செய்திருந்ததை அப்படியே ஒப்புவித்தான்.

"வேலாயுதர் கவுண்மேந்து உத்தியோகம் பார்த்தவர்.. பதினைஞ்சு வருசத்துக்கு முன்னம் தவறிப்போனார். சலரோகமெண்டு அறிஞ்சனான்."

"பிள்ளைகள் எத்தினைபேர்...?'

"ஒரு மகன் மாத்திரம்"

அண்மையிலிருந்து பறைமேள வொலி அண்மித்து வந்தபடி யிருந்தது. டாண் டணக்கு... டாண். டணக்கு. தொம் தொம்...


"ஆ... அப்படியெண்டால் நீர் தேடுறது ஓவசியர் வேலாயுதம் வீடெண்டு புரியுது"

"நன்றி அண்ண வீடு கிட்டவோ?" மலர்ச்சியுடன் கேட்டான். சில நிமிட மௌனத் தின் பின் கடைக்காரர் சூள் கொட்டினார் "ச்சா எப்பன் பிந்திப்போனீர் தம்பி. ஓவசியர் பெண்சாதி வாதம் வந்து ஒரு மாதம் படுக்கையில கிடந்தவ. காலமைதான் செத்துப்போய்ச்சு. இப்ப கேட்கிற பறைச்சத்தம் அங்கயிருந்துதான் வருகிது" சேரன் காலடியில் பூமி நழுவியது போலிருந்தது.

"ஓ அந்தத் தாய்க்கு இந்தச் சேதியைச் சொல்ல முடியாதவனாகிவிட்டேனே" அவன் மனம் ஹோவெனக் கதறியது.

எதிரே திருப்பத்தில் பறைமுழங்க அந்த இறுதி ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. அதில் ஊரே திரண்டிருந்தது. நாட்டுக்காக உதிர்ந்துபோன தன் மைந்தனின் சாதனைகளைக் கேள்வியுறாமலே அந்த வீரத்தாயின் இறுதி யாத்திரை இவனைக் கடந்து சென்றுகொண்டிருந்தது.

# ஈழத்து இலக்கியப்பரப்பில் 'நந்தி'யின் வெற்றிடம்..!



ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும், சமூக மருத்துவத்துறை நிபுணருமான எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் கடந்த சனிக்கிழமை (04-06-2005) அன்று இயற்கை எய்தியுள்ளார்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் நந்தி என்ற புனைபெயருடன் சிவஞானசுந்தரம் அவர்கள் ஒன்றித்து வாழ்ந்தவர்.

ஒரு மனிதனுக்கு பல்வேறு குணாம்சங்களும், ஆற்றல்களும் பரந்துகிடந்தாலும் இயல்பாக இலக்கிய ஆற்றல் இருக்கும் ஒருவர் மக்கள் முன் வெளித்தெரியத் தொடங்கிவிடுவார்.

அந்த வகையில் திரு நந்தி அவர்கள் மக்கள் மத்தியிலும் கல்விசார் சமூகத்திலும், இலக்கியப் பரப்பிலும் நன்கறியப்பட்டவர்.

திரு நந்தி அவர்கள் ஈழத்தின் சிறுகதை இலக்கியத்திற்கு பங்களிப்பு செய்தவர்களில் முக்கியமானவர்.

அத்துடன் நந்தி அவர்கள் எப்படியொரு வைத்திய நிபுணராகவும் இலக்கிய வாதியாகவும் திகழ்ந்தாரோ இதேபோன்று இலக்கியத்துறைக்குள்ளும் தனித்து சிறுகதை எழுத்தாளராக மட்டுமல்லாது நாவலாசிரியராக, நாடக ஆசிரியராக, அறிவியல் கலைக்கட்டுரை ஆசிரியராக, திரைப்பட நாடக நடிகராக, கலை இலக்கிய சமய பண்பாட்டு பேச்சாளராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தன்னை நிலைநிறுத்தியவர்.

இந்தநிலையில் திரு நந்தி அவர்கள் தன்னுடைய எழுபத்தைந்தாவது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

வாழ்நாள் பேராசிரியராக இருந்து எப்படி ஆற்றல்மிக்க கல்விச்சமூகத்தை உருவாக்கபாடுபட்டாரோ அப்படியே தன்னுடைய எழுத்துக்கள் மூலமாக மக்கள் மத்தியில் விழிப்பு மிக்க கருத்துக்களை விதைத்த அற்புத மனிதர் திரு நந்தி அவர்கள்.

திரு நந்தி அவர்களின் எழுத்துக்களையும், அவரின் கல்விப் பணியையும் நிச்சயம் இந்த மண் மாண்புடன் நினைவு கூர்ந்தபடியே இருக்கும்.

இன்று மறைந்துவிட்ட திரு நந்தி அவர்களின் இழப்பானது ஈழத்து இலக்கியப் பரப்பில் புதிய வெற்றிடத்தை தோற்று வித்துள்ளது.

அந்தவகையில் இயற்கை எய்தியுள்ள திரு நந்தி அவர்களின் இழப்பால் துயருற் றிருக்கும் அவரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

*-சிறி.இந்திரகுமார்-*

# கடல் தானே எங்கள் கனவு

இத்தனைக்குப் பிறகும்
கடல் தானே...
எங்கள் கனவு.
நாங்கள்...
கடல் போல விரிந்த உறவு.

கடலே வீட்டு முற்றமாய்
அலையோசையே தாலாட்டாய்
இடரறியாது இருந்த சொந்தங்கள்
கடற்தாயே...
செய்தார்கள் என்ன குற்றம்?

பொத்திப் பொத்திக் காத்த
பொக்கிஷங்கள் யாவையும்
ஒத்தி எடுத்து விட்டாயே
ஒரு கணப்பொழுதில்?
வாரி வாரித் தந்ததால்

''வல்லரசு''கள் ஆகிய
கடலோர உறவுகளின் வாழ்வில்
மண்ணள்ளிப் போட்ட சாபந்தான்
என்ன?

பஞ்சம் பசி அறியாது
குஞ்சுறால் ஒட்டிமீன்
பிடித்துண்டு
கொஞ்சி மகிழ்ந்த வாழ்வெங்கே?
கடற்தாயே...
என்னம்மா இந்தக் கோரம்?

வெள்ளலை தாலாட்டில்
விழி தூங்கினோம்.
இப்படியும்...
வெள்ளிடி விழுமென்று யார்
எண்ணினோம்?

சுள்ளி பொறுக்கி குருவிகள் போல்
சிறு குடில்கள் கட்டி வாழ்ந்தோம்.
அள்ளிக் கொண்டு போனதென்ன
கொடும் அரக்கனைப் போல?
நம்பித்தானே நாம் வாழ்ந்தோம்
எம்மை ஏன் கொன்றாய்?

இனி ஒன்றும் நிகழாதென்றாலும்
ஏற்க மறுக்குது நெஞ்சம்.
கடலம்மா நீயே காப்பாற்று!
இத்தனைக்குப் பிறகும்
வலை கொண்டு வருகின்றோம்
வாழ வைப்பாய் என்று நம்பி!

ஒத்தி எடுத்த கடற்தாயே
எம்மை வாழ்வில்...
குத்தி நிமிர்ந்து கோபுரமாய்.
மீண்டும் துளிர்க்கும் வசந்தம்.
வலை கொண்டு போகின்றோம்
செல்வ...
மலை கொண்டு வருவோம்
நிலைபெறும் எம் வாழ்வு.
ஏலேலோ ஐலசா....ஏலேலோ ஐலசா...

-வேலணையூர் சுரேஸ்-

## படித்ததில் பிடித்தது

# பலாத்காரக் கட்டவிழ்ப்பு உன்மீதுமா?

தெருவிளக்குகள்
ஈசல்களினால்
பாரிய தொந்தரவு
பட்டுக்கொண்டிருந்தன
என்ன செய்வது சூழ்நிலை
அப்படி.
விட்டு விட்டு
கடிவாங்கும்
நாய்களினதும்
பூனைகளினதும்
ஓலங்கள்....

செவிப்பறைகளை
அதிரவைத்த...
சுடலைக்குருவிகள்....

அவ்வப்போது
கிணற்றில்
எதிரொலிக்கும்
தவளைச் சத்தங்கள்...

ஓ...
இனிய இரவே
பலாத்காரக்
கட்டவிழ்ப்பு
உன் மீதுமா.

தமிழாக்கம்:- இ.றஜித்
ஆங்கிலத்தில்-லோங்.'.பெலோ.

# "எம்மைவிட நிறைய உண்டு..."

இருளுமில்லை
ஒளியுமில்லை
இரண்டும் உள்ளோகிய படிமம்.
நியமமாகி இணைக்கிறதே!
தெரியவில்லையா?
இடைவெளி செறிந்த போலியா?
காற்று அகப்படாத காரணமும்,
அரும்பலின் முகவரியும்,
நமக்கேனடி...?
சற்று வெளியே பார்...!
நம்மைச்சூழ சதிவலைகள்.
வட்டம் விட்டு வெளியே வா.
தெருவாக வாசக விம்பங்கள் பார்
சோபையின்றி, தூக்கலான
இவைகட்கு முகவரி இல்லை.
காற்று பின்னால்,
கவனமாகப்போவோம்!
நம்மை இணைப்பவற்றை
நிஜமாக்குவோம்...!
இது நீளமாகில் காலத்துள் கலப்போம்!

அ.ஜெ.டெனிசியஸ்.

# உன்னை நினைந்துருகும் ஏகப்பெருவெளி

நீ இல்லாத எம்
ஏகப்பெருவெளி இருண்டு கிடக்கிறது.
உன் சக்கரநாற்காலியின் ஓசையின்றி
காற்று வெற்றிடமாய்க் கிடக்கிறது.
வாசலில் வந்து நீ தனித்திருக்கையில்
உன்னோடு அளவளாவும்
மாமரத்துச் சிட்டுக்கள் மௌனித்துப்போய்விட்டன.
உனக்கு உணவுத்தட்டை ஏந்திவரும் நண்பன்
என்றோ நீ எறிந்த தேநீர்க் குவளையை
வெறித்தபடி பார்த்து நிற்கிறான்.
உன் சக்கரம் உருண்டுபோகும் பாதையில்
புற்கள் மட்டும் சிரித்து மகிழ்கின்றன.
உன்னவளைக் கொண்டுவந்து
வாசலில் இறக்கிச்செல்லும் பேருந்து இப்போ
வாசலைக்கடந்து இரைந்தபடி போகிறது.
நீ சுகங்களை உதறிவிட்டபோதிலும்
மற்றவர்கள் சுகமாய் இருக்கவேண்டுமென்றபடி
பல தடவை சுகம் விசாரிக்கும் உன்குரல் இங்கில்லை.
உன்னைக் காணுகின்ற போதெல்லாம்
உறுமுமே அந்தக் குட்டைநாய்
அதுகூட அசையாமற் கிடக்கிறது.
எப்போதாவது மோனம் கலந்து உன்
சுவர்களைத் தாண்டி வெளிவருமே
அந்த இசைச் சுகந்தம்...
அது அற்றுப்போன அழகாகிவிட்டது.
உன் வைராக்கியங்களையெல்லாம் உடைத்துக் கொண்டு
உருண்டு வீழுந்தனவே உன் கண்ணீர்த்துளிகள்...
அவைகூட உலர்ந்துவிட்டன.
உன் பாதங்களுக்கு நகரும் வலுவில்லை. ஆனால்
பேசும் சக்தியிருக்கிறது.
இறுதிவரை... உன்னைப்புரிந்துகொள்ளும்
அறிவை எவரும் வைத்திருக்கவில்லை.
நியாயமான உன் கோபங்களை
யாரும் தாங்கிக்கொள்ளவில்லை.
எஞ்சியிருக்கும் உன் ஆற்றல்களையும்
அழித்துவிடவேண்டுமென்றே துடித்தனர்...
மண்ணுறங்கும் மாவீரர்களுக்கு அப்பால்
உன்போன்றவரையே தலைவன் தன்
உள்ளத்தில் ஏந்தியுள்ளான்.
கலங்காதே... கடமைகளோடிரு...
காலம் கனிந்துவருகிறது. அது
வானத்தையும் உன் வசப்படுத்தும்.
தக்கன வாழுமெனின்...
தகாதன அழிந்தே ஆகவேண்டும்.
காலம் கனிகிறது...
காத்திரு... கனவுகள் மெய்ப்படவுள்ளன.

ஆதிலட்சுமி சிவகுமார்.



# இளைய நாதம்

# கடற் சாமந்திகள்



வெப்ப மண்டலக்கடல்களில் ஆழமில்லாத பகுதிகளிலும் கரையோரங்களிலும் மலர்போல் அசைந்தாடிக்கொண்டிருக்கும் உயிரினம் கடல் சாமந்தி. குழியுடலி பகுப்பில் ஆந்த ஸோவா வகுப்பைச்சேர்ந்த இது ஒரு பெருந்தீனிப்பிராணி.

1முதல் 38செ.மீ நீளம்வரை வளரக் கூடியது.

தரை அல்லது பாறைப்பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் அடிவட்டுப்பகுதி. உருளை வடிவில் குழாய்போன்ற உடல்பகுதி, இதன் மேல் வட்டமாக விரிந்தவாய் வட்டு என்று மூன்று பகுதிகளைக் கொண்டது இது. இந்த வட்டின் மேடான நடுப்பகுதியில் கீற்று போல் வாய் இருக்கும். இதைச் சுற்றி உணர்க்கைகள் பூவிதழ்கள் போல் பல வண்ணங்களில் அமைந்திருப்பதால் இதற்குக் கடல் சாமந்தி என்ற பெயர் வந்தது. இவை எட்டு செ.மீ.நீளம் வரை வளரக்கூடியவை. உணர்க்கையில் கொட்டும் செல்கள் உள்ளன. இதன் மூலம் இரையைக் கொட்டி செயலிழக்கச் செய்து பின்னர் வாய்க்கு எடுத்துச்செல்லும்.

உணர்க்கையில் உரசிச்செல்லும் சிறு மீன்களை எல்லாம் செயலிழக்கச்செய்து வாய்க்குள் தள்ளிவிடும் தன்மைகொண்டது.

ஆனால் டாம்சல் மீன்ற என்ற இனம் மட்டும் இதனுடன் இணைந்து வளரும். இதைத் துப்புரவு செய்வதும் மற்ற மீன்களை இதன் பக்கம் கவர்ந்திழுப்பதும் இந்த டாம்சல் மீனின் பணி.


பார்ப்பதற்கு இது ஓரிடத்தில் நிலைத் திருப்பதுபோல் தோன்றும். ஆனால் உடலையும் உணர்க்கைகளையும் சுருக்கி விரிப்பதன் மூலம் நீரில் சறுக்கிக்கொண்டே நகர்ந்து செல்கிறது.

பொதுவாக இவை கலவி முறையில் இனப்பெருக்கம் செய்யும். இனப்பெருக்க செல்கள் தண்ணீரில் விடப்பட்டு கருவுறல் நடைபெறும். கலவியிலாமுறையிலும் இது இனப்பெருக்கம் செய்யக்கூடியது.

## நகைச்சுவை

*"ஆபிரிக்காவிலுள்ள யானைக்கும் இலங்கையிலுள்ள யானைக்கும் என்ன வித்தியாசம்?"*

*"ஆயிரக்கணக்கான மைல்கள்தான் வித்தியாசம்!"*



## ஓவியத்துக்குள் ஓவியம்



*இந்தத் தாடிக்காரர் ஓவியத்துக்குள் இன்னுமொரு ஓவியம் ஒளிந்துள்ளது, அது என்னவென்று தெரிகிறதா?*

*ஓவியத்திலுள்ள தலைமுடி, தாடி இரண்டை மட்டும் பாருங்கள். ஒரு பெண் குனிந்து துடைப்பத்தால் துடைப்பது போன்று தெரியும் என்ன தெரிகின்றதா?*

## சொற்சிலம்பம் - 90

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சூ | ப் | வ | ம் | ன் | னை | ம் |
| டு | கு | நீ | பா | ந் | மி | பு |
| லி | லா | தி | கோ | னி | ணி | ய |
| ம் | அ | பி | ரி | டோ | சீ | ர |
| செ | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| றா | ப | யா | சா | ஸ் | ரு | ளி |
| டி | ல் | மோ | ன் | கி | த் | அ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 88 இன் விடைகள்

01. அநுராதபுரம்.

02. றொம்மோடி

### சொற்சிலம்பம் - 88 இன் பரிசுக்குரியவர்

ஜீ.ஜெசிந்தன்,
தரம்-05
மு.றோ.க.த.க.பாடசாலை,
முல்லைத்தீவு.

### சொற்சிலம்பம் - 88 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. க.ரூபதரன்,தரம்-03, மு/சிவநகர் த.வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.

02. ஜெ.ஜெய்தீஸ், 20/1கலைப்புலவர்வீதி, யாழ்ப்பாணம்.

03. சி.சியாமளா, குமுழமுனை, முள்ளியவளை.

04. சு.பிரதீபன், இல55, D-8, உருத்திரபுரம்.

05. செ.லவிதன், தரம்-01, யா/குட்டிப்புலம் அ.த.க.பா வசாவிளான்.

06. P.ஜெகன், இல600/43, பிரமந்தனாறு.

07. த.அன்பழகன், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.

08. கு.சரணிகா, சிவநகர், உருத்திரபுரம்.

01. அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க முன்னாள் சனாதிபதியின் பெயர்?

01) ......................................

02. மீன் இனங்களின் பெயர் ஒன்று?

01) ......................................

பெயர் :- ......................................

முகவரி :- ......................................


......................................

......................................

*சொற்சிலம்பம்-90*
*ஈழநாதம்,*
*யாழ்சாலை.*
*கிளிநொச்சி.*

# இட்டப்பந்தயம்...

**பகுதி-08**



# வீடு



## துன்பத்தைக்கண்டு துவண்டு விடாதீர்கள்...

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்படுவது நியதி. அவற்றை பெரிதாக எடுக்காமல் இருப்பது அவரவர் செயல். உலகிலே நம்மைப் போல கஷ்டப்பட்டவர்கள் எவருமே இல்லை என்று நாமே நினைத்துக்கொள்கிறோம். ஆனால் எல்லோருக்குமே கஷ்டங்கள், துன்பங்கள் உண்டு. நம்முடைய கஷ்டமே பெரிது என்று எண்ணி மலைத்துப்போய் விடுகிறோம். எந்தச்செயலையும் செய்யமுடியாமல் அடங்கிவிடுகின்றோம். இதனால் வாழும் நாட்கள் வீணாகிப்போகின்றன.

கஷ்டங்கள் பல வழிகளில் மனிதனை ஆட்கொள்கின்றன. பிரச்சினைகள் வந்து மனிதனின் சந்தோசங்களை அழிக்கின்றன. ஒவ்வொரு நெஞ்சத்தின் ஆழத்திலும் சோகமுண்டு. ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு விதமான கவலைகள், சோகங்கள் உண்டு. இவ்வாறான பல குறைபாடுகளைக் கொண்டு பலர் இருக்கிறார்கள். என்ன தான் மனக் கஷ்டம், பணக்கஷ்டம் வந்தாலும் அவற்றைப் பொருட்படுத் தாதீர்கள். வாழ்வென்றால் போராடும் போர்க் களமே என்று சொல்கிறார்கள். போராடுங்கள் அதைவிட்டு விட்டு நம்மை நாமே நிந்தித்துக்கொள்ளலாமா? நம்மை நாமே நிந்திப்பதால் நமது ஆர்வத்தின் பலம் குன்றி விடுகிறது.

இதனால் நமக்குக் கிடைக்கும் பயன்களின் அளவும் குறைந்து கொண்டு போகிறது. சிறு தீயைக் கொளுத்தினால் அதனால் ஏற்படக் கூடிய சூடு குறைவாக இருக்கும். ஆனால் பெருந்தீயினால் ஏற்படக் கூடிய சூடு அதிகமாக இருக்கும். மனதில் பெரிய கஷ்டம் ஏற்பட்டதும் எதையும் செய்யமுடியாது பல நஷ்டங்கள் ஏற்படும். அவற்றால் தொடர்ந்து தோல்விகளே ஏற்பட வாய்ப்புண்டு. "துன்பங்களைக்கண்டு அஞ்சுபவனிடம் இருந்து வெற்றி விலகுகிறது" எமக்கு பலவீனமிருப்பதாகத் தெரியவந்தால் நாம் அதனை மாற்றிக்கொள்ளப் பாடுபடவேண்டும். கஷ்டத்தைப் பெரிதுபடுத்தாது ஆர்வம் எனும் தீயை கொழுந்துவிட்டு எரியும் படி செய்யவேண்டும். எம்முடைய கஷ்டங்களைக் கண்டு எம்மையே நாம் நிந்தித்துக்கொள்ள வேண்டாம். கஷ்டத்தைப் பெரிதுபடுத்தாது வலுவான ஆற்றலே வெற்றியைத் தரும் என்பதனை நினைவில் வைத்து செயல் புரியவேண்டும். இப்பொழுது ஒரு துன்பம், கஷ்டம் ஏற்பட்டால் பின்னுக்கு ஒரு வெற்றி எப்படியும் வந்தே தீரும். துன்பத்தை, கஷ்டத்தை அனுபவிப்பவர்கள் தான் சாதனை புரிகிறார்கள்.

ஆனால் உங்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை பெரிதாக எடுத்து அதையே நினைத்து வருந்திக் கொண்டிருந்தால் வெற்றி என்பது அற்றுப்போய்விடும். எனவே கஷ்டம் பெரியது அல்ல என எண்ணங் கொண்டு தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றியின் இலக்கை நோக்கிச்செல்லலாம். ஐயோ எனக்கு இப்படிக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டதே என்று எண்ணி சும்மா உட்கார்ந்து இருப்பதனால் எந்தப் பயனும் ஏற்படாது. காலைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்து இருந்தாலும் காலைப் பொழுது விடியத்தான் செய்யும்.

அந்தக்காலையில் நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம். அப்படியே உட்கார்ந்து இருந்தால் இரவு வந்துவிடும். செயல் இன்றி வெறுமனே இருப்பதனால் என்ன பயன் ஏற்படமுடியும். ஒன்றும் ஏற்படாது. நாம் உலகில் பிறந்ததே செயல் புரிவதற்குத்தானே தவிர சோம்பி உட்கார்ந்து காலத்தை கடத்துவதற்கு அல்ல. இதனை நாம் நிச்சயம் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். வாழ்வில் வெற்றி பெற்றவர் எவருமே சும்மா இருந்ததாக வரலாற்றில் காணமுடியாது. "நேரத்தை காலத்தை வீணடிப்பது உங்களையே நீங்கள் கொலைசெய்து கொள்வது போலாகும்". "ஏன் எனக்கு மட்டும் இப்படி நடந்துவிட்டது" என்று எண்ணி மனக்கஷ்டம் அடைந்து சும்மாவே இருந்துவிட்டால் என்ன ஆகும். எத்தனையோ பல இழப்புகளை சந்தித்தவர்கள்தான் சாதனைகள் பல செய்கிறார்கள். கஷ்டத்தைப் பெரிது என்று எண்ணி வாழ்கிறவர்கள் வாழவில்லை. ஆனால் மூச்சுவிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். வாழும் நல்ல நாட்களை வீணடித்துக் கொண்டு இருக்கிறார்கள். என்னதான் ஒரு மனக்கஷ்டம் ஏற்பட்டு அதனால் மனச்சோர்வு ஏற்பட்டால் எங்களால் என்ன செய்யமுடியும். எதுவுமே செய்யமுடியாத விருப்பற்ற நிலைமை ஏற்படும். "நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்ல-கொல்ல வல்ல பொல்லாவினைகளைத் தீர்ப்பதற்கு" இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிப்பதுதான் உலக நியதி.

"இன்பத்தைக்கண்டு மகிழ்ந்து விடாதே துன்பத்தைக்கண்டு துவண்டு விடாதே"

துன்பங்கள், கஷ்டங்கள் பெரிதுஅல்ல என்ற எண்ணம் கொண்டு இனிமேல் செய்யப்போகும் காரியங்களில் ஆர்வத்தை ஊட்டி விருப்புடன் செயற்பட்டால் வாழும் நாட்கள் மகிழ்ச்சியாக அமையும்.

"உனக்கு ஏற்படும் ஒவ்வொரு துன்பங்களும் கஷ்டங்களும் உன்னை உயர்த்திக்கொள்ளும்"

**திருமதி ச.தயாபரநாதன்**

## திட்டமிடலுடன் செயற்படுவோமேயானால் வெற்றி நிச்சயம்



ஒரு குடும்பம் அல்லது ஒரு நாடு சீரான ஒழுங்குபடுத்தல், சீரான நடைமுறையில் வளர்ச்சியடைவதற்கு முகாமைத்துவம் என்கின்ற திட்டமிடல் முக்கிய பங்கு வகிக்கின்றது எனலாம். அதாவது ஒரு மனிதனின் வாழ்க்கையில் குறிக்கோள் இல்லாவிட்டால் அந்த வாழ்க்கை எவ்வாறு மாறிவிடுகின்றதோ, அதே போன்றுதான் திட்டமிடல் ஒன்று இல்லாவிட்டால் குடும்பம், நாடு சீரான நடைமுறையில் அமையாது என்பது தெளிவாக விளங்கும்.

இன்று எத்தனை பேர் தங்களது கடமைகளை அல்லது செய்யப்போகும் வேலைகளை திட்டமிட்டுச் செய்கின்றார்கள் என்பது யாருக்குத் தெரியும். சிலர் திட்டமிடாமல் எடுத்த எடுப்பில் செய்பவர்களும் உள்ளனர். சிலர் நல்ல முறையில் திட்டமிட்டு காரியத்தை செய்து முடிப்பவர்களும் உள்ளனர். இவர்கள் இருவருக்கும் இடையே நிறையவே வேற்றுமைகள் உள்ளன. அதாவது திட்டமிடாமல் செய்பவர் அடுத்த கட்ட வேலைகளை எதிர்பாராமல் ஒரு வேலையை செய்கின்றார். அடுத்த கட்ட வேலை அவருக்கு நெருக்கடியை கொடுக்கிறது. அவசர அவசரமாக வேலைக்குத் தயாராகும் பொழுது பிள்ளைகளின் பிரச்சினைகள் அன்றைக்கெண்டு காலை உணவு தாமதமடைகின்றது என்று வைத்துக்கொள்ளுங்களேன். அன்று அந்த வீட்டில் குழப்பம் ஏற்படக் காரணமாகின்றதல்லவா.

மாறாக திட்டமிடலுடன் மேற்கொள்பவரை பார்த்தால் அடுத்த கட்ட வேலைக்காக நேரத்தை பிரித்து வைக்கின்றார். அவர் அடுத்த கட்ட வேலையிலிருந்து நெருக்கடியை சந்திக்காமல் தன்காரியத்தை நன்மனதோடு நிறைவேற்றுவதோடு தன் வாழ்நாளில் வெற்றிபெறுகின்றனர்.

பாடசாலை ஆசிரியர்களை எடுத்துப்பார்த்தால் அவர்கள் ஆணாகவும், பெண்ணாகவுமிருக்கலாம் அவர்களுக்கு நிறைய பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. காலை எழுந்தவுடன் வீட்டு வேலை, தங்களுடைய தனிப்பட்ட வேலை, அடுத்த நாள் வகுப்பிற்கான பாடத்தை மீட்டுப் பார்ப்பது என ஏராளமான காரியங்கள் இவர்களிடையே தங்கியுள்ளன. ஆகவே இவர்கள் ஒரு திட்டமிடல் முறையில் தங்களின் வேலைகளை மேற்கொள்ளாவிடின் மாணவர்களுக்கு சரியான முறையில் கல்வியை புகட்டாமல் கல்வி குன்றிப்போய் விடும்.

வீட்டில் இருவருக்குமிடையில் சண்டை சச்சரவு என வீட்டிலும் ஒழுங்காக வேலைகள் நடந்தேறாமல் போவதும், இதனைப் பார்த்து அவர்களுடைய பிள்ளைகள் நல்ல மனநிலையுடன் பாடசாலை சென்று கல்வியை கற்காமல் போவதும், இவைக்கெல்லாம் முகம் கொடுத்து விட்டு பாடசாலை செல்வதாயின் மனம் ஒருநிலையில்லாமல் அலைவதும் என ஏகப்பட்ட காரணிகளிடமிருந்து விடுதலை பெறுவதற்கு முகாமைத்துவம்/ திட்டமிடல் என் கின்ற நீண்ட ஊற்று நதி உங்களுக்குக் கை கொடுத்துதவுகின்றது.

எனவே திட்டமிடல் என்கின்ற மாத்திரையை இளமையிலேயே பருகிவிட்டால் அது முதுநிலை வயது வரை எம்முடன் இயல்பாக வந்துசேர்ந்துவிடும். முகாமைத்துவத்துடன் கடமைகளை செம்மையுடன் செய்து செழிப்புடன் வாழ்வோம்.

**மு.கவிதரன்**

## வீட்டு வைத்தியக் குறிப்புகள்

★தேங்காய்ப் பாலால் வாயை நன்றாகக் கொப்பளித்துக் குடித்தால் வாய்ப்புண், குழிப்புண் ஆறிவிடும்.

★சொத்தைப் பல் வலித்தால் அதன் மீது சில சொட்டுகள் கிராம்புத் தைலத்தில் பஞ்சை நனைத்து வைக்கவும். வலி நின்றுவிடும்.

★மாலை வேளைகளில் 45 நிமிடங்கள் வேகமாக நடக்கவும். உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லது. நல்ல தூக்கம் இரவு நேரங்களில் வரவும் இப்பயிற்சி உதவும்.

★இரத்தச் சோகை உடையவர்கள் தினமும் கிரை சாப்பிடவும். தினமும் ஓரிரு பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டாலும் அனீமியா என்கிற இரும்புச் சத்துக் குறைவு சரியாகும்.

★மூக்கடைப்பால் அவதிப்படும்போது சிறிது கடுகு எண்ணெயை மூக்கின் மேல் சூடுபறக்கத் தேய்க்கவும். உடனடியாக நிவாரணம் கிடைக்கும்.

★சிறிது மிளகுப்பொடியை தேன், அல்லது நெய்யில் குழைத்துச் சாப்பிட்டால் சூட்டு இருமல் அடங்கும்.

## தட்டவடை (பருத்தித்துறை வடை)




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| உழுத்தம் பருப்பு | -1/2 சுண்டு |
| கோதுமை மா | -1 சுண்டு |
| செத்தல் மிளகாய்ப்பொடி | -2 தே.க |
| பெருஞ்சீரகம் | -1 தே.க |
| உப்பு | - அளவாக |
| தே.எண்ணெய் | -1/2போத்தல் |
| கறிவேப்பிலை | - அளவாக |

செய்முறை:-

★உழுந்தை இரண்டு மணிநேரம் ஊற வைத்துச் சுத்தம் செய்து மா, மிளகாய்ப் பொடி,பெருஞ்சீரகம், கறிவேப்பிலை யாவற்றையும் ஒன்று சேர்த்து இறுக்கமாகக் குழைக்கவும்.

★மெல்லிய சிறு வட்டங்களாகத் தட்டிப் பொன் நிறமாகப் பொரித்துக் கொள்ளவும்.

**இனி**

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 46 தொடக்கம் 50 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –46**
திருமதி. கமலாவதி அமிர்தலிங்கம்,
இல:-18, 30 வீட்டுத்திட்டம்,
விநாயகபுரம்,
துணுக்காய்.

**பரிசுத்திட்டம் –47**
வி.தர்சினி,
315,ஆனைவிழுந்தான்,
வன்னேரிக்குளம்.

**பரிசுத்திட்டம் –48**
ஸ்ரீ.ஜெயந்தினி,
இல:- 90, குமரபுரம்,
பரந்தன், கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் –49**
அ.ஜீவரஞ்சினி,
யா/சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**பரிசுத்திட்டம் –50**
சி.உதயா,
இசைக்கல்லூரி,
4ஆம் வாய்க்கால்,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—51**

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

வட்டக்கலியில் இருந்த நாட்டுக் கூத்தை படச்சட்டமேடைக்கு கொண்டுவந்தமை போன்று நாட்டுக்கூத்து வடிவங்களில் சிறிய மாற்றங்களை மேற்கொண்டு மெருகூட்டவேண்டும். இதன் ஊடாக நாட்டுக்கூத்துக்கலையை இளையவர்களிடம் ஒப்படைத்து அவர்களை இத்துறை சார்ந்தவர்களாக மாற்ற முடியும். தொலைக்காட்சி இல்லாத வீடுகள் இன்று இல்லை. இந்நிலை மாறி தொலைக்காட்சிகளில் நாடகங்கள் பார்க்காத வீடுகள் இல்லை என்ற அளவிற்கு நாடகங்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாட்டுக் கூத்துக் கலையை தொலைக்காட்சிகளில் தொடராக பல்வேறு வடிவங்களில் ஒளிபரப்பவேண்டிய கட்டாய தேவையுள்ளது.

இவ்வாறு குறிப்பிடுகின்றார் பாசையூர் கலைஞர் அன்ரனி-பாலதாஸ். தென்மோடி நாட்டுக்கூத்து. இசைநாடகம் இவை இரண்டிலும் சமகாலத்தில் நடிகராக, நெறியாளராக, நாட்டுக்கூத்து எழுத் தாளராக இயங்கி வரு கின்றார். நாட்டுக் கூத்து, இசை நாடகம் இவை இரண்டிற்கும் மிகத் திறமையாக நாட்டுக்கூத்துக்களை எழுதுவதற்கு மதுரகவி மிக்கேல்சிங்கம் பெரிதும் உதவி புரிந்தவர் மட்டுமன்றி எனக்கு வழிகாட்டியாகவும் இருந்தவர் என ஆரம்பகால நினைவுகளுடன் இருந்தவரிடம்,

நாம்-: தென்மோடி நாட்டுக் கூத்துடன் இருந்த நீங்கள் இசை நாடகத்திலும் ஈடுபடக்காரணம்

பாலதாஸ்-: நடிகமணி வி.வி. வைரமுத்து குழுவினர் 1965ஆம் ஆண்டு எமது போது அவர்களில் ஒருசிலராவது நாட்டுக்கூத்துக் கலைஞராக வருவார் என்பது எனது நம்பிக்கையாகவுள்ளது என எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியவரிடம்,

நாம்-: குரல் வளமுடையவர்கள் தான் கூத்துப்பாடமுடியும் என்ற நிலையிலுள்ளது. இது தொடர்பாக தங்கள்...

பாலதாஸ்-: முன்பு ஒலிபரப்புச் சாதனங்கள் இல்லை. மத்தளமும் தாளமுமே கூத்துகளிற்குப்பயன் படுத்தப்பட்டது. இவற்றினால் கலைஞர்கள் உரத்துப்பாடவேண்டிய கட்டாயம் இருந்தது. இதற்கு குரல் வள முடையவர்களே தகுதியான வர் களாக இனம் காணப்பட்டனர். 1948ஆம் ஆண்டு முதல் முதலில் மாசிலாமணி-மரியாம் பிள்ளை (சுதிமரியான்) நாட்டுக் கூத்திற்கு ஆர்மோனியம் வாசித்த பெருமைக்குரியவர். ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், தாளம், போலக் போன்ற வாத்தியக் கருவிகளுடன் கூத்து மேடையேற்றப் படுவதினால் இன்றைய நிலையில் குரல்வளம் இல்லாதவர்களும் கூத்துப் பாடலாம். இக் கலைஞர்களிற்கு ஆர்மோனியம் பெரும் பங்காற்று கிறது. இசைக்கருவிகளின் சுப்போட்டம். சின்னத்திரையின் ஆக்கிரமிப்பு வெளிப்பாடே நாட்டுக் கூத்தின் வளர்ச்சிக்குறைவென்று சொல்லலாம். நாட்டுக்கூத்துக் கலையை மக்கள் மயப்படுத்தி எல்லோர் மனங் களிலும் ஊடுருவச் செய்வதற்கு தொலைக்காட்சித் தொடர்களில் நாட்டுக்கூத்தை ஒளிபரப்பவேண்டும். நாட்டுக்கூத்து, இசைநாடகம், சிந்து நடைக்கூத்து இவற்றைத் தொலைக்காட்சித் தொடர்களிற்கு அமைவாக தயாரித்து ஒளிபரப்பவேண்டும். இதற்கான முயற்சிகளை சம்பந்தப்பட்ட வர்கள் மேற்கொள்ளும்போது எம் மாலான உதவிகளை முழுமையாக வழங்கத் தயாராகவுள்ளோம். என்.ரி.ரி. தொலைக்காட்சிச்சேவை இச்செயற் பாட்டினை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எம் போன்றவர்கள் எதிர் பார்த்துள்ளனர். கலையை வளர்க்க வேண்டும், கலை வடிவங்களைப் பாதுகாக்கவேண்டும். கலைஞர்களை கௌரவிக்க வேண்டும். நாட்டுக்கூத்தை புதிய வடிவில் மக்கள் முன்வைக்க வேண்டுமென்ற என்ற வேறுபாடின்றி எல்லோரும் ஒன்றித்து உழைக்கவேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எம்மையும் வளர்த்து எமது கலையையும் வளர்க்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். இளையவர்கள் இதில விருப்பம் வைத்து கூத்துக்கலையை பயில வேண்டும். எனக்கு குரல் இல்லை, நடிக்கவராது என்ற கருத்துக்களை முன்வைத்து காலம் கடத்தாது நாட்டுக்கூத்துக்கலையை வளர்க்க முன்வரவேண்டும் என அண்ணாவியார் பாலதாஸ் பதிலளித்தார்.

நீண்டகாலமாகத்தொடர்ந்தியங்கும் அண்ணாவியார் பல இளம் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். கடந்த கால கலைப் பணிக்காக "இசைநாடக இளங்கோ, யாழ் ரத்தினா, கலைஞான பூசனன், மரபுக்கலைச்சுடர்" போன்ற விருதுகளுடன் பல மேடைகளில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

"கண்டியரசன், கட்டப்பொம்மன், பூதத்தம்பி, தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியர், நீ ஒரு பாறை, சங்கிலியன், தீர்க்க சுமங்கலி, முத்தா மணிக்கமா, வீரத்தளபதி, விசுவா மித்திரர் சபதம், சத்தியவேள்வி, பூத்தயேசு, தாவீது-கோலியாத், அன்பில் மார்ந்து" இவை அண்ணாவியார் எழுதி நெறியாள்கை செய்து பாத்திரமேற்று நடித்த நாட்டுக்கூத்து, இசை நாடகங்களில் குறிப்பிடும் படியானவை. இம்மாதம் சவுலன் சின்னப்பர் என்ற நாட்டுக் கூத்தை பாசையூர் அந்தோனியார் பெரு நாளிற்கு மேடையேற்ற



# 'கூத்து' தொலைக்காட்சிக்கு மாறவேண்டும்

## அண்ணாவியார் அன்ரனி பாலதாஸ்

ஆர்மோனியம் வாசிக்கும் சிறப்பு பெற்ற கலைஞர் பாலதாஸ் தனது எட்டாவது வயதில் கலைத்துறைப் பாதையில் கால் வைத்து கடந்த 55வருடங்களிற்கு மேலாக பயணித்து வரும் அனுபவ மிக்க நாட்டுக்கூத்து அண்ணாவியார். கரையோரக் கிராமங்கள் நாட்டுக்கூத்துக் கலைக்குப் பெரும் பங்காற்றியுள்ளன. தொடர்ந்தும் பங்காற்றி வருகின்றன. பாசையூர் தந்த கலைஞர்களில் பாலதாஸும் ஒருவர். நேர்காணலிற்காக கலைஞரை அவரது வீட்டில் சந்தித்தோம். கலைஞர் தந்த சுவையான குளிர் பானத்தை பருகிக்கொண்டு நேர்காணலை ஆரம்பித்தோம். கலைஞர் பகிர்ந்த கருத்துக்களுடன் வாசகர்களை சந்திக்கிறோம்.

நாம்-: கலைத்துறைப் பிரதேசம் தொடர்பாக...

பாலதாஸ்-: எமது பகுதியில் தொடர்ச்சியாக நாட்டுக்கூத்துக்கள் போடுவார்கள். அவற்றை பார்த்து மகிழ்ந்த காலத்தில் கண்டியரசன் நாட்டுக்கூத்தில் நடித்தேன். தொடர்ந்து பல நாட்டுக்கூத்துக்களில் பல்வேறான பாத்திரங்களில் நடித்து வந்தேன். என் பதினெட்டாவது வயதில் "நீ ஒரு பாறை" என்ற நாட்டுக்கூத்தை எழுதி நெறியாள்கைசெய்தேன். தொடர்ந்து நாடகங்களை எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. "அனைத்தும் அவரே" "பத்திரிசியார்" போன்ற கூத்துக்களை எழுதியதுடன் இன்று வரை நாட்டுக்கூத்துக்களை எழுதி நெறியாள்கை செய்துவருகிறேன். நான் பகுதியில் பல இசை நாடகங்களை மேடையேற்றினர். இதில் அரிச்சந்திர மயான காண்டத்தைப் பார்த்த பின்பே எனக்கு இதன்மேல் ஆர்வம் ஏற்பட்டது. சோக சோபித சொர்ணக் குயில் வி.கே.இரத்தினம் இசை நாடகத்திற்கான இராகங்களை சொல்லித் தந்து கண்டியரசன் நாட்டுக்கூத்தை இசைநாடகமாக மாற்றி எழுதினோம். இசைநாடக இராகங்களுடன் சினிமாப் பாடல்களையும் இணைத்து நாடகங்களைப் போட்டனாங்கள். இப்பணிக்கு எனக்கு பேருதவி புரிந்தவர் காலமான கலைஞர் அன்ரசன் என்று இவ்விடத்தில் கூறவேண்டிய கடப்பாடுள்ளது.

கண்டியரசன், மாணிக்கப்பறன், சங்கப்புலிக் காவலன், தீர்க்க சுமங்கலி எனப்பல இசைநாடகங்களை மேடையேற்றியுள்ளேன். என்னுடன் இணையும் கலைஞர்களது பூரண ஒத்துழைப்புடன். என எழுத்தாளர், நெறியாளர் என்ற பக்குவ நிலையில் பதிலளித்தவரிடம்,

நாம்-: சிறுவர்களைக் கொண்டு பல கூத்துக்களை மேடையேற்றியதாகக் கூறப்படுகிறது. அதுபற்றி...

பாலதாஸ்-: பாடசாலைகளில் கீழ்ப் பிரிவு மாணவர்களைக் கொண்டே கூத்தை பழக்கி மேடையேற்றி வருகிறேன். பாடசாலைகளிற்கு இடையிலான போட்டிகளிற்கு ஆசிரியர்களின் அழைப்பை ஏற்று பல பாடசாலை மாணவர்களிற்கு கூத்தைப் பழக்கியுள்ளேன். சின்ன வயதில் சரியாகச் சொல்லிக்கொடுக்கும் பங்களிப்பு பேருதவி புரிவ தால் ஆர்வமுள்ள இளைஞர்கள் பாடுகிறார்கள் என நியாயத் தன்மையை தெளிவு படுத்தியவரிடம்,

நாம்-: கூத்துக்கலையில் நவீனத்துவம் புகுத்தப்படுகின்றதாகக் கூறப்படுகின்றது இதுபற்றி...

பாலதாஸ்-: பாரம்பரியங்கள், நெறிமுறைகளை மாற்றாது அரங்க அசைவியக்க உத்திகளுடன் இராக,

**— இரா-வின் —**

தாள, சொற்கட்டுக்களை ஒன்றிணைத்தான கலைவடிவங்களைக் காணமுடிகிறது. இன்றைய நவீன யுகத்திற்கு இப்படியான கூத்து வடிவங்களை மேடையேற்றவேண்டிய தேவையுள்ளது. கலைத்துறையில் பல்வேறு பரிமாணங்களில் இயங்கி வரும் தோ.ஜோண்சன் ராஜ்குமாரின் "கொல்ஈனும் கொற்றம்" பேராசிரியர் மௌனகுருவின் "இராவணேசன்" போன்ற கூத்துக்களை குறிப்பிட முடியும். இவ்வாறான கூத்து வடிவங்களில் ஏனையவர்களும் ஈடுபட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் பதிலளித்தவரிடம்,

நாம்-: கூத்துக்கலையின் இன்றைய நிலை தொடர்பாகக் கேட்ட...

பாலதாஸ்-: இந்த ரீ.வி வந்ததால நாட்டுக்கூத்தின் விருப்பம் குறைஞ்சு போச்சு. சின்னப் பிள்ளைகளிற்கும் இளைஞர்களிற்கும் இழுவைப்பாடல்கள் பிடிப்பதில்லை. ஆனால் அவற்றை நாங்கள் குறைச் ஆதங்கத்தை வெளிப் படுத்திய வரிடம்,

நாம்-: நாட்டுக்கூத்துக் கலைக்கும்-கரையோரக் கிராம மக்களிற்கும் இடையேயான இன்றைய நிலை தொடர்பாக...

பாலதாஸ்-: நாட்டுக் கூத்துக் கலையை வளர்த்தவர்களும், அதனை பேணி பாதுகாத்தவர்களும் கரையோரக்கிராமத்தவர்கள்தான். கடந்த கால யுத்தத்தினால் அரங்குகள், வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதுடன் கரையோரப்பிரதேசங்களில் அநேகமானவை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதைவிட நேரங்களை அதிகமாக்கி கூத்துக்களைப் போடமுடியாது. பாசையூர் அழகையா முத்தமிழ் அரங்கும் வேறுசில அரங்குகளையும் இராணுவம் ஆக்கிரமித்துள்ளமையால் நாடகம் போட இடமில்லாமல் உள்ளது. இராணுவம் வெளியேறினால் எமது பகுதி மக்கள் வருவார்கள். இடங்கள் வெளியாகும். நாடகங்களைப் போடலாம், கூத்துக்கலையை பழைய நிலைக்குக் கொண்டுவரலாம். முன்பு கடலிற்குள் மேடை அமைத்து இந்திர விழா நடாத்திய பெருமைக்குரிய நாங்கள், இப்பொழுது அவற்றை நினைக்க முடியாதுள்ளதென அமைதியானவரிடம்,

நாம்-: இத்துறை சார்ந்தவர்களுக்கு நீங்கள் கூறுவது...

பாலதாஸ்-: நாம் எமது தனித்துவத்தை இழக்கக்கூடாது. அவ்வாறே எமக்கான கலைவடிவங்களையும் பேணி வளர்க்கவேண்டும். இதற்கு மூத்த, இளைய கலைஞர்கள் வுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைத்துறையில் இவ்வாறானதொரு நிலையில் நின்று பணியாற்றுகின்றமைக்கு எமது மனைவியின் அர்ப்பணிப்பு பேருதவி யாகவுள்ளதென அண்ணாவியார் குறிப்பிடுகின்றார்.

கலைத்துறையில் அரை நூற்றாண்டிற்கு மேலாக இயங்கி வரும் அன்ரனி-பாலதாஸ் அண்ணாவியார், எழுத்தாளர், நெறியாளர், ஆர்மோனியக் கலைஞர்களிற்கு அப்பால் அரசன், தளபதி, யமன் போன்ற பாத்திரங்களால் அரங்கை அலங்கரித்த பெருமைக்குரியவர். கம்பீரமான தோற்றத்துடன், வீரவசனப் பாடல்களுடன் இவர் ஏற்கும் பாத்திரங்களைப் பார்க்கும்போது அக்கதைகளிற்குரிய கதாநாயகர்களையே இவரது நடிப்பில் காணமுடியும்.

நாட்டுக்கூத்து கலை தொடர்பாக பல கருத்துக்களைப்பெற்ற நிறைவில் செவ்வியை நிறைவு செய்யும்போது 1000 தடவைகள் மேடையேறிய தீர்க்க சுமங்கலி இசை நாடகத்தில் அண்ணாவியார் யமனாக தோன்றும் காட்சியில் இடம்பெற்ற,

நடமிடும் சுடலை கூத்தன்-அங் கணல்
ஆளுமே பார்த்தன்.
இட்டது கட்டளை கொண்டே உடல்
உயிர் துணித்திடும் கூற்றன்.

இப்பாடலை மிக லாவகமாக கம்பீரமான குரலில் பாடி எம்மை மகிழ்வித்ததுடன் செவ்வியையும் நிறைவசெய்தார் அண்ணாவியார் பாலதாஸ்.

# திறன்களை அடிப்படையாகக்கொண்ட கற்பித்தல் முறைமை

கற்றற் பொருளை அறிமுகம் செய்தல், விளக்குதல், மேற்கோள் காட்டுதல், செய்துகாட்டுதல், புறநடைகளைக் காட்டுதல், ஒப்பிட்டுக் காட்டுதல், கருதுகோள் வடிவிலே விளக்குதல், சூத்திர வடிவிலே விளக்குதல், அகல்விரிபண்புடையதாகப்புரிய வைத்தல், கருத்துடன் இணைந்து செல்லல், தொகுத்துக் கூறல் என்ற பல்வேறு செயற்பாடுகள் கற்பித்தலின் போது கையாளப்படுகின்றன.

கற்பித்தல் திறன்களை (Skills) பகுத்தாராயும் முயற்சிகள் கலிபோர்னியாவில் உள்ள ஸ்ரன்போட் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டன. அவர்களின் ஆய்வுகளில் இருந்து குறித்துரைக்கப்பட்ட பின்வரும் திறன்கள் ஆசிரியர்களுக்கு மிக்க பயனுடையவை.

1.தூண்டிகளை வேறுபட்ட முறைகளில் வழங்குதல்.

2.பாடத்தைக் கவர்ச்சியான முறையிலே அறிமுகம் செய்தல்.

3. கவர்ச்சியான முறையிலே நிறைவுசெய்து வைத்தல்.

4. மௌனத்தினாலும் சைகைகளினாலும் பொருள் பொதிந்த தாக்கங்களை ஆசிரியர் உருவாக்குதல்.

5. மாணவர் பங்குபற்றுதலைத் தூண்டுதலும், மீள வலியுறுத்தலும்.

6.வேறுபட்ட வினாத்தூண்டிகளை வழங்குதல்.

7.பொருத்தமான விடைகளை காண்பதற்குரிய வினாக்களை இணக்குதல்.

8. அறிவின் உயர்ச்சியை முன்னெடுக்கக் கூடிய வினாக்களைத் தொடுத்தல்.

9.விரிசிந்தனைக்குரிய வினாக்களை அமைத்தல்.

10.மாணவரின் துலங்கல் நடத்தைகளை இனங்கண்டு நெறிப்படுத்துதல்.

11.விளக்குதல்.

12.விரிவுரை செய்தல்.

13.உரையாடலை வளர்த்தல்.

14.திட்டமிட்ட ஆற்றுகை செய்தலும் மீள் ஆற்றுகைசெய்தலும்.

மாணவர்களின் இயல்புக்கும் பாடப்பொருளுக்கும் ஏற்ற வகையில் பொருத்தமான திறனைத் தெரிந்தெடுத்து ஆசிரியர் பிரயோகித்தல் வேண்டும். பாடத்தை அறிமுகம் செய்யும்பொழுது மாணவரின் முன்னைய அறிவு, அவர்களின் திறன்கள், உளப்பாங்கு என்பவை கருத்திலே கொள்ளப்படல்வேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியரது ஒவ்வோர் அசைவும் பொருண்மை கொண்டதாக இருத்தலே சிறந்தது. ஆசிரியரின் அங்க அசைவுகள் யாவும் பொருள் பொருந்தியதாக இருப்பதுடன், ஒரே அசைவை ஆசிரியர் மீண்டும் மீண்டும் பிறப்பித்தல் அவலட்சணமாகிவிடும். ஆசிரியரின் குரல் கருத்துக்கேற்றவாறு உயர்ந்தும் தாழ்ந்தும் கவர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களுடன் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் இடைவினைகள் ஒரேவித சலிப்பூட்டுவதாய் அமையாது வேறுபட்டதாயும், அறிவுச் சுவையூட்டுவதாயும் இருத்தல்வேண்டும்.

பாடத்தை முன்னெடுத்துச் செல்லுகையில், ஓர் அருவி பாய்தல் போன்று தொடர்ச்சியாக இருத்தல் அவசியமானது. பாடத்தின் பிரதான கருத்திலிருந்து நெகிழ்ந்து செல்லலாம். ஆனால் விலகிச்செல்லலாகாது. சில சந்தர்ப்பங்களில் மாணவரின் பங்குபற்றலின் பொருட்டு சிறிதளவு விலகலை ஏற்படுத்துதல் உண்டு.

பாடத்தொடர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் புலமையும், மொழியாட்சியும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. மாணவர்கள் பொருத்தமான வினாக்களை எழுப்பும் பொழுது அவர்கள் திருப்தி கொள்ளும்வரை போதுமான விளக்கங்களை கொடுத்தல்வேண்டும். ஆசிரியரின் அறிவுப்பலமும், கருத்தாழமும் இங்கு முக்கியமாக வலியுறுத்தப்படுகின்றன. அறிவுப்பலம் இருக்கும்பொழுதுதான் ஆசிரியருக்குத் தன்னம்பிக்கை பிறக்கும். தன்னம்பிக்கை இல்லாவிடில் வகுப்பறையின் ஒழுங்கு குலைந்துவிடும்.

ஒரே சொற்றொடரை மீள மீளப் பிரயோகித்தலும், வசனங்களை நிறைவுசெய்யாது அரைகுறையாக விடுதலும் ஆசிரியரின் மொழியாட்சி வறுமையைக் காட்டும். பாடவளர்ச்சியின் பொழுது பொருத்தமான புதிய சொற்களை அறிமுகப்படுத்தலும் ஆசிரியரின் பொறுப்பாகின்றது. கலைச்சொற்களைக் கலைச்சொற்களாகவே பயன்படுத்துதல்வேண்டும்.

கற்பித்தலின்போது பயன்படுத்தும் நொதுமலான சொற்பிரயோகங்களும் மீண்டும் மீண்டும் அவற்றை ஒலிப்பதும் வினைத்திறனை நலிவடையச்செய்யுமு.

எளிதாகக் கற்பிக்கக்கூடிய ஒருவிடயத்தை சிக்கலாக்கி, அதிக பிரயத்தனமெடுத்து ஆரவாரப்படுத்திக் கற்பித்தலும் திறன்கொண்ட கற்பித்தலாகக் கருதப்படமாட்டாது.

பொருத்தமான துணைச் சாதனங்களைப் பயன்படுத்தலும், கற்பித்தலுக்குரிய பொறிகளை இயக்கத் தெரிந்திருத்தலும் மேலதிக திறன்களாகக் கருதப்படும்.

பாடத்தை முடித்து வைத்தல் என்ற செயல்முறையின் முக்கியத்துவத்தை ஒவ்வோர் ஆசிரியரும் உணர்ந்திருத்தல் வேண்டும். படித்த பாட அலகுகளின் தொகுப்பை அல்லது சாராம்சத்தை மட்டும் கூறுவதோடு நின்றுவிடாது அந்தந்தத் துறையில் மேலும் கற்கச் செய்யும் தூண்டுதலையும் அளிக்கும் வகையில் பாடநிறைவு அமைதல் வேண்டும். ஆர்வத்தைத் தூண்டும் முடிவாக ''தேடல் முடிவு'' குறிப்பிடப்படும்.

முழுமையான ஒரு கற்பித்தற் செயற்பாடானது ஏழு படிகளைக் கொண்டதாக அமையும்.

1.இலக்கு வடிவமைப்பு (object)

2.தயாரித்தல் (Preparation)

3.வழங்குதல்:சமர்ப்பித்தல் (Presentaion)

4.உபசரித்தல் (Reception)

5.இணைத்தல் (Assimilation)

6.மதிப்பீடு செய்தல் (Assessment)

7.பின்னூட்டல் (Fed Back)

1. முழுக்கற்கை நெறி தொடர்பான இலக்குகள், குறித்த பாட இலக்குகள் முதலியவை பற்றிய தெளிவை முதலிலே ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

2. தயாரித்தல் என்பது மிகவும் விரிவானதும், பொறுமையுடனும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல் முறையாகும். இது பின்வரும் படிநிலைகளைக் கொண்டதாக அமையும்.

2.1. கற்பிக்க வேண்டிய பிரதான அம்சங்களை தெரிவுசெய்தல், அடிப்படையான எண்ணக்கருக்கள், தரவுகள், விளக்கங்கள் முதலியவை இவற்றில் உள்ளடக்கப்பட வேண்டியிருப்பதுடன் நவீன வளர்ச்சிகளும் ஒன்றிணைக்கப்படல் இன்றியமையாதது.

2.2 தொடரியம் என்பது அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. இது பின்வரும் இயல்புகளைக் கொண்டதாக இருத்தலே சிறந்தது.

அ) தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லல்.

ஆ) எளிதிலிருந்து சிக்கலுக்குச் செல்லல்.

இ)உருவத்திலிருந்து அருவத்திற்குச் செல்லல்.

ஈ) தனிப்பொருளில் இருந்து பொதுமைக்குச் செல்லல்.

உ) காண்பவற்றிலிருந்து காரணங்காணலுக்குச் செல்லல்.

ஊ) பகுதியிலிருந்து முழுமைக்கும், முழுமையிலிருந்து பகுதிக்கும் செல்லல்.

2.3. பாடப்பொருளுக்குரிய பொருத்தமான கற்பித்தல் முறையியலைத் தெரிவு செய்தல்.

2.4. கற்பிக்கும் நேர ஒழுங்கைத் திட்டமிடல்.

2.5. மாணவர் ஏற்கனவே பெற்ற அறிவை அறிந்து அதற்கேற்றவாறு பாடத்தை ஒழுங்கமைத்தல்.

2.6. பயன்படுத்தப்படவுள்ள துணைச்சாதனங்களைத் தெரிவு செய்தல்.

3. வழங்குதல் என்பது சமர்ப்பித்தல் என்றும் குறிப்பிடப்படும். ஆசிரியரின் உளநிலையே வழங்குதலின் கவிநிலையாகிறது. அறிவுத்திறனும், ஆட்சியும், கவர்ச்சியும் ஒன்றிணைந்து செயற்படல்வேண்டும். குறித்த நேரத்தில் தொடங்குதலும் குறித்த நேரத்தில் முடித்தலும் வழங்குதலை வளமாக்கும். பின்வருவனவற்றில் ஆசிரியர் தொடர்ந்து கவனம் செலுத்துதல் வேண்டும்.

3.1. குரல் வளம்:- தெளிவு, ஒத்திசைவு, பிசிறல் இன்மை, அழுத்தம் கொடுத்துப் பேசுதல் முதலியவை குரல் வளத்தில் இடம்பெறும்.

3.2. பார்வை:- முழுவகுப்பையும் பார்த்துப் பேசுதல்வேண்டும்.

3.3 கவனக் கலைப்பான்களின் ஆசிரியர் ஈடுபடலாகாது.

3.4 கம்பீரமாக நிற்றல் வேண்டும். சரிதல், குனிதல், சாய்தல் என்பன தவிர்க்கப்படல்வேண்டும்.

3.5 உற்சாகத்துடன் இயங்குதல் வேண்டும்.

4. உபசரித்தல் மாணவரின் ஈடுபாட்டை அனுசரித்துச் செல்லலாகும். பொருத்தமான பாராட்டுக்கள், பொருத்தமான முன் மொழிவுகள், மாணவரின் துலங்கலை ஏற்றல் முதலியவை உபசரித்தலை மேம்படுத்தும்.

5. இணைதல் என்ற செயற்பாடானது, ஊக்கல் நிலைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள் கவனஈர்ப்புடன் புதிதாகக் கற்றவற்றை தமது அறிக்கை அமைப்புடன் இணைத்து தேவைக்கேற்றவாறு உபயோகப்படுத்தக்கூடியவாறு களஞ்சியப்படுத்தலைக் குறிக்கும்.

பின்வருவன ''இணைதல்'' என்ற உளச்செயற்பாட்டுடன் இணைந்துள்ளன.

5.1. கருத்துள்ளவையாகவும், விளக்கமுள்ளவையாகவும் கற்பனை அமைதல்வேண்டும்.

5.2. கற்றல் மகிழ்ச்சியானதாகவும், அறைகூவல் விடுப்பதாகவும், வியப்புத் தனிமங்களைக்கொண்டதாகவும், உசாவல் விருப்பைத் தூண்டுவதாகவும் இருத்தல்வேண்டும்.

5.3. அறிவைத் தூண்டவும், துலங்கவும் செய்யும் வினாக்களை உள்ளடக்கிய கற்பித்தல் இணைதலுக்குத் துணை செய்யும்.

5.4. பொருத்தமான குறிப்புக்களை எடுத்தல், இணைத்தலை இலகுவாக்கும்.

5.5. உசாத்துணை நூல்களைப் பயன்படுத்துதல். இத்தொடர்பில் முக்கியமானதாகும்.

5.6. பாடத்தை நிறைவுசெய்யும் செயற்பாட்டில் ஆசிரியர் வழங்கும் தொகுப்புரையும் நிறைவுக் குறிப்பும் இணைத்தலுக்கு உறுதுணையாக இருத்தல்வேண்டும்.

6. மதிப்பீடு இரு பரிமாணங்களைக் கொண்டது. ஒரு ஆசிரியர் மேற்கொண்ட கற்பித்தலின் வெற்றி தோல்விகளை அறிய அது உதவி செய்கின்றது. மறுபுறம் மாணவரின் அடைவுகளை அறிந்து கொள்ள அது துணைசெய்கின்றது.

7. மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு பின்னூட்டல் வழங்கப்படும்.

வெற்றிகரமாக ஒரு பாடத்தைக் கற்பித்து முடிந்த பின்னர் ஆசிரியரிடத்து ஏற்படும் மன நிறைவும், மகிழ்ச்சியும் வேறு துறைகளில் இருந்து கிடைக்கப்பெறாத தனித்துவம்மிக்க மகிழ்ச்சியாகவும், மனப்பதிவாகவும் இருக்கும். பாடத்தின் முடிவில் குறித்த பாடம் தொடர்பான மன நிறைவு ஆசிரியருக்கு ஏற்படாவிட்டால் தனது கற்பித்தலை ஆசிரியர் மனங்கோணாது மீளாய்வு செய்தல்வேண்டும். ஆசிரியரது திருப்தியும், மனநிறைவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலேயே தங்கியுள்ளது.



## இனியவள்

### பெண் சமத்துவம் எட்டப்படுவது எப்போது?

பால் சமத்துவம் பற்றி இன்று பேசாத நாடுகளே இல்லை எனும் அளவுக்கு பெண்விடுதலைப் பயணம் முன்னெடுக்கப்படுகின்றது. ஐ.நா. அமைப்பில் கூட பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கும், அவர்களின் முன்னேற்றத்திற்குமான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பெண்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் குறிப்பிடக்கூடியளவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஐ.நா சாசனத்தின் கீழ் பெண்களிற்குள் மனித உரிமை அம்சங்கள் மறுக்கப்பட்டால், அவர்கள் இப்போது தமது முறைப்பாட்டை ஐ.நாவுக்கு எடுத்துச்சென்று நீதியைப் பெறமுடியும்.

உலகிலுள்ள 189 நாடுகளில் 166 நாடுகள் ஐ.நா மனித உரிமை சாசனத்தை ஏற்றுக்கொண்டு பெண் விடுதலையை அங்கீகரித்துள்ளன. சில முஸ்லிம் நாடுகள் அடங்கலாக ஏனைய சில நாடுகள் இச் சாசனத்தில் ஒப்பமிடாமை வருந்தத்தக்கது.


மனித உரிமைகளையும், பெண் உரிமைகளையும் ஏற்றுக்கொண்ட நாடுகள் சிலவற்றில் கூட அதன் அமுலாக்கம் திருப்திகரமாக இல்லை என்பதை ஐ.நா சுட்டிக்காட்டுகிறது. மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் பெண்கள் தமது மனித உரிமைகளை அனுபவிக்கத் தகுதியானவர்கள் அல்ல என்பது போல சில ஒப்பமிட்ட நாடுகள் கூட செயற்படுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டளவில் நாடாளு மன்றங்களில் 50க்கு 50 பெண்கள் இடம்பெறவேண்டும் என்ற இலக்கை எந்த ஒரு நாடும் எட்டவில்லை என்பது வேதனைக்குரியது. பெண்களின் உரிமைகள் சட்டங்கள் மூலம் அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தும் அதேவேளை சமூக மட்டத்தில் மனித மனங்களில் பால் சமத்துவ அங்கீகாரம் ஏற்படுத்தப்படுவதும் சமகாலத்தில் முன்னெடுத்துச் செல்வதன் மூலமே பால் சமத்துவத்தை எட்ட முடியும்.

குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகளில் குடும்ப அலகுகளிலிருந்தே பெண்விடுதலையும் பால் சமத்துவமும் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். மரபுகளை உடைத்துக்கொண்டு சமத்துவத்தை ஏற்படுத்தல் என்பது சாமான்ய காரியமல்ல. எனினும் மனம் தளராது பெண் விடுதலை ஆர்வலர்கள் செயற்பட்டால் நிச்சயமாக இலக்கை எட்டமுடியும்.

ச.முருகானந்தன்

# இலக்கியப்பகிர்வு

# நந்தி



ஈழத்தின் சிறப்பு மிக்க படைப் பாளிகள் மறைந்துவரும் சூழல். சோகம் ததும்பும் தொடர்கதையாக இது அமைந்துவிட்டது. மிக அண்மை யில் வீரியம் மிக்க படைப்பாளியான செம்பியன்செல்வன் அவர்களை இழந்த வேதனையை ஆற்றுப்படுத்த முன்னரே நந்தி அவர்கள் மறைந்து விட்டார்கள்.

நந்தி என இலக்கிய உலகிலும் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் என மருத்துவத்துறையிலும் நன்கு அறியப்பட்ட அந்த ஒப்பற்ற மனிதரின் பிரிவு மிகச் சாதாரணமானதல்ல. ஒரு படைப்பாளியை மாத்திரம் நாங்கள் இழக்கவில்லை. ஒரு மருத்துவத் துறைப் பேராசிரியரை, நல்ல வழி காட்டியையும் நாங்கள் பறிகொடுத்து விட்டோம்.

1947இல் "சஞ்சலமும் சந் தோசமும்" என்ற சிறுகதையை வீரகேசரியில் எழுதியதன்மூலம் இலக்கியத்துறைக்கு வந்த நந்தி அவர்கள் அண்மைக்காலம்வரை காத்திரமான படைப்பாளியாகவே இருந்துள்ளார்.

ஊர் நம்புமா?, கண்களுக்கு அப்பால் போன்ற சிறுகதைகளை யும், மனைக்கொழுந்து, தங்கச் சியம்மா, நம்பிக்கைகள் என்கின்ற நாவல்களையும், குரங்குகள் என்ற நாடக நூல்களையும் தந்தவர்.

இது தவிர பல்வேறு மருத்துவத் துறை சார்ந்த நூல்களையும் துறை சார்ந்தவர்களுக்கும், ஏனையவர் களுக்கும் தந்தவர்.

தனது ஈழத்து சிறுகதை வர லாறு என்னும் நூலில் செங்கை யாழியான் அவர்கள் நந்தி தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஈழத்தின் சிறுகதை இலக்கி யத்திற்குப் பங்களிப்புச் செய்தவர் களில் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் என்ற நந்தி குறிப்பிடத் தக்கவர். கலை, இலக்கியம்சார்ந்த பல்வேறு துறைகளிலும் தனது ஆக்கத்திறனைச் செப்பமாகப் பதித் திருக்கும் நந்தி, ஒரு நாவலாசிரியர், சிறுகதைப் படைப்பாளி. நந்தியின் முதலாவது சிறுகதை 'சஞ்சலமும் சந்தோசமும்' வீரகேசரியில் 1947 களில் வெளிவந்தது. ஈழகேசரியில் அவர் எழுதிய புத்தாகேபொத், சுதந்திரனில் எழுதிய விசித்திர மூக்குக்கண்ணாடி ஆகிய சிறு கதைகளைப் படித்தபோது ஏற்பட்ட அவநம்பிக்கை, 1950-1960 காலகட் டத்து சிறுகதைகளைப் படிக்கும் போது பெரு வியப்பாக மாறுகின்றது. கதையும் சாமியாரும், கிழவனும் கிழவியும், பச்சைப்பூக்கள், பார்த்தால் தெரியும், பாவதரிசனம், ஆசையின் ஓசை, காதலுக்கு மருந்து, ஊர் நம்புமா? கணவன், கண்ணாடி, மாமா (பத்தினி), அதிகாரி, நூலைப்போல, மிஸ்எகிர்தம், பூச்சட்டை, கல்லோ- கடவுளோ முதலான சிறுகதைகள் அவர் முற்போக்குக் காலகட்டத்தில் எழுதிய படைப்புகள். இவை தினகரன், வீரகேசரி, காதல் ஆரகதம், வசந்தம் முதலான சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. நந்தியின் எழுத் தில் நிலைபெற்ற சத்தியமும், ஆன் மாவின் உள்ளுணர்வும், எல்லையற்ற இரக்கமும் கலந்துறவாடுகின்ற ஆடம்பரமற்ற ஆனால் அழுத்தமும் வேகமும் நிறைந்த ஓர் உரைநடை யிலே நந்தி படைத்த சிறுகதை களுள்ளன. நந்தி ஒரு மருத்து வர். அவரது படைப்பியல் தொழிற்பாட்டுக்கு வேண்டிய சக்தி யாக தளமாக அது அமைந்துள்ளது. நந்தியின் சிறுகதைகளில் மனித இன்னல், மனிதஅவலநிலை, அருந்தற்பாடு உள்ளீடாகவும் நேரடி யாகவும் எடுத்துப்பேசப்படுகின்றன.

நந்தியின் ஆரம்பகாலகட்டத்துப் படைப்புகளை நோக்கும்போது அவை பொதுவாக தனி மனித-குடும்ப-சமூக உறவுச் சூழல்களில் நிகழும் உணர்வுச் சூழல்கள், ஆசாபாசங்கள் புறநிலையாகப்புலப்படும். முரண்பாடு கள் போலித்தன்மை முதலியவற்றை கதையம்சங்களாகக் கொண்டுள்ள மையை அவதானிக்க முடிகிறது"

நம்பிக்கைகள் என்ற நந்தி அவர்களின் நாவலுக்கு முன்னுரை எழுதிய காலம்சென்ற இலக்கியப் பெருமான் சொக்கன் குறிப்பிடும் பின்வரும் வரிகள் நந்தி அவர்களின் சிறப்பினை எமக்குக் காட்டுகின்றன.

"புதிய சொல்லாட்சிகள், புதிய உவமைகள், புதுமையான கற்பனை கள், வருணனைகள் என்பன நந்தி யின் புத்தகத்திறனுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஒரேதடத்தில் ஒரே மாதிரியானவையும், பயன்செய்து செய்து சேதாரத்துக்குள்ளானவையு மான அணியலங்காரச் சொற்றொடர் களையும் சொற்களையும் வருணனை களையும் வாசித்து வாசித்து அலுத்துவிட்டவர்களுக்கு 'நந்தி' யின் உரைநடைப் பாங்கு புத்தெழுச்சியை யும் உற்சாகத்தையும் வழங்கத் தவறாது என்று உறுதியாகச் சொல்வேன்"

நந்தி அவர்களின் சிறப்பு அவரது சமூக நோக்கு. சமூகத்தின் பால் அவர்கொண்ட காதல்தான் அதன்காரணமாக அவர் படைப்புக்கள் சமூகத்தை-சமூகப்பிரச்சினைகளை ஆழமாக ஊடுருவிப் பார்த்தன. அந்தப் பார்வையில் சமூகப்பொறுப்பும் தானும் சமூகத்தில் ஒரு பங்காளி என்ற மனப்பாங்கும் இருந்தது.

அவரது சிறுகதைகள் பல புகழ்பெற்றன. அதில் மல்லிகையில் வெளியான கேள்விகள் உருவாகின் றன. என்ற சிறுகதையும் பதுங்குகுழி என்ற சிறுகதையும் மிகப் பெறுமதி யானவை.

பதுங்குகுழி சிறுகதை பின்வரு மாறு முடிகின்றது. "ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன கிழவனுக்கு அரசியல் விடயங்கள் தெளிவான மனப்பாடம். ஆனால் அந்தக்காலத்தில் கலவரங் கள் மூண்டன. பெறுமதியில்லாத நிகழ்வுகள், அயலவர் மனஸ்தாபம், தனிப்பட்ட வியாபாரப்போட்டி பொறாமை, காமவிவகாரம், யார் குற்றவாளியாக இருந்தாலும் கல வரத்தை உண்டாக்கியது அந்தக் கலவரங்கள் காட்டுத்தீயும் சுழல் காற்றும்சேர்ந்தது போல் பரவும். தொட்டம் தொட்டமாக, பரவலாக, திடீர் திடீரென கொடூரமாக தமிழர் பாதிக்கப்படுவர். செல்லத்துரைக் கிழவனின் நெஞ்சு விம்மியவாறு ஒரு நிமிடம் நிலைகொண்டது.

"வடக்கும் கிழக்கும் எமது பதுங்கு குழிகள்" ஒவ்வொருவராக பதுங்கு குழியில் இருந்து வெளி வந்தார்கள். உடலில் இருந்த மண் ணைத் தட்டிக்கொண்டார்கள். செல் லத்துரைப்பாட்டா, மீண்டும் கூறினார்.

'இந்த மண் எமக்குச் சொந்த மில்லை என்றால் தாங்கள் பதுங்கு வதற்கும் இடமில்லை'

'கோப்பி குடிக்க வா அப்பு' என்று செல்லமணி அவரை அழைத்தாள்.

கடந்த சித்திரை, வைகாசி 2004 வெளிச்சம் சஞ்சிகையில் வெளியான 'விடைகளுக்கு அப்பால்' என்ற சிறு கதையினை அவர் எழுதியிருந்தார்.

இலக்கியப் பக்கம் எவ்வாறு அவர் தீர்க்கமான கருத்துடன் இருந்தாரோ அவ்விதமே அவரது மருத்துவத்துறைசார்ந்த விடயங் களிலும் முன்னிலையில் நின்றார்.



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முன்னாள் சமூக மருத்து வத்துறைப் பேராசிரியர் மருத்துவ பீடாதிபதி பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் சிறப்பாக இயங்க அவர் செயற்பட்ட விதத்தினை எல்லோரும் போற்றி வாழ்த்தினர்.

லண்டன் பல்கலைக்கழகம் ஒன் றில் கலாநிதிப்பட்டம் பெற்ற நந்தி அவர்கள் பல்வேறு உலக நிறுவனங் களிலும் அமைப்புகளிலும் ஆலோச கராக இருந்து பணியாற்றிவந்தவர்.


பேராசிரியர் சிவஞானசுந்தரம் என்னும் மருத்துவத்துறை சார்ந்த பெரியவனை இலக்கிய உலகமே "நந்தி" ஆக்கியது. தமிழகத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களே பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர் களுக்கு"நந்தி" என்ற புனை பெய ரைக் காட்டினார் என்பது எவ்வளவு சிறப்பு மிக்கது.

**இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன**

# முடியும் என்பதே வெற்றிதான்

இயற்கையில் நாம் அல்லல் படுவதற்கு மனிதராகப் பிறக்கவில்லை. வாழ்க்கையில் நல்ல சந்தோசமாக வாழ வேண்டும் என்றுதான் பிறக்கின் றோம். " நல்ல காலம் நம் காலிலே வந்து விழாது நாம் தான் கால்கடுக்க அதை நோக்கி நடக்க வேண்டும். முடியும் என்ற எண்ணத்துடன் செயற்பட வேண்டும். அப்போதான் வெற்றி எனும் இலக்கை அடைய முடியும். 'முடியும்' என்ற எண்ணத்துடன் செயற்பட்டால் முன்னேற்றத்துடன் வெற்றியைப் பெற்றுவிடலாம். முன்னேற்றம் என்றால் இன்பத்துக்கும், இலட்சியத்துக்கும் இடையே நடக்கும் போராட்டத்திலே இரத்தக்காயம் அடைந்த இலட்சியத்துக்கு கிடைக்கும் வெற்றி வாழ்க்கையில் முன்னேற உங்கள் இலட்சியத்தை அடிக்கடி மனத்திரையில் நிறுத்துங்கள். நெஞ்சில் துணிவை நிரப்பி இலட்சியத்தை நோக்கி விடாது செயற்படுங்கள் நிச்சயம் முன்னேறி விடுவீகள். காற்றுக்கு மலை அசைவதில்லை. இதே போல்தான் உறுதியாக நின்று ஒரே செயலை செய்தால் நிச்சயமாக முழுவதுமாக முடிக்க முடியும். சுழலும் சக்கரம் போன்று இருக்கக்கூடாது. சக்கரத்தின் நடுவில் உள்ள அச்சாணி போன்று இருக்கவேண்டும். அழுது கொண்டிருந்தால் எதையும் அடைய முடியாது. சிந்தித்துச் செயற்பட வேண்டும் முடியும என்று எண்ணுங்கள் நல்லதையே நினையுங்கள். நல்லதையே சொல்லுங்கள்.


எங்கள் எண்ணத்தில் எதையும் செய்து வெற்றி பெற முடியும் என்று நல்லதையே நினைக்க வேண்டும். அதை விட்டு விட்டு "என்னால் இதைச் 'செய்ய முடியாது. " "எனக்கு சந்தோசமே இல்லையே" "நான் நல்லாக இருக்கமாட்டேன்" என்ற முடியாத எண்ணங்களை நாம் வகுக்கக்கூடாது.



முடியும் என்று எண் ணுங்கள். நாங்கள் மலையளவுக்கு எங்கள் கற்பனையை வளர்க்கவேணடும் அப்போதுதான் நாங்கள் அதன் அடிவாரத்தையாவது அடையமுடியும்.

சூரியன் உதயமாகி விட்டால் நாம் எந்தத் தீபத்தின் உதவியையும் நாடுவதில்லை. அதே போல முடியும் என்ற உறுதி மட்டும் இருந்தால் வேறு எந்த வகையான உதவியும் எமக்குத் தேவையில்லை. நான் நினைப்ப தொன்றும் நடப்பதில்லையே என்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படி எண்ணிய படியால் அவர்களுக்கு நடக்காமல் போகிறது. நான் நினைப்பதைச் செய்து முடிப்பேன் என்று முடியும் என்று நினையுங்கள் அது வெற்றியாகும். நாம் பேரீச்சம் பழம் மரம் போல இருந்து விடக்கூடாது. அது வழியால் போகின்றவர்களுக்கு நிழலையும் கொடுக்காமல், எளிதில் பறித்து உண்ணவும் முடியாமல் பழத்தைக் குலைகுலையாகச் சுமந்து நிற்பதால் என்ன பயன். அது போல நாமும் முடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன பயன். செய்ய முடியும் என்ற உறுதி இருந்தால்தான் எதனையும் செம்மையாக முடிக்க இயலும். சில பேர் ஒரு தோல்வியை கண்டதும் சலித்து மலைத்துப் போய்விடுகிறார்கள். அப்படியே சோர்வாகவே இருந்து விடுகிறார்கள். தோல்விதான் வெற்றியின் அறிகுறி என்பதை மறந்து முடியாது என்று இருந்து விடுகிறார்கள். தாழ்வு எண்ணம் தலைதூக்கி சோர்வாக இருக்கும் போது முடியும் என்று இரட்டிப்பாக உழையுங்கள் இந்த உணர்வுடன் செயலாற்றினால் எல்லாக் காரியங்களும் வெற்றியாகத்தான் அமையும். முடியும் என்ற உணர்வு பிறக்கும்போதே அதைச் செய்து முடிக்கும் திறனும் ஆற்றலும் பிறக்கும். ஊக்கம் இல்லாதவன் எல்லாவற்றையும் இழந்து விடுவான். அனைத்தையும் இழந்த பின்பும் ஊக்கம் இருக்குமானால் மறுபடியும் வெற்றியை நிச்சயம் பெறமுடியும். முடியும் என்ற ஊக்கம்தான் வெற்றி வாய்ப்புக்களைத் தேடித்தரும்.

**திருமதி ச.தயாபரநாதன்**




## சச்சின் பயிற்சியாளராகிறார்



லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் வரும் 14 இல் சர்வதேச லெவன்.எம்.சி.சி,லெவன் அணிகளுக்கு இடையே 'சுனாமிக் கண்காட்சி கிரிக்கெட் ' போட்டி நடக்க உள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்பதாக இருந்த சச்சின் டெண்டுல்கர் முழங்கைக் காயத்தால் கடைசி நேரத்தில் விலகினார். தனது ரசிகர்களை ஏமாற்ற விரும்பாத இவர் இந்தப் போட்டியில் பயிற்சியாளராகத் தலைகாட்டப்போகிறார். யாருக்கு பயிற்சி அளிக்கிறார் என்கிறீர்களா..? அது நீங்களாகக் கூட இருக்கலாம். இந்தச் சுனாமிப் போட்டிக்காக முன்னணி 'வீரர்கள் பயன்படுத்திய பொருட்கள் இன்டர்நெட் மூலமாக ஏலம் விடப்படுகிறது. அதிக விலைக்கு ஏலம் எடுக்கும் நபர் லண்டன் லார்ட்ஸ் மைதானத்திற்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்படுவார். இந்த நபருக்கு சச்சின் டெண்டுல்கர் 15 நிமிடம் சிறப்பு பயிற்சி அளிப்பார். இந்த அதிர்ஷ்டக்கார நபர் லார்ட்ஸ் மைதானத்தில் ஆஸி, 'சுழல் ஜாம்பவான்' சேர்ன்வோன் வீசும் ஒரு பந்து வீச்சினை சந்திக்கலாம். உலகம் முழுவதிலும் இந்த காட்சி ஒளிபரப்பப்படவுள்ளது.



*உலகின் அதிபாரா குத்துச்சண்டை வீரர் எனப் பெயர்பெற்ற மைக்டொய்சன் மீண்டும் களத்தில் குதிக்கிறார். அவர் நாளை சனிக்கிழமை வோஷிங்டனில் அயர்லாந்து நாட்டுவீரர் ஹெவில்மெக்ரெயிடுடன் போட்டியில் ஈடுபடவுள்ளார்.*

## ஒலிம்பிக் விளையாட்டில் மாற்றம் நிகழுமா...?



ஒலிம்பிக்கில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள 28போட்டிகள் அப்படியே தொடர வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டி நடத்தப் படும். இதில் 28வகையான விளை யாட்டுப்போட்டிகள் இடம் பெறும். குறைந்தது 10 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்பர். 301 பதக்கங்கள் வழங்கப்படும்.

இந்தச் சூழலில் புதிதாகக் கோல்ப், கராத்தே, ரக்பி, ரோலர் ஸ்போர்ட்ஸ், ஸ்குவாஷ் ஆகிய 5போட்டிகளை சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டது. ஏற்கனவே இடம்பெற்றுள்ள விளையாட்டுக்களை நீக்கினால்தான் புதிதாக போட்டிகளை சேர்க்க முடியும்.

இது தொடர்பாக வரும் ஜூலை 8இல் சிங்கப்பூரில் நடக்கும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்யப்படும். குறைவான வாக்குகளை பெற்ற விளையாட்டு 2012 ஒலிம்பிக்கில் இருந்து நீக்கப்படும். அதற்குப் பதிலாக புதிய போட்டி சேர்க்கப்படும்.

இந்த யோசனை பற்றி சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டு சங்கம் ஜெனிவாவில் அவசரமாகக் கூடி விவாதித்தது. பின்னர் சங்கத்தின் தலைவர் டெனிஸ் ஆஸ்வால்ட் கூறுகையில், " 28 விளையாட்டுக்கள் அப்படியே நீடிக்க வேண்டும். தற்போது அடுக்கி வைக்கப்பட்ட சீட்டுக்கட்டுகள் போல சீராக உள்ளது. இதில் மாற்றம் செய்தால் ஒட்டுமொத்தமாக குலைந்து விடும். வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்பாக ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர்களிடம் போட்டிகளை நீக்க ஆதரவு அளிக்கக் கூடாது என கேட்டுக்கொள்ளப்படும். கடிதம் மூலமாகவும் ஆதரவு திரட்டப்படும்"என்றார்.

2002 இல் நடந்த கூட்டத்தில் பேஸ்போல் மென்பந்து பென்டாத்லான் ஆகிய போட்டிகளை நீக்க ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் ஜாக்ஸ் ரோகே பரிந்துரை செய்தார். ஆனால் கடும் எதிர்ப்புத் தெரிவித்த உறுப்பினர்கள் பரிந்துரையை ஏற்க மறுத்தனர். ஒலிம்பிக் வரலாற்றில் 1936 இல் போலோ நீக்கப்பட்டது. அதற்குப் பிறகு எந்தப் போட்டியும் நீக்கப்படவில்லை.

## சச்சின் டெண்டுல்கர் நூறு சதங்களை அடிப்பார்



ஒருவரை வாழ்த்தும் போது நூறாண்டுகள் வாழ்க என வாழ்த்துவார்கள். அது போல முழங்கைக் காயத்தால் சச்சின் டெண்டுல்கர் அவதியுற்றாலும் நூறு சதங்களை அடிப்பார் என முக்கியமான ஒருவர் கூறியுள்ளார் அது வேறு யாருமல்ல, செப்பலுக்கு முன்பாக இந்திய அணி யின் பயிற்சியாளராக இருந்த ஜோன் ரைட்தான் அவர்.

32 வயதாகும் சச்சின், சமீப காலமாக முன்பு மாதிரி ஆடுவதில்லை.இந்நிலையில் அவரது ஆட்டத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாக ரைட் இந்த புகழாரத்தைச் சூட்டியுள்ளார்.

"இந்த சீசனில் மேலும் ஒரு மகுடம் காத்திருக்கிறது என சச்சினை ஆறுதல் படுத்தினேன். அது இந்த சீசனி லேயே கூட நடை பெறலாம். ஆனால் முழங்கையில் ஏற்பட்டுள்ள காயம் ஒரு முக்கிய பிரச்சினையாக அவருக்கு உள்ளது. இருந்தாலும் நூறு சதங்களை அவர் அடித்துவிடுவார் என நம்புகின்றேன்" என 'விஸ்டன் ஏசியா' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் ரைட் கூறியுள்ளார்.

சச்சினுடன் இருந்ததை வைத்துப்பார்க்கையில், உண்மையிலேயே மிகச் சிறந்த விளையாட்டு வீரர் அவர் என்பதை உணர்ந்தேன். அவருடைய பணிவு சகோதரத்துவப் பண்பு ஆகியன அளவிட முடியாதது என மேலும் தெரிவித்துள்ளார் ரைட்.

இதுவரை 72சதங்களை அடித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டிகளில் 34 சதங்களையும், ஒரு தின போட்டிகளில் 38 சதங்களையும் அடித்துள்ளார்.

சரியான தேர்வு வேண்டும். சரியான தேர்வு முறை இல்லாவிட்டால், சிறந்த பயிற்சியாளராலும் அணியை முன்னேற்ற முடியாது.

ஆதலால், மண்டல வாரியாக தேர்வுக் குழுவினரை நியமிப்பது குறித்து இந்திய வாரியம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ரைட் கூறியுள்ளார்.

solidar | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

The Solidar Group – ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) – is now recruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the tsunami affected districts of Jaffna (Vadamarachchi East) and Mulaitivu. Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in Kilinochchi, Solidar is now recruiting the following positions:

### Chief Engineer

Responsible for the overall management of SOLIDAR construction activity. Working in close collaboration with the Programme Manager and senior management, the Chief Engineer will be required to lead, guide and manage all aspects of the planning, development and implementation of SOLIDAR Phase III reconstruction activity in the Wanni

Main duties include: leading the development planning and coordinating of reconstruction activities in eight villages, managing and supervision of project engineers; ensure that monitoring, quality assurance and reporting systems are in place and have been followed; draft and evaluate architectural designs and manage the construction activity in a timely manner according to quality standards set by SOLIDAR.

The successful candidate for this key, challenging position should possess advanced engineering qualifications and have significant experience and a proven track record of managing rehabilitation construction projects. Knowledge of English and Tamil Languages is essential.

### Senior Engineers

Working closely with the Chief Engineer, this position is responsible for the day-to-day management of the construction programme and field activity. Main activities include: including the coordination and supervision of project engineers, technical specialists, contractors and building site managers; the management and supervision of site offices and stores; monitoring resource needs and ensure accurate records of materials delivery, storage and use; effective coordination with coordination bodies; timely supply of materials.

This person should have appropriate qualifications in engineering and previous experience of running and managing construction projects. Knowledge of English and Tamil Languages is essential.

### Project Engineers

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction projects in coordination with Senior Engineers and Building Site Managers. Vacancies currently exist for qualified personnel in the following areas:

- Housing Construction
- Road Construction
- Construction of Public Buildings
- Water & Sanitation

Interested candidates should submit a CV and Cover Letter by email to: stevedurrant2003@yahoo.co.uk.

Alternatively, submissions may be sent by mail to:

Mr. Florian Meyer
Programme Manager Construction Coordinator
ASB/SOLIDAR Office
156, Jaffna Road
Paranthan, Kilinochchi

Ms. Harshi Gunawardana
SOLIDAR Administration
NPA/SOLIDAR Office
15/2 Tickell Road
Colombo 08

(C.12195)

வணக்கம் எல்லாருக்கும்! உங்கட கஷ்டங்களைப் பற்றி நான் இந்தமுறை விசாரிக்கமாட்டன். எட இஞ்சையிருந்து கேள்விப்படவே மனுசருக்கு வர்ற கோபத்துக்கு, நீங்க நேர இருந்து அனுபவிக்கிறனீங்களுக்கு எவ்வளவு கொதிப்பாய் இருக்கும். நாட்டு மக்கள் எல்லாருமே புத்தம் சரணம் கச்சாமி எண்டுகொண்டு பௌத்தமதத்தைப் பின்பற்றினால் அன்பும், சமாதானமும் பெருகி பிரச்சினை தீர்ந்துபோடுமாம் எண்டு சிங்கிடி நோணா வாய்மொழி அருளியிருக்கிறா! சே!என்ன அருமையான தத்துவம்,போதனை! எழுதி வைச்சுப் பாடமாக்கலாம். ஆனாலும் ஒரு சந்தேகம் : அவா சொல்லிற பௌத்த நெறியின்ரை விசுவாசியள் எண்டு தங்களைச் சொல்லிக்கொள்ளிறவை மத்தியிலயே அடிதடி, பிடுங்குப்பாடு, இழுபறி எண்டு இருக்கேக்கிள்ளை நாங்கள் வேற எங்கடையளை விட்டிட்டுப்போய் ஏன் மாட்டுப்படோணும். உண்மையில பாருங்கோ. அந்நாள் புத்தர் ஒரு தங்கமான மனுசன். மக்களோட துன்பங்களைப் பார்த்து வேதனையால துடிதுடிச்சுட்போய், அந்தமாதிரி அரசப் பதவியையும், யசோதரையையும், அவன் பொடியன் ராகுலனையும் விட்டிட்டு துறவறத்துக்குப் போனவர். பற்று வைக்கிறதால தான் பிரியிற நேரத்தில துன்பம் ஏற்படுகிது எண்டு சொல்லி, எல்லா சுகபோகத்தையும் துறந்த பாவம் அந்நாளின்ரை பேரைப் பாவிச்சு, உலகத்திலை இருக்கிற எல்லா சுகபோகத்தையும் அனுபவிக்கிறதுக்கெல்லே துடியாய்த்துடிக்கிறாங்கள் இவங்கள். 02ஆம் திகதி மட்டும் அவகாசம் கேட்டவா, அந்த அவகாசத்துக்குள்ளை ஏதாவது நடவடிக்கை எடுத்தமாதிரித் தெரியேல்லை. வாக்குறுதி கொடுத்தால் அதைக் காப்பாற்றோணும். அதை விட்டிட்டு உடன இந்தியப்பயணம் போட்டா. இன்னுமொரு 2 கிழமை தேவைப்படுகிதாம் சிலையை எடுக்கிறதுக்கு. ஏன் இரவோட இரவாய் கொண்டுவந்து வைக்கமுடியும். எடுக்கிறதுக்கு மட்டும் 4 கிழமை தேவையோ ? உது ஒண்டுமில்லைப் பாருங்கோ. எங்களைப் பேய்க் குஞ்சுகள் ஆக்கலாம் எண்ட நினைப்புத்தான்! வேற ஒண்டுமில்லை. நீர்கொழும்பில வைச்ச யேசுவின்ரை சின்னதொரு சிலை தங்கட மத உணர்வுகளைப் புண்படுத்துதெண்டு சொல்லி அப்புறப்படுத்தினவை இஞ்சை வந்து எங்கட மக்கள் 1008 வேதனையளில நொந்துபோய் இருக்கிற நேரத்தில, பரவலாய் புத்தர்சிலையளை வைச்சு விசராடினால் எங்களுக்கு எப்பிடி இருக்கும்!

செல்லங்கள் நான் என்ன நினைக்கிறன் எண்டால், அங்கையிஞ்சை பிச்சை எடுத்து ஆயுத தளபாடங்களை வாங்கிக்குவிக்கலாம். ஆனால் அடிபடுகிறதுக்கு ஆமி காணாது. அதால புத்தர் சிலையில தமிழரைக் கைவைக்கப் பண்ணி ஒரு கலவரத்தைத் தூண்டிவிட்டால், புத்தர் சென்ரிமென்ரைப் பாவிச்சு ஆமிக்கு ஆக்களை வரப்பண்ணலாம். அதோட திருகோணமலைக்குப்படையள் அதிகமாய் அனுப்பப்படிறதையும் பார்த்திருப்பியள். திரும்ப யுத்தம் வெடிக்கிற நேரத்தில தங்கட கலவரக் கைவரிசையளால எங்கட தலைநகரத்திலை இருந்து தமிழ்ச்சனத்தை அப்புறப்படுத்திற நோக்கமும் இருக்குமாப் போல கிடக்கிது. உலக நாடுகளை மந்திரக்கோல் போல ஆட்டி வைக்கிற திருகோணமலை ஆரின்ரை கையில இருக்கிதோ, அந்தப்பக்கம் அனைத்துலக ஆதரவு பெருகும் எண்டிறதை வைச்சுத்தான், உந்தக் கூத்தெல்லாம் எண்டு என்ரை 75 வய்சு அனுபவத்தை வைச்சு நான் சொல்லிறன். மற்றது உவர் சிறீலங்கா கிறிக்கெற் அணியின்ரை கப்ரனாய் இருந்த அர்ஜுனா விஜயதுங்க 7,8 வருசத்துக்கு முன்னால அரசியல்லை இறங்கின நேரம் ஒண்டை வலியுறுத்திச் சொன்னவர்: 'சிறிலங்காவின்ரை தலைநகரை கொழும்பில இருந்து உடனடியாய் மாத்தி, திருகோணமலையைத் தலைநகராய் கட்டியெழுப்போணும். இதன்மூலம் தமிழ் மக்களின்ரை பிரதேச ஒருமைப்பாட்டையும், தாயகக்கோட்பாட்டையும் சிதைக்கலாம்' எண்டு. பாருங்கோ கிறிக்கெற் என்ன மாதிரி துடுப்பெடுக்கிதெண்டு.

ஐயோ நான் இஞ்சை 2,3 நாளாய் ஒரே அலைச்சல். கொஞ்சத்துக்கு முதல்தான் வீட்டை வந்தனான். வீட்டுக்காரர் ஏதோ அலுவலாய் இப்பதான் வெளியபோனவை. அப்பிடியே வந்து கட்டில்லை விழுந்ததுதான் தெரியும். அப்பிடியொரு அலுப்புப் பாருங்கோ. கனநாள் ஆசை யேர்மனின்ரை தலைநகரம் பேர்ளினை பார்க்கோணும் எண்டு. அதுவும் நிறைவேறிட்டிது. நான் உங்களுக்கு போனமுறையளிலை சொன்ன பேர்ளின் மதில் உடைக்கப்பட்டு 15 வருசம் ஆனாலும் அந்தச் சிதைவுகளின்ரை எச்சங்கள் ஞாபகப் பொருட்களாய் எங்கை பார்த்தாலும் வாங்கக்கூடின மாதிரி இருக்கிது. அது மட்டுமில்லாமல் நாடாளுமன்றம், மியூசியம் எண்டு எக்கச்சக்கமாய் 75 வீதமான கட்டடங்கள் 2ஆம் உலகயுத்த காலப்பகுதியில அழிக்கப்பட்ட நிலையிலையும், இண்டைக்கு எல்லாம் நிமிர்ந்து எழும்பி நிற்கிது. ஒரு பொதுமருத்துவமனையில 2 படங்கள் பார்த்தனான். ஒண்டு 19ஆம் நூற்றாண்டின்ரை கடைசியில அந்த வைத்தியசாலை கட்டப்பட்ட நேரத்தில எப்பிடி இருந்ததெண்டு காட்டிற ஓவியம். மற்றது 2ஆம் உலக யுத்தத்தில விமானக் குண்டு வீச்சில சிதைக்கப்பட்ட நிலையில இருந்த தோற்றத்தைக் காட்டிற போட்டோ. இரண்டும் காத்திருப்பவர் கூடத்தில மாட்டப்பட்டிருக்கிது. என்னதான் உயர்ந்தாலும் தங்கட ஆரம்ப காலங்களை மறக்காமல் வைச்சிருந்து வாற தலைமுறையளுக்கும் அந்த ஞாபகங்களைக் குடுக்கிற அவங்கட பண்பு என்னை வியக்க வைச்சிது. எங்கட ஏ9 மூண்டு வருசங்களுக்கு முன்னால எப்பிடி இருந்ததெண்டு இப்ப எத்தினை பேருக்கு ஞாபகம் இருக்கப்போகுது! மத்திய கல்லூரியின்ரை புதுக்கட்டடத்துக்கு முன்னால ஆக்கிரமிப்பின்ரை வடுக்களைச் சுமந்துகொண்டிருக்கிற அந்த இடிஞ்ச கட்டடம் தமிழன் விட்ட கண்ணீரின்ரையும், கண்ணீரைத் துடைக்கச் சிந்தின ரத்தத்தின்ரையும் அடையாளச்சின்னம் பாருங்கோ! இப்ப உந்த 3 வருசத்திலை அங்கையிஞ்சை எண்டு எத்தினையோ புதுக்கட்டடங்கள் எழும்பீட்டிது. பார்க்க சந்தோசமாய் இருக்கிது. இருந்தாலும் முந்திமுந்தி எப்பிடி இருந்தனாங்கள், எதையெதைக் கடந்து வந்தனாங்கள் எண்டதுகளைப் பற்றின ஆதாரங்களைக் காட்டிற மாதிரியான படங்களை அந்தந்த இடங்களிலையே ஆங்காங்கை மாட்டி வைச்சால் நல்லாயிருக்கும் எண்டு நினைக்கிறன். வரலாறு எண்டிறது அந்தக்காலத்தைத் தோண்டிப் பார்க்கிறது மட்டுமில்லை, நிகழ்காலத்து நினைவுகளைப் பாதுகாத்து வைக்கிறதும்தான். எல்லாருக்கும்தான் சொல்லிறன், ஒவ்வொருத்தரும் புரிஞ்சு உடன ஏதாவது செய்வியள் எண்டு நம்பிறன். யேர்மன்காரங்களில இருக்கிற ஒரு நல்ல பழக்கம் பாருங்கோ : ஒண்டைச் செய்யோணும் எண்டு நினைச்சால், செய்து முடிச்சாப்பிறகுதான் அவனுக்கு நிம்மதி. ஆயிரம் சாட்டுகள் சொல்லி, சும்மா இழுத்தடிச்சுக்கொண்டு ஈய்ஞ்சு போகமாட்டான். பொறுங்கோ! பொறுங்கோ! ஏதோ சத்தம் கேட்கிது. ரெலிபோன் போல, வீட்டில வேற ஆக்களுமில்லை. பொறுங்கோ என்னண்டு கேட்டிட்டு வாறன்.

ஐயோஐயோ! கையும் ஓடேல்லை, காலும் ஓடேல்லை. என்னை அதுவும் என்னை ? நினைச்சுப் பார்க்கவே ஏலாமல் கிடக்கிது. இருந்தாப்போல இப்பிடியொரு இன்ப அதிர்ச்சி. கடவுளே! நம்ப முடியாமல் கிடக்கிது. இது கனவோ? நனவோ? உறுதி செய்யிறதுக்காக் கையிலை 2,3 தரம் இறுக்கி நுள்ளிப்பார்த்தன். என்ரை குரல் உலக நாடெல்லாம் ஒலிக்கப்போகுது. தேமதுரத்தமிழோசையோடை இந்தக் கிழவனின்ரை கடைசிக்காலக்குரலும் வரப்போகுது. நான் இஞ்சை நிக்கிறன் எண்டு அவையளுக்கு எப்பிடித்தெரிய வந்திருக்கும்? சே! அவையள்தானே உலகம் பூராவும் 14000 பேருக்குக் கிட்ட வைச்சிருக்கினமாம். ஐயோ இதயத் துடிப்பு வேற கூடிக்கொண்டு வருகிது. உப்பிடித்தான் போனவருசம் ஒக்ரோபர் மாசம் ஒருக்கால் அளந்த நேரமும் கூடக்காட்டினதுக்கு ஒராள் எனக்கு விளக்கம் .தந்தது. மறக்க மாட்டன் நான்! ஆ. . வாசல்மணி அடிச்சு சத்தம் கேட்கிது. பக்கத்திலை நிக்கிற எண்டு தான் ரெலிபோனில சொன்னவர். நல்லகாலம் வானொலியாப் போச்சிது. இதுவே தொலைக்காட்சிப்பேட்டி எண்டால் பயணக்களைப்பில கிடக்கிற என்ரை முகம் பேயறைஞ்ச மாதிரியெல்லே உலகம் முழுக்கத் தெரிஞ்சிருக்கும். ஆ...வாங்கோ! வாங்கோ ! இதென்ன உங்கடவீடு மாதிரி, உள்ளுக்க வாங்கோ! 'வேற வெள்ளைக்காரர் ஆராவதும் கூட வந்தவையோ ? லண்டனில எப்பிடி எல்லாரும் சுகமாய் இருக்கினமோ ?. 'இல்லை நான் மட்டும்தான் வந்தனான். உடன நீங்கள் சம்மதிச்சது சந்தோசம். என்னமாதிரி இதிலையே எடுப்போமோ ?',எண்டு அந்தத்தம்பி கேட்டார். 'ஓமோம், உங்களுக்கு வசதிப்பட்ட மாதிரி இடத்தில எடுப்பம். வழமையாய் வீட்டில கன பேர் நிக்கிறவை, இப்ப வெளியால போட்டினம். பொறுங்கோ ஒரு நிமிசம்! சுடுதண்ணி குடிச்சிட்டு வாறன். அப்பதான் குரல் தெளிவாய் இருக்கும்'. 'சரி இதிலை இருந்தே எடுப்பம். நான் இந்த றெக்கோடரை நடுவில வைக்கிறன். கேட்கிற கேள்வியளுக்கு நீங்கள் பதில்சொல்லுங்கோ!'.

நிருபர் : மூச்சுமுட்டும் முதுமையிலும் நமது அன்பான வேண்டுகோளுக்கு இணங்கி, இந்த நேர்காணலுக்கு ஒத்துக்கொண்ட

# நிகழ்காலத்து நினைவுகளை பாதுகாத்து வைக்கவேண்டும்

உலா 37



# ஏ9-ஏரம்பு

திரு.ஏரம்பு அவர்களுக்கு முதற்கண் நன்றிகளும், வணக்கங்களும் !

ஏ9 ஏரம்பு : குறுகத்தறித்த குறளின் வழி 30 நிமிடத்திற்குள் முழு உலகையும் அலசிடும் பணியில், தசாப்தங்கள் பல தாண்டியும் முழு மூச்சுடன் ஈடுபடும் உங்களின் பணிக்கும் எனது தலைசாய்த்த வணக்கங்கள்! (சீச்சீ... பிழைச்சுப் போச்சிது. தொடங்கேக்கிளை ஏதாவது அடுக்கு மொழியில அவிழ்த்துவிடோணும் எண்டு நினைச்சுக்கொண்டு, ராமாயணப்பிரசங்கி மாதிரி பிசற்றிப் போட்டன். சத்தம்போடாமல் எனக்கு ஒத்துவராத உந்த எடுப்புகளை விட்டிட்டு, வழமையான மாதிரி இயல்பாவே கதைப்பம்).

நிருபர் : வழமையாக எழுத்துலகிற்குள் நுழைபவர்களுக்கு ஒரு படைப்பியல்சார் பின்புலம் இருக்கும். எழுத்துத்துறையில் ஈடுபடுவதற்கென இலக்கியத் தகுதியுடன் கூடியதொரு மார்க்கப் பார்வையைக் கொண்ட தகுதி இருக்கும். இவை எதுவுமே இல்லாமல் என்ன துணிவில் பேனாவை எடுக்கத் துணிந்தீர்கள்? அதுவும் பேச்சுத் தமிழில் ?

ஏ9 ஏரம்பு : மூஞ்சையில அடிக்கிற மாதிரி இப்பிடிக் கேட்பியள் எண்டு நான் கனவிலையும் நினைச்சேல்லை. இருந்தாலும் முதுகுக்குப்பின்னால கதைக்கிறதை விட உப்பிடி மூஞ்சைக்கு முன்னால நீங்கள் கேட்டவிதம் எனக்குப் பிடிச்சிருக்கிது. ஆ...நீங்கள் குறிப்பிட்ட பின்புலம், இலக்கியத்தகுதி, மார்க்கப்பார்வை எல்லாம் எனக்கிருக்கோ எண்டு யோசிச்சுப்பார்க்கிறன். உதுகளெல்லாம் இருக்கிற ஆக்கள் பெரிய பெரிய இலக்கிய மன்றங்களில கன விசயங்களைப் பற்றி விவாதிக்கிறதை நான் கேட்டும், பார்த்தும் இருக்கிறன். அவையள் குறிப்பிடுகிற கன விசயங்கள் எனக்குமட்டுமில்லை, வேற கனசனத்துக்கும் விளங்கிறேல்லை. அதைப்பற்றி அவையளும் பெரிசா அலட்டிக்கொள்றேல்லை. நான் எங்கட சனத்தையும், என்ரை மொழியையும் ஆத்மார்த்தமாய் நேசிக்கிறன். அதுதான் எனக்கிருக்கிற தகுதி. மார்க்கப்பார்வை எண்டால் இருப்பியல் வாதம், நவ-இருப்பியல்வாதம், ஒப்பியல்வாதம் எண்டு ஏதோ ஒரு கோதாரியும் விளங்காத விசயங்களைப் பற்றி மொத்த மொத்தப் புத்தகங்களைப் படிச்சும், எழுதியும் போட்டு தரையைவிட்டு அரையடி உயரத்திலை மிதந்து திரியோணும் எண்ட மாதிரியெல்லாம் எனக்கு ஆசையில்லைப் பாருங்கோ. முழு மனுசகுலத்தின்ரை ஆரோக்கியமான வளர்ச்சிக்கான நகர்வில, எங்கட தமிழினத்துக்கு எது நன்மை அளிக்குமோ, அதுதான் என்ரை மார்க்கப்பார்வை எண்டு நீங்கள் நினைச்சுக்கொள்ளலாம். பின்புலம், காலாகாலமாய் நாங்கள் விட்ட கண்ணீரும், எங்களை அழவைச்சவங்களின்ரை அட்டூழியங்களின்ரை திமிரும், ஆ. . வெண்டு பார்த்துக்கொண்டு கணக்கு வழக்கு எடுக்கிற சர்வதேசத்தின்ரை பக்கச் சார்பும், இது எல்லாத்தையும் மாத்தி நாங்கள் நிமிர்ந்துகொள்ளிறதுக்கு எங்களுக்குக் கிடைச்ச அரிய வாய்ப்பும்தான் பின்புலம். ஓம் !


நிருபர்: உங்கட நியாயப்பாட்டைப் புரிஞ்சுகொள்ளமுடியுது. அதுக்காக இலக்கியத்தரமற்ற கொச்சைத்தமிழை நீங்கள் தெரிவு செய்திருப்பது மொழியியலுக்குப் பாதகமானது அல்லவா ?

ஏ9 ஏரம்பு: நல்ல விசயங்களைக் குடுக்கிறதுக்கு கன படைப்பு வடிவங்கள் இருக்கிதுதான். அதிலையும் நாடகம், படம், பாடல் எண்டிற விசயங்கள் கூட்டு முயற்சியில உருவாகிறவை. தனியாளாய் ஒராள் செய்யிறதெண்டால் கட்டுரை, சிறுகதை, கவிதை போன்ற வடிவங்களைச் சொல்லலாம். உங்கட கொப்பராண சொல்லிறன், ஆரம்பத்திலை நான் கட்டுரை எழுதுவம் எண்டுதான் வெளிக்கிட்டனான். ஆனாலும் அது பெரிசா வாய்க்கேல்லை. சில ஆக்கள் வாசிக்காமலேயே நல்லாயிருந்தது எண்டிச்சினம். அது வேதனையைத் தந்திச்சிது. ஏதோ மிச்சமிருக்கிற நாளைக்கு நல்லதெண்டு மனசில படிகிற, என்ரை 75 வருச அனுபவத்தைச் சொல்லிப்போட்டு நிம்மதியாய் போய்ச்சேருவம் எண்டு பார்த்தால், கட்டுரை எண்டாலே கனபேருக்குக் கசக்கும் எண்ட எனக்குக் கசக்கிற உண்மையும் தெரிய வந்திச்சிது. மனுசராகிய நாங்கள் எல்லாரும் குரங்கில இருந்து கூர்ப் படைஞ்சு வந்ததாலயோ என்னவோ, எங்களுக்கு உந்த நொட்டை, நோண்டியள் எண்டால் நல்லாய்ப் பிடிக்கிது. அந்தப் பிடிப்பை ஏன் ஆரோக்கியமாய் பாவிச்சுக்கொள்ளக் கூடாதெண்டு நினைச்சுத்தான் இப்பிடியான பேச்சுத் தமிழைத் தெரிவுசெய்தனான். இது மக்களுக்கு நெருக்கமான நடையும் கூட. எங்கடமொழியை நாங்கள் வளப்படுத்தோணும் எண்டிற விருப்பத்தை வெளிப்படுத்திறதுக்கும், இதை ஒரு ஊடகமாய் பயன்படுத்தலாமெல்லோ. மற்றது கொச்சைத்தமிழ் எண்டு மட்டும் சொல்லாங்கோ. நாட்டார்பாடல் எப்பிடி மக்கள் நடையெண்டு பார்க்கப் படுகிதோ அதேமாதிரித்தான், இதுவும் அன்றாட வழக்கில நானும், நீங்களும் பேசிற மொழி. கனமான கட்டுரையை விட இது கனபேரைப் போய்ச்சேரும்.

நிருபர்: அப்ப உங்கட எழுத்துக்கள் பெரும்பான்மையான மக்களைப் போய்ச் சேருதெண்டு நீங்கள் நம்பிறீங்களா? உங்கட எழுத்துகளின்ரை நோக்கம் நிறைவேறுதா ?

ஏ9 ஏரம்பு: பெரும்பான்மையாய் கனபேரிட்டைப் போய்ச் சேருதோ எண்டது சத்தியமாய் தெரியேல்லை. ஊடகங்கள் எல்லாம் எங்கட நாட்டில ஒருவழி-

(22 ஆம் பக்கம் பார்க்க..)




# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 11**

**பகுதி -50**




"இந்த மரத்தின்ர விளிம்புகள் பச்சை நிறமா இருக்குது. இந்த மரம் இங்க நிண்ட படி வானத்துக்க உயர்ந்து கொண்டே போகுது. காற்றுகள் கடந்துகொண்டு போகும்போது அதுகளோட இரகசியம் பேசுது. 'எங்கெங்க போனனீயெண்டு எனக்குச் சொல்லு' என்று மரம் காற்றைக் கேட்குது. 'என்னென்ன கண் டனியெண்டு எனக்குச் சொல்லு. ஏனெண்டா



என்ர வேருகள் என்ன நிலத்தோட கட்டிப் போட்டிருக்குதுகள். நான் நெடுக இஞ்சதான் நிற்கவேணும்'. காற்றும் மரத்தோடு இரகசியம் பேசும். 'நான் ஒரே இடத்தில ஒருபோதும் நிக்கமாட்டன் நான் போய்...போய்... போய்.... போய்க்கொண்டேதான் இருப்பன்' எண்டு சொல்லும். அப்ப மரம்,'உன்னோட வர எனக்கு விருப்பமாயிருக்கு... இங்க தனியா... துக்கத் தோட... நிக்க எனக்கு விருப்பமில்ல. நான் உன்னோட வர விரும்புறன். நீ எவ்வளவு சந்தோசமாயிருக்கிறாய்... ஓ!...' எண்டு கத்திச் சொல்லும்...."

எழுந்துகொண்ட டிப்ஸ் மேசையை நோக்கிச் சென்றான். அங்கே வைக்கப்பட்டிருந்த புதிர் ஒன்றை எடுத்துக்கொண்டான். எனது காலடியில் அமர்ந்து கொண்டு புதிரின் துண்டு களை பொருத்தத் தொடங்கினான். "இது ரொம். குழலூதியின்ர மகன் ரொம். எங்கட பள்ளிக் கூடத்தில் இதப்பற்றி ஒரு பாட்டு இருக்கு" டிப்ஸ் அந்தப் பாட்டை பாடினான். பாட்டின் வார்த்தைகளும் சந்தமும் பிசகில்லாமல் வந்தன. பாட்டை பாடி முடிந்ததும் "முற்றும்" என்றான்.

"இதப் பள்ளிக்கூடத்திலயா பழ கினனீங்கள்?" நான் கேட்டேன்.

"ஓம்" என்று பதில் சொன்னவன், "ஜேன்மிஸ்தான் என்ர ஆசிரியர். அவ வளர்ந்த பொம்பிளை. மிஸ் ஏ யும் வளர்ந்த பொம்பிளை தான். கனக்க வளர்ந்த ஆக்கள் இருக்கினம்"

"வளர்ந்த ஆக்கள் ஒருவரில இருந்து ஒருவர் வித்தியாசமானவையா இருக்கிறது போல இருக்கும் அல்லவா?" என்று நான் கேட்டேன்.

"உண்மையாகவே அவர்கள் அப்பிடித்தான்" வலியுறுத்துவது போல் டிப்ஸ் சொன்னான்.

"வேற வளர்ந்த ஆக்களையும் உங்களுக்குத் தெரியுமா?" நான் கேட்டேன்.

"ஓம் தெரியும்" என்றான் டிப்ஸ். "ஹெடா இருக்கிறா. பள்ளிக்கூடத்தில வேற ஆக்களும் இருக்கினம். எங்கட தோட்ட வேலை செய்யுற ஜேக் இருக்கிறார். எங்கட சலவைகள செய்யிற மில்லி இருக்கிறா. எங்கட வளவில இருக்கிற பெரிய மரங்களில ஒண்ட ஜேக் கத்தரிச்சு விடுறவர். அது என்னுடைய ஜன்னலுக்கு அருகில நிற்கிற மரம். ஜன்னலுக் குள்ளால கையை நீட்டி தொடுற அளவுக்கு கிட்டவா அது வளர்ந் தது. ஆனா அத கத்தரிச்சு விடச் சொல்லி அப்பா சொன்னவர். அது வீட்டில தேய்ச்சுக்கொண்டு நிக்கு தெண்டு அவர் சொன்னவர். ஜேக் கிளைகளை வெட்டிக்கொண்டு மரத்தில ஏறுறத நான் கண்டன். நான் என்ர ஜன்னல திறந்து அந்த மரம் என்ர நண்பன் எண்டும் அந்தக்கிளை எனக்குத் தேவை எண்டும் சொன்னன். அது வெட்டுப்படுறத நான் விரும்பயில்ல எண்டும் சொன்னன்.

ஜேக் அத வெட்டாம விட்டிட்டார். அப்ப வெளியில வந்த அப்பா, அந்தக் கிளை வீட்டுக்கு மிக நெருக்கமா நிக்கிறதாகவும் மரத்தின்ர வடிவத்த அது கெடுப்பதாகவும் கூறி அத வெட்டி விடச் சொன்னார். அந்தக் கிளை நல்லாய் கிட்ட நிக்கிறதால நான் எட்டித் தொடக்கூடியதா இருக்கிறதையும், அதால அது எனக்கு நல்ல விருப்பமான கிளை என்கிறதையும் ஜேக் அப்பாட்டச் சொன்னார். அதுப்பற்றி கவலைப்படாம கிளையை வெட்டும் படி அப்பா சொல்லிப்போட்டார். ஜன்னலுக் குள்ளால நான் எட்டி, கிளையை தொட்டு விளையாடுறத தான் விரும்பயில்ல எண்டு அப்பா சொன்னார். நான் இப்பிடி விளையாடுறது தனக்கு தெரியாது எண்டு சொல்லிப்போட்டு, நான் வெளியில விழாம இருக்கிறதுக்கெண்டு ஜன்னலில உலோக வலை யொன்றை பொருத்தப் போறதாயும் சொன்னார். பிறகு கெதியா அந்த கிளையை வெட்டச் சொல்லி ஜேக்கிட்டச் சொன்னார். நான் அந்த கிளையை விரும்புறதால வீட்டில தேய்க்காத அளவுக்கு கொஞ்சமா வெட்டி விடுறன் என்று ஜேக் கேட் டார். ஆனா, விளையாடுறதுக்கு எனக்கு வேற கன சாமான்கள்இருக்கு தெண்டு அப்பா சொல்லிப்போட்டார். நான் எட்டித் தொட முடி யாத அளவுக்கு அந்த கிளையை ஜேக்கக் கொண்டு வெட்டிப் போட்டார். ஆனா நான் தொட்டு- விளையாடுற நுனிக்கிளைத் துண்ட எடுத்து ஜேக் என்னட்டத் தந்தவர். மரத்தின்ர அந்தப் பகுதிய என்ர அறைக்குள்ளயே வைச் சுக் கொள்ளலாம். எண்டு அவர்தான் சொன்ன வர். எல்லா மரங்களின்ர கிளைகளுக்கும் ஒரு வீட்டுக்குள்ள வாழுற வாய்ப்புக் கிட்டுறயில்ல எண்டும் சொன்னவர். அது மிக மிக பழைய எல்ம் மரம் எண்டு அவர் எனக்குச் சொல்லித்தந் தவர். எப்பிடியும் ஒரு இருநூறு வருசம் பழசான மரமாக அது இருக்கவேணும் என்டும் அந்த இருநூறு வருசத்திலயும் என்னப் போல யாரும் அத நேசிச்சிருக்க மாட்டினம் என்டும் சொன்ன வர். அந்த நுனிக்கிளையை நான் எண்னோட வைச்சுக்கொண்டன். இப்பவும் அது என்னட்ட இருக்குது" என்று அவன் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தேன். அவன் சொல்லி முடித்ததும் "இது எப்ப நடந்தது?" என்று நான் கேட்டேன்.

"ஒரு வருசத்துக்கு முதல். ஆனா ஜேக்கால ஏதும் செய்யமுடியவில்ல. கிளை யை வெட்டவேண்டித்தான் இருந்துது. அதுக்குப் பிறகு ஜன்னலில பாதுகாப்பு திரையை பூட்டிப் போட்டினம். யாரோ ஒரு ஆள் வந்து அத பூட் டினவர். என்ர ஜன்னல்ல ஒண்டும் டொறத்தி யின்ர ஜன்னல்ல ஒண்டுமாய் பூட்டினவை." என்றான் டிப்ஸ்.

"ஜேக் அந்த நுனிக் கிளைய உங்களிட்ட தந்தது யாருக்கும் தெரியுமா?" என்று கேட்டேன். "எனக்கு சொல்லத் தெரி யேல்ல. நான் யாருக்கும் சொல்லயில்ல. நான் அந்தக் கிளைய வைச்சுக் கொண்டன். அது இப்பவும் என்னட்ட இருக்குது. ஒருத்தரையும் அத தொடவிடுறயில்ல. யாராவது தொடப் பார்த்தா அவயளுக்கு காலால உதைஞ்சு, பாய்ஞ்சு கடிக்கிறனான்"

"அந்தக் கிளையில உங்களுக்கு சரியாக விருப்பம் போல?"

"ஓ... ஓம்" டிப்ஸ் பதில் சொன்னான்.

"ஜேக்கோட கன நேரம் செல வழிக்கிறனீங்களா?"

"ஓம் முத்தத்துக்கு போக முடியுற ஒவ்வொரு தரமும் ஜேக்கோட தான் நிக்கிற னான். அவர் என்னோடகதைப்பார். அவர் சொல் லுற எல்லாத்தையும் நான் கவனமாக் கேக்கிற னான். எல்லா விதமான கதைகளையும் அவர் சொல்லுறவர். அவர் எனக்கு அஸிஸி நாட்டச் சேர்ந்த புனித பிரான்ஸிஸ் பற்றிச் சொன்னவர். கன காலத்துக்கு முந்தி அவர் வாழ்ந்தவராம். பறவைகள்.... மரங்கள்... காற்று... மழை... எண்டா அவருக்கு நல்ல விருப்பமாம். அவை எல்லாம் நல்ல நண்பர்கள் எண்டு அவர் சொன்னவராம். அது உண்மைதான். அவை எல்லாம் நல்ல நண்பர்கள்தான். ஆட்கள விட அவை நல்லவை" என்று அந்த இடத்தை அழுத்திச் சொன்னான்.

அமைதியிழந்தவனாய் அந்த விளையாட்டறையில் அங்குமிங்கும் நடந்தான்.

(தொடரும்)

---

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)


திலகாவின் செயலூக்கத்தால் எமது ஏவுதளங்களிலிருந்து சீறி வந்த எறிகணைகள் எதிரியை துவம்சம் செய்யத் தொடங்கின. எறிகணைகளை ஒழுங்கமைத்துத் அந்த தளபதிகளான கோபால், கண்ணக்கிளி இருவரும் திலகா வின் நேரடியான இலக்கிற்கு எறிகணைகளை அடிக்கின்றனர். இடையில் திலகாவின் அலை உணரி உடைந்ததும் தொடர்பு கிடைக்காமல் போக கைதடிப் பாலத்திலிருந்து சண்டை நடக்கும் இடத்திற்கு வந்துகொண்டிருந்த போராளி இயலி தொடர்பை திலகாவுடன் ஏற்படுத்துகிறாள். அதன்போது நேரம் 10 மணியாகி இருந்தது.

லெப்.திலகா சொல்கிறாள், எல்லா ஏவுகருவிகளையும் இணைச்சு அடிக்கச்சொல்லி தனது நிலப்புள்ளியை அறிவிக்கிறாள். தன்னிலிருந்து 100மீற்றர் தூரத்திலேயே எதிரி இருக்கிறான் என்று சொல்லி எதிரிமீது தாக்கிக்கொண்டிருக்க எதிரிக்கு சேதம் ஏற்படுகிறது. எதிரியும் எமது பிரதேசத்தை நோக்கி எறிகணைகளை பொழிகின்றான். கமலும், திலகாவும் ஒரு காவலரணிலிருந்து சண்டைசெய்ய திலகா எழுந்து நின்று எறிகணை திருத்தம் செய்கிறாள். கமல் அவளைத் தடுக்கிறான்.

கிட்டவா விழுகுது குனியுங்கோ... என்று பலமுறை சொல்லியும் அவள் கேட்கவில்லை. தனது இலக்கே தனக்கு முக்கியமென்று அதற்குத்தான் அடியுங்கோ... சரியா விழுகுது அடியுங்கோ என்று சொல்லிவிட்டு திரும்புவதற்குள் எதிரியின் எறிகணை சிதறல்பட்டு மண்ணில் சரிகிறாள். அவளது கையிலிருந்த நிலைகான் தொகுதி அவளது கையிலேயே இறுகப்பற்றியவாறு இருக்க, அந்த நாளின் வெற்றியை பெற்றுத்தந்து ஈழமண்ணை முத்தமிடுகிறாள்.

லெப்.திலகா வீரச்சாவடைவதற்கு 03 தினங்களுக்கு முன் புதுக்குடியிருப்பில் இருந்த தனது அக்காவிற்குக் கடிதம் எழுதி இருந்தாள். அந்தக் கடிதம் என்னிடமே தந்து அனுப்பினாள். தந்துவிடும்போது சொன்ன வார்த்தைகள் மறக்கமுடியாதவை. அண்ணா அடுத்த சண்டையில் நான் வீரச்சாவடைவேன். அது நிச்சயம். அக்காவை கவலைப்படாமல் இருக்கச்சொல்லுங்கள். எனது தங்கச்சியும் இந்த தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி வீரச்சாவடைந்தாள் என்று நினைத்து மகிழ்ச்சியடையச் சொல்லுங்கள் என்று இறுதியாக, உறுதியாகச் சொன்னவள் சொன்னது போலவே வீரச்சாவடைந்து தமிழீழ இலட்சியத்தோடு கலந்துவிட்டாள்.


## புதிய ஆரம்பம்



## வவுனியா நகர் அபிஷா வைத்தியசாலையில் பற் சிகிச்சை நிலையம்

பல் கட்டுதல், பல் அடைத்தல், பல் சுத்தம் செய்தல், கிளப் போடுதல், நிரந்தர பல்கட்டுதல், பல் பிடுங்குதல் மற்றும் விசேஷ சிகிச்சைகள் அளிக்கப்படும்.

பேராதனை பல்கலைக்கழக சிறப்பு பற்சிகிச்சை நிபுணரினால் பற்சிகிச்சைகள் அளிக்கப்படும். (6234)




மாதகலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் திரு. நாகலிங்கம் சண்முகம்

முன்னை நாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் அவர்களின்

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| அவனியில் | பவனியில் |
|---|---|
| 25 | 25 |
| ★ | ★ |
| 05 | 05 |
| ★ | ★ |
| 1936 | 2004 |

ஆண்டது ஒன்றாகிவிட்டது அப்பா
நீண்ட துயரது நீங்கவில்லை
வேதனைத் துயரில் வெதும்புகின்றோம்
மாதம் பலபல கடந்து முடிந்தது.
எம் கண்களின் நீர் காயவில்லை
எம் மனதினில் நினைவுகள் மறையவில்லை.
எம் உயிரிலும் உயர்ந்த தந்தையை
எம் பிறவியில் எங்கே காண்போம்.
காணும் இடமெல்லாம் உங்கள் உருவம்
கதைக்கும் போதெல்லாம் உங்கள் நினைவு
தூணாய் நின்ற குல விளக்கே
தொழுது வாழ்கின்றோம் தினம் தினமே.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

முகவரி:-
இல-64, கனகபுரம்,
கிளிநொச்சி.

மனைவி, பிள்ளைகள்.

(சி.12178)




எங்கள் நீர்வளத்தை நாங்கள் பாதுகாக்கவேண்டும். இதனை நமது முன்னோர்கள் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். அதன் காரணமாகவே அவர்கள் குளங்களையும் கேணிகளையும் தமது பிரதேசங்களில் அமைத்தார்கள். ஏனெனில் இப்பிரதேசங்களின் நன்னீர் மண்வளத்தைப் பாதுகாப்பதில் இந்த கேணிகளும். குளங்களும் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

குறிப்பாக யாழ்.மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் தரையின் கீழான சுண்ணாம்புப் படிவுகளே இங்கு நன்னீர் வளம் பேணப்படுவதற்கு முக்கியமான காரணமாகிறது.

இங்கு குறிப்பிட்ட காலப்பகுதியே மழைக்காலமாகும். மலைகளோ, ஆறுகளோ, பெரிய காடுகளோ கிடையாது. இதுவே இங்குள்ள பிரச்சினை. அதாவது மூன்று அல்லது நான்கு மாதங்களில் கிடைக்கும் மழைதான் குடாநாட்டின் நீரின் மூலாதாரம்.

எனவே இந்த மழையினை வீணாக்காது பாதுகாக்க வேண்டியது அவசியமாகின்றது. அதாவது மழைநீரை சேதமாக்காது கடலில் கலக்கவிடாது தடுத்து தரைக்கு மேலேயே சேகரித்து பாதுகாக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

ஆனால் இங்கு நடப்பதோ வேறுவகையான நடவடிக்கைகள். குறிப்பாக குடிசனப்பெருக்கம் காரணமாக தோட்டநிலங்கள் கூட குடியிருப்புகளாக மாறிவருகின்றன. அத்துடன் சிறுகுளங்களும், கேணிகளும் கூட உரிய பராமரிப்பு இல்லாத காரணத்தால் தூர்ந்து வருகின்றன. இதற்கு மேலதிகமாக அவை குறிப்பிட்ட சில நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மூடப்பட்டும் வருகின்றன.

இவ்வாறு நீரைச் சேகரிக்கும் அல்லது பாதுகாக்கும் நடவடிக்கைகள் புறந்தள்ளப்படும் அதேவேளை நீரின் பாவனையானது மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன் மறுவளத்தைப் பற்றி நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

நீர் வளத்தைப் பாதுகாக்க இன்னமும் நடவடிக்கை எடுக்க தவறுவோமானால் இதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும்.

மிக முக்கியமாக யாழ் குடாநாட்டு மக்கள் இதில் அக்கறை காட்ட வேண்டும். தூர்ந்து அழிந்து கொண்டு இருக்கும் குளங்களையும் கேணிகளையும் பாதுகாத்து மழைநீரை சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

இது தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் உரிய திட்டமிடல் மூலம் மேற்கொள்ளப்படவேண்டும்.

# பீர்க்கு செய்கை

எமது பிரதேசத்திலே விவசாயிகள் பீர்க்கு உற்பத்தி செய்வது குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். எமது பிரதேசச் சந்தைகளில் பீர்க்கு விற்பனை செய்வதைக் காண முடிவதில்லை. பீர்க்கு மிகவும் பிரபல்யமானதொரு மரக்கறிப் பயிராகும். இப்பயிர் எல்லாக் கால நிலைகளிலும் வளர்ந்து பயன் தரக்கூடியது. இது அநேகமாக வெப்பத்தை தாங்கி வளரக்கூடியது. இப்பயிரைக் கடும் மழை காலங்களில் நாட்டுவது நல்லதல்ல.

*நடுகை செய்வதற்கு ஏற்ற மண்:-*

நீர் நன்கு வழிந்தோடக் கூடிய நிலமாகவும் சேதனப் பொருட்களைக்கொண்ட மணல் கலந்த இருவாட்டி மண் இப்பயிருக்கு உகந்தது. எமது பிரதேசத்திற்கு உகந்த பயிராதலால் விவசாயிகளாகிய நாம் இப்பயிர்ச் செய்கையில் ஈடுபடலாம். இப்பயிரை ஈரவலயத்தில் ஆண்டு முழுவதும் பயிரிடலாம். உலர் வலயத்தில் காலபோகத்திலும் பிரதானமாக இதனைச் செய்கை பண்ணலாம். சிறுபோகத்தில் நீர்ப் பாசனத்துடன் உலர் வலயத்தில் இப் பயிரைத் திருப்திகரமாகச் செய்கை பண்ணலாம். ஆனால் கடும் மழை பெய்யும் காலத்தை தவிர்த்து இதனைச் செய்கை பண்ணலாம்.

*நிலத்தைப் பண்படுத்தல்:-*

நிலத்தைப் புரட்டி மண் கட்டிகளை உடைக்கவும் இதன் 30x30x30 செ.மீ அளவுள்ள குழிகளை சரியான இடைவெளிகளில் தயாரித்துக் கொள்ளவும். தோட்டத்தில் நீர் அனாவசியமாகத் தேங்கி நிற்பதைத் தவிர்த்துக்கொள்வதற்காக சில ஆழமான கான்களை அமைத்துக் கொள்ளவேண்டும். விதை பெற்றுக் கொள்ள விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட எல்-ஏ-33 ஆசிரி ஆசிய இனங்கள் இருக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து உங்கள் தோட்டங்களில் நாட்டலாம். விவசாயிகளால் பால் பீர்க்கு, கருக்குப்பீர்க்கு என்று அழைப்பதுமுண்டு.

*எல்.ஏ-33:-*

வர்க்கம் பழுப்பு கடும் பச்சை நிறமான நீண்ட காய்கள் உருவாகும்.

*ஆசிரி வர்க்கம்:-*

இது புதிதாக சிபார்சு செய்யப்பட்ட பீர்க்கு வர்க்கமாகும்.30 ச.மீ நீளமான காய்கள் உருவாகும். தற்போது சிபார்சு செய்யப்பட்டுள்ள எல்- ஏ-33 வர்க்கத்தைவிட அதிகளவில் நுகர்வோர் விரும்பும் வர்க்கமாகும்.

தயார் செய்யப்பட்ட குழிகளில் நன்கு உக்கிய சேதனப் பசளையில் ஒரு கூடை வரை இட்டு மேல் மண்ணுடன் கலந்து விடவும். விதைகளை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் சிபார்சு செய்யப்பட்ட அளவில் அடிக்கட்டுப் பசளையை மண்ணில் இட்டு மண்ணுடன் கலந்து விடவும். ஒரு குழியில் 3-4 விதைகளை ஒன்றுக்கொன்று சிறிது தூரத்தில் உள்ளவாறு 2-3 ச.ஆழத்தில் நடவும். நட்ட விதைகளுக்கு நன்கு நீரூற்றவும்.

விதை நட்டு 2 வாரங்களாகியதும் ஒரு இடத்தில் 2 நாற்றுக்கள் மாத்திரம் இருக்கத்தக்க வாறு ஏனையவற்றைப் பிடுங்கி விடவும். பீர்க்கில் இருந்து நல்ல பயனைப் பெற்றுக்கொள்வதற்கு 2 மீற்றர் உயரமான பந்தல்களில் கொடிகளைப் படர விடல் வேண்டும். எனவே இதற்கு 3 மீற்றர் இடைவெளியில் பலமான தூண்களை நட்டு அதன் மேல் கயிற்றால் அல்லது கம்பிகளால் வலைகளை அமைத்தல் வேண்டும். பந்தல் வளர கொடியில் உருவாகும் பக்கக் கணுக்களை அகற்றி விடல் வேண்டும்.

வீட்டுத்தோட்டங்களில் பீர்க்கைச் செய்கை பண்ணும்போது கம்பி வேலிகளில் அதனைப் படர விடலாம். பீர்க்கின் வேர்த் தொகுதி ஆழமற்றதாகும். எனவே களைகளைக் கட்டுப்படுத்தும் போது வேர்ப்பகுதிக்குச் சேதம் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பீர்க்கை பழ ஈயின் புழுக்கள் தேசம் விளைவிப்பதால் காய்கள் அழுகும். இத்தாக்கத்தைக் கட்டுப்படுத்த பூச்சி நாசினிகளை விசிற வேண்டிய அவசியமில்லை. 15.ச.மீற்றர் அகலமான 40.ச.மீ நீளமான இரு பக்கமும் திறந்த நிலையில் உள்ள பொலித்தீனால் காய்களுக்கு உறையிடவும் இப் பொலித்தீன்களைக் கம்பில் கட்டிவிடவும்.

அடுத்ததாக பயிர்கள் இளமையாக இருக்கும்போது அவுலக்க போராவண்டு இலைகளுக்குச் சேதம் விளைவிக்கும் காபறில் போன்ற பூச்சி நாசினியொன்றை இதற்காக விசிறலாம்.

நீண்ட நாட்களுக்கு நீர் தேங்கி நிற்குமாயின் கொடியின் அடிப்பாகம் பங்கசுக்களினால் பாதிக்கப்படும். இந்தநேரத்தில் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினியொன்றை கொடியின் அடிப்பாகத்திற்கு விசிறவும். மண்ணில் நீர் வடிந்து செல்லும் தன்மையை அதிகரித்தல் என்பதன் மூலம் இதைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

*அறுவடை:-*

காய்கள் முதிர்ச்சியடைய முன் அறுவடை செய்ய வேண்டும். பயிரின் வயது 60-70 நாட்களாகும் போது முதலாவது அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் பின் 4 நாட்களுக்கொரு தடவை 11/2-2 மாதங்கள் வரை 10-15 தடவைகள் அறுவடை செய்யவும்.

*அறுவடைக்குப் பின்:-*

அறுவடை செய்த காய்களின் மீது கடும் சூரிய வெளிச்சம் விழுவதைத் தவிர்க்கவும். காய்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் சிறந்த காற்றோட்டம் இருக்கத்தக்கவாறு கூடையில் அடுக்கி சந்தைக்குக் கொண்டு செல்லலாம்.

---

**(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஊடகங்களாகத்தானிருக்கிது. நேயர்களிட்டையோ. வாசகர்களிட்டையோ ஒவ்வொரு அம்சமும் எவ்வளவுக்குப் போய்ச்சேருது எண்டதைப் பற்றி எவையும் ஆரோக்கியமானமுறையில அக்கறை எடுத்து, அதுக்கேற்றவகையில மாற்றங்களைச் செய்யிறேல்லை. இதுவரைக்கும் தெரிஞ்ச ஆக்களூடாகத்தான் விசாரிக்கிறனான். நீங்கள் கேட்டது யோசிக்கவேண்டின விசயம்தான். மற்றது நோக்கம் நிறைவேறுதோ எண்டால் . . . தான் சார்ந்த சமூகத்தின்ரை வளர்ச்சிக்கு ஒவ்வாத விசயங்களை ஒதுக்கி, அதை மாற்றிக்கொள்ள வேண்டியது ஒவ்வொருத்தன்ரையும் கடமை. என்ரை எழுத்தைப் பார்த்து ஓராள் மாறினால் எனக்கு மெத்த சந்தோசம்தான். அப்படியேதும் நடக்காட்டியும் பிற்போக்குகளை நியாயப்படுத்திற குப்பையளைப் பற்றி வாய்திறக்கிறதுக்கே ஏலாமல் போற அளவுக்கு, நல்ல கருத்துகளால முன்னெடுக்கப்படிற முற்றுகைப்போரில ஒரு சின்னப்பங்கைச் செய்யிற திருப்தி என்ரை பேனாவுக்கு இருக்கிது. இந்த அப்பு சொல்லிறதை விரும்பி வாசிக்கிற ஒவ்வொருத்தரும் எங்கெங்கை உருப்படாத விசர்க்கதையளைக் கேள்விப்படுகினமோ, அங்கை அவையள் அதை எதிர்க்கிறதுக்கு எந்தக் கருத்தியல் தடையும் இருக்கப்படாது எண்டதுதான் என்ரை விருப்பம்.

நிருபர்: உங்கட எழுத்துகளிலை ஒருதலைப்பட்சமான பெண்ணாதிக்கவாதம் தொனிக்கிறதா ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதைப் பற்றி என்ன சொல்றீங்கள் ?

ஏ9 ஏரம்பு : ஆ. ..'.கா.'.கா ! எங்கட சமூகத்தில நிலவி வந்த ஆணாதிக்கக்கருத்தியலுக்கு எதிராய் எங்கட இனம் பல கட்டங்களைத் தாண்டியிருக்கிற இந்த நேரத்தில, இப்பிடி ஒரு குற்றச்சாட்டு வாறது கேட்க சந்தோசமாய்க் கிடக்கிது. என்னண்டு சொன்னால் எதிர்க்கப்படுகிற ஆணாதிக்கவாதம் எண்டிறது அருபமானது. எங்கட சமூகம் விரும்பியோ, விரும்பாமலோ இந்தக் கருத்தியலுக்கிள்ளை கட்டுண்டு கண்ணீர் வடிக்கிது. பேர் என்னவோ ஆணாதிக்கவாதமாய் இருந்தாலும், இந்த வாதம் இன்னும் மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறதுக்கு பெண்களும்தான் காரணம். பாதிக்கப்படுகிறது இரண்டு தரப்பும் தான். இருந்தும் நான் என்ரை தகவல்-வண்டியில இருந்து . . மன்னிக்கோணும் வங்கியில இருந்து எடுத்துக்காட்டிற சம்பவங்கள் பிழை விடுகிற ஆண்களுக்கெதிரானதாய் இருக்கிறது ஏதோ உண்மைதான். அதுக்காக பெண்கள் சிலர் செய்யிற அநீதியான விசயங்கள் இல்லையெண்டில்லை. ஆனாலும், அப்பிடி ஒரு சிலரின்ரை பிழையளை நான் எடுத்துக்காட்டப் போய், அது ஒருதலைப்பட்சமாய் ஆணாதிக்க வாதத்துக்கான நியாயங்களை அள்ளி வழங்கிற மாதிரியும் போயிடும். அதாலதான் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறனான். அவர் கடைக்கார குணத்தார். . . அந்த மனுசனுக்கு என்னைக் கண்ணிலையும் காட்டப்படாது. நான் பயத்திலை தான் ஆதரவாய் எழுதிறனான் எண்டு ஆக்களுக்கிள்ளை வைச்சு என்னைப் பரிசு கெடுக்கும். எனக்கென்ன பயம் ஆ..? நியாயத்தை எழுதிறதுக்கு ஏன் பயப்பிடோணும் ! சரி அப்பிடித்தான் பெண்ணினத்தை விமர்சிச்சு எழுதினாத்தானும் என்ன பெரீசாய் பொங்கியே எழப்போயினம் ! அப்பிடி பொங்கிற ஆக்களெண்டால் காதால கேட்கேலாத பாட்டுகளைக் கேட்டவடி வீதி வழியிலை போகேக்கிளையே ரோசம் வந்தெல்லோ இருக்கோணும். ஆனால், அப்பிடி ஒண்டுமே நடக்கறேல்லை. ஏதோ 4 பேர் எழுதிக்கொண்டும், 5 பேர் மேடையில பேசிக்கொண்டும் இருக்கிறதை இன்னும் 2 பேர் வீடியோ எடுத்தாப்போல முழுவர்க்கமும் மாறிவிட்டெண்டு சொல்லிறதே ? உந்த (.com) டொட்கொம்முகளின்ரை புண்ணியத்திலை அண்டைக்கொரு பள்ளிக்கூடத்திலை பதிவுசெய்யப்பட்ட பட்டிமன்றத்தைக் கேட்டன். 'பெண்கள் விடுதலை அடைந்துவிட்டனரா, இல்லையா?' எண்டதுதான் தலைப்பு. அதிலை ஒரு தங்கச்சிப்பிள்ளை அடிச்சுச் சொன்னா, இன்னும் விடுதலை அடையவில்லை எண்டு. சரி, சொன்ன நியாயம் என்னெண்டு நினைக்கிறீயள் ? 'பொழுது இருண்ட பிறகு தன்னை நகையள் போட்டவடி தாய் வெளியால திரிய விடிறேல்லையாம்!'. அப்ப பாருங்கோ பெண் விடுதலை எண்ட பேரிலை ஒவ்வொருத்தரும் என்ன என்னத்துக்கெல்லாம் பெருமூச்சு விடுகினம் எண்டு. உதெல்லாம் கவனிச்சு விளங்கப்படுத்தோணும். 'மாலதி, அங்கையற்கண்ணி எண்டு தங்கட உயிரை விலையாய் கொடுத்த 3820 பிள்ளையள் பவுணுகளைப் பற்றியெல்லாம் ஒண்டும் யோசிக்கேல்லை'.

நிருபர்: நீங்கள் சரியான மேலைத்தேய மோகி, கீழைத்தேச பழக்க வழக்கங்கள் எல்லாத்தையும் ஏளனம் செய்கிறீர்கள் என்பது பற்றி...

ஏ9 ஏரம்பு: மன்னிக்கோணும் தவறான கருத்தது. எங்களிட்டை இருக்கிற நல்ல விசயங்களை நாங்கள் போற்றிப்பாதுகாக்கோணும். வெளிநாட்டவனிட்டை இருக்கிற இன்னுமொரு திறமான விசயத்தை எங்களுக்கேற்றமாதிரி உள்வாங்கவும் வேணும். ஆனால் நிலைமை எதிர்மாறாய் எல்லே நடக்கிது. எங்கட நல்ல அடையாளங்களை எல்லாம் விட்டிட்டு, பத்தாக்குறைக்கு மற்றவங்களின்ரை குப்பையளையும் கூடவே சேர்த்துக்கொள்ளிறம். அந்தப் போக்கைத்தான் நான் விமர்சிக்கிறனான். இந்தியப்பண்பாட்டுப் பிடிக்கிள்ளை இருந்துவந்த நாங்கள் கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்க்கோணும். ஒருபக்கத்தால பாரம்பரியப்பண்பாடு எண்டு வெற்றுப்பெருமை பேசிக்கொண்டிருக்க, மற்றப்பக்கத்தால 65 லட்சம் எயிட்ஸ் நோயாளியள் இந்தியாவில. இதுக்கிளை நோய் காவியளின்ரை தொகை அடக்கப்படேல்லை. ஒருபக்கம் பெண்சிசுவைக் கலைக்கிறதும், மற்றப்பக்கத்திலை சாத்திரப்படி சுபநேரப் பிரசவங்களைத் தருவிக்கிறதுமாய் நவீன மருத்துவத்துவம் துஷ்பிரயோகப்பட்டுக்கொண்டிருக்க, இன்னுமொரு பக்கத்தால நேபாளத்தில இருந்து சிறுமியளை விபச்சாரத்துக்கெண்டு கடத்திக் கொண்டு வாறதும் (ஆதாரம் : வனர்) நடந்து கொண்டிருக்கிது. உதவி நிறுவனம் ஒண்டில பொறுப்பாய் இருந்தவற்றை தகவலின்படி 12 வயசுக்கு உட்பட்ட 2 லட்சம் நேபாளச்சிறுமியர் வரை இப்பிடி ஏமாற்றிக் கடத்தப்பட்டிருக்கினம். ஏன் சொல்லிறன் எண்டால் பண்பாட்டுப் பெருமையளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் மட்டுமே நாங்கள் முன்னேறிவிடமுடியாது. இந்தியாவின்ரை முரண்பாட்டுக்கலாச்சாரம்(?) சற்றலைற், சினிமா வழியில எங்களைத் தொற்றிறதுக்கு வாய்ப்பளிக்காமல் நாங்கள் விழிப்போட இருக்கோணும். ஆகவே தான் நல்ல அம்சங்களைத் தேர்ந்தெடுத்து, தீயவற்றை ஒதுக்கி வாழிற நெறியில நாங்கள் பலமாய் இருக்கோணும். தொடர்ந்து நான் எழுதிறதை வாசிச்சுக்கொண்டு வாறவைக்கு இந்தத் தாத்தாவின்ரை மனசு புரியும்.


நிருபர் : உங்களுக்குப் பிடிச்சதும், பிடிக்காததும் ?

ஏ9 ஏரம்பு : பிடிக்காதது எவற்றை முகத்திலையும் கண்ணீர், பிடிச்சது நல்ல இதயங்களின்ரை முகத்தில உதிக்கிற மகிழ்ச்சிப்புன்னகை.

பொறுங்கோ! பொறுங்கோ! வாசல்லை மணி அடிச்சுக்கேட்கிது. எழும்பிப் போக முயற்சித்தன், ஆனாலும் முடியேல்லை. உடம்பை ஒருக்கால் உன்னி எழும்பினன். கட்டிலிலை படுத்துக்கிடந்தது ஞாபகத்துக்கு வந்திச்சிது. பேர்ளினால வந்து பேய்க்களைப்பு அப்பிடியே நித்திரை அமத்தீட்டிது. அப்ப இந்தளவு நேரமும் கண்டது . . ? . . கையைப் பிரட்டிப் பார்த்தன். கனவோ எண்டு உறுதி செய்ய நுள்ளிப்பார்த்த இடம் கண்டிப்போய்க் கிடந்திச்சிது. அடக்கடவுளே !

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலா!*

*பொதுக்கட்டமைப்பை ஏன் ஜே.வி.பி விரும்பவில்லை? சனாதிபதியும், அவர்களும் சேர்ந்து நடத்தும் நாடகமா?*

*நிலவன்,*
*இரணைமடு.*

எல்லாம் பேரினவாத வெறியின் பாற்பட்ட சிந்தனைகளின் வெளிப்பாடேயாகும். ஆரம்பத்தில் இருவரும் சேர்ந்துதான் நாடகமாடத் தொடங்கினர். இப்போது தனித்தனியாக அவரவர் பாணியில் நாடகமாடத் தொடங்கியுள்ளனர். அவ்வளவே...!

*பாவலா!*

*தொலை பேசியில் அலட்டுபவர்கள் பற்றி உங்கள் கருத்து?*

*ஆ.லூசியாமேரி,*
*முழங்காவில்.*

மற்றவரின் நேரத்தையும் பணத்தையும் மதியாப் பண்புடையோர்கள்!

*பாவலா!*

*கல்வி புகட்டிய ஆசானை வீதியில் மறித்து அசிங்கமாகத் திட்டிய மாணவனுக்கு தாங்கள் கூறும் அறிவுரை?*

*ஓவியன்,*
*செம்மலை.*

அறிவு புகட்டியவருக்கு நேர்ந்த கதியை பார்த்த பின்னரும் அறிவுரை புகட்டத் துணிச்சல் வருமா?

*பாவலா!*

*இந்தக் காலத்தில் பணத்திற்கு மதிப்பா, குணத்திற்கு மதிப்பா? நீர் எதற்கு மதிப்புக் கொடுப்பீர்?*

*வ.நாகேஸ்வரி,*
*திருவையாறு.*

இப்போதெல்லாம் பணத்தின் மதிப்பு அன்றாடம் கூடிக் குறைவதை காண்கிறோமல்லவா...! நல்ல குணத்தின் பெறுமதி 'நாணயத்'தால் மதிப்பிடப்படுவதில்லையே!

*பாவலா!*

*காதலித்தவனை கைவிட்டுவிட்டு வேறு மாப்பிளை என்றதும் என்னை மறந்து விடுங்கள் என்று சொல்லும் பெண்களை என்னவென்று அழைக்கலாம்?*

*நாகேஸ்வரி,*
*இரணைமடு.*

உங்களுக்கு சாபவிமோசனம் தரும் தேவதைகள் அவர்கள்... கல்யாணத்தின் பின் இப்படியொரு அவலம் உங்களுக்கு நேராது காத்தவரல்லவா?

*பாவலா!*

*எங்கள் ஊருக்கான பிரதான வீதி அதன் நிலையிலேயே இல்லை படுமோசமாக உள்ளது. ஆனால் எவரும் கண்டு கொள்வதாக இல்லை. என்ன செய்யலாம்?*

*ரவிச்சந்திரன்,*
*பாண்டியன்குளம்.*

உங்கள் ஊருக்கான பிரதான வீதியின் விதி படுமோசமாக உள்ளது அவ்வளவுதானே...! உங்கள் ஊரில் முக்கியமான பிரமுகர்கள் எவரும் இல்லை என்பதைத்தான் வீதியின் நிலைமை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் நீங்கள் இருக்கிறீர்களே பல கைகள் சேர்ந்தால்...

*பாவலா!*

*முட்டாள்தனமாக பேசுபவர்களிடம் பேசுவது நல்லதா? அல்லது மௌனமாக இருப்பது நல்லதா?*

*சு.விஜிதா,*
*இரணைமடு.*

"மௌனம் கலக்கத்தை இல்லாமல் பண்ணும்" என்ற பொன்மொழியின் அர்த்தத்தை புரிந்து கொள்ளுங்கள்.

*பாவலா!*

*கடந்த காலத்தை நினைத்து கவலைப்படுவதா? எதிர் காலத்தை நினைத்து பயப்படுவதா? நிகழ்காலத்தில் நான் என்ன செய்வது உத்தமம்?*

*மதி,*
*மானிப்பாய்.*

"நடந்ததை எண்ணி வருத்தப்பட்டால் அவன் மடையன். நடக்கப் போவதை எண்ணிக் கவலைப்பட்டால் அவன் மூடன். போனால் வருவது, வருவது வரட்டும் என்பவனே நல்ல ரசிகன்" என்று கண்ணதாசன் பாடியுள்ளாரே....!

*பாவலா!*

*நிசாம் முத்தலிப் கொலையை பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?*

*பிரியா,*
*வவுனியா.*

அது பற்றி எதனையும் நான் நினைக்கவில்லை. அவரால் விசாரணை என்ற பெயரில் கைதாகி வதைக்கு உள்ளாகி வதம் செய்யப்பட்டவர்களின் நீளமான பட்டியலையே இந்தச் சமயத்தில நினைக்கக் கூடியதாக உள்ளது.

*பாவலா!*

*எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் புத்த பெருமான் போய்விடுவாரா? அல்லது....?*

*ராகினி,*
*கோணாவில்.*

புத்தர் அரசியல் துறவறம் பூண்டு வெளியேறுவதை புத்த துறவிகளான அரசியல்வாதிகள் விரும்பவே மாட்டார்கள்.

*பாவலா!*

*இலங்கைக்கான ஐ.நா பிரதிநிதியின் நிலைமை எப்படி இருக்கிறது?*

*சுபா,*
*புதுக்குடியிருப்பு.*

பாவமாக- பரிதாபமாக இருக்கிறது.




'இப்ப புத்தர் சிலையப்பற்றி என்ன நினைக்கிறியள் எடுப்பாங்களோ'

'அதெப்பிடி சிங்களவர் விடுறாங்களே- உது கலவரத்தை துவங்க வெண்டே திட்டம் போட்டுச் செய்த வேலை'

என்னத்தை துவங்கினாலும், இது அம்பத் தெட்டுமில்ல, எழுவத்தேழுமில்லை.

மெய்தான், இப்ப ஏலுமெண்டாக் கலவரத்தை துவக்கிப் பாக்கட்டும்.

டேடேய் உப்பிடி சவால் விட்டுக் கதையாதை. அவங்கள் கொஞ்சப் பேரே இனி படையக் கொணந்தும் இறக்கியிருக்கிறாங்கள் - பிறகு...

அவங்களடாப்பா சம்பளத்துக்கு வேலை செய்யிறவங்கள் எண்டத மறக்காதையுங்கோ.

என்னடா சம்பளம்? சம்பளத்துக்கு மேல எங்கட சொத்துகளைக் கொள்ளையடிச்சது கொஞ்சமே.

பின்ன உப்பிடி சம்பாத்தியங்கண்டவங்கள் கலவரத்தை ஒருக்காத் துவங்கினா என்னண்டு கனவு காணத்தான் செய்வாங்கள்.

ஆனா இந்த முறை அப்பிடிக் கனவு வந்தால் அது காதல் கனவாயிராது. பேய்க கனவாத்தான் இருக்கும்.

பேய்க்குப் பேய்க் கனவு வராம, மனிசக்கனவே வரும். ஆனா புலிக்கனவும் சேர்ந்தா உயிர்வதை.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 123



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் - 123**

.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

பெயர் : ..................................... ஈழநாதம்
முகவரி : ..................................... யாழ்சாலை,
..................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 122



**தெய்.சதீஸ்பாபு,**
**கைதடி தெற்கு,**
**கைதடி.**

### பரிசுக்குரிய வரிகள்

*ஆங்காங்கே ஆமிக்காரன்*
*அமைக்கிறான் புத்தர் சிலை*
*அமைதியாய்க் கிடந்து நீயும்*
*ஆகிடாதே சிற்பக்கலை.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*பாட்டாளி வர்க்கத்தின் பரம்பரை படுத்துறங்கலாமா?*
*ஏதோ ஒரு கடமை எமக்காகக் காத்திருக்கும்*
*தந்தையே யார் உம்மை கைவிடினும் தளராது*
*எழுந்திடுவீர் கைகொடுக்கக் காத்திருக்கிறது எம் வீர மண்.*

ந.கங்கா,
கிளிநொச்சி.

*அழகான நம்வீடும் வளமான தோட்டமும்*
*உயர் பாதுகாப்பு வலய பின்னலிலே*
*வயது போனாலும் உயிர் போக மறுக்கிறது*
*சொந்த மண்ணை முத்தமிட காத்திருக்கிறது.*

சு.செல்வி,
பரந்தன்.

*அந்நாளில் உங்கள் உழைப்பினால் உயர்ந்தோர்*
*இந்நாளில் உங்கள் நிலை கண்டு தூது நிற்கின்றார்*
*வருந்தாதீர் ஐயா வளர் தமிழீழத்தின்*
*பெருநிழலாய் நாம் உள்ளோம் கலங்காதீர்.*

இ.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*உழுதுண்டு உழைத்து வாழும் எம் ஈழவள*
*நாட்டில்- நீ மட்டும் ஏன் உறங்குகின்றாய்*
*ஏர் எடுத்து உழுதுண்டு உழைத்து*
*எம் மண் செழித்திட எழுந்திடு.*

த.கோகுலராஜ்,
கிளிநொச்சி.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்
அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# கவனியுங்கள்..!



துணுக்காய்ப் பிரதேசத்தில் இருந்து பனங்காமத்திற்கு செல்கின்ற இந்தப்பாதை பலஆண்டுகளாகக்குன்றும் குழியுமாக மிகவும் சீர்கேடான நிலையில் காணப்படுகிறது. அவசர தேவை கருதிக் கூட இப்பாதையால் பயணம் மேற்கொள்வது பெரும் சிரமமே. இருபக்கமும் அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட இப் பாதையில் பனங்காமம் மக்கள் பெரும் இடர்களுக்கு மத்தியில் அனைத்துத் தேவைகளுக்கும் பயணம் செய்யவேண்டியுள்ளது.

துணுக்காய் பனங்காமப் பிரதேசங்களை இணைக்கும் பிரதான பாதை இதுவே. இன்றுவரையும் உரியவர்கள் எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. எனவே இனியாவது கவனிப்பார்களா...? என ஏக்கத்துடன் வினாவுகின்றனர் கிராம வாசிகள். இப்பாதையின் சீர்கேடான நிலையால் துணுக்காய்ப் பிரதேசங்களுக்கு வருகின்ற மக்கள் பல கிலோ மீற்றர் சுற்றி வேறொரு பாதையால் பயணம் செய்யவேண்டியுள்ளது.

ஆனால் அந்தப்பாதையும் நல்ல நிலையில் இல்லை. குறிப்பிட்ட இப்பாதையில் மக்கள் போக்குவரத்து வெகுவாகவே குறைந்துள்ளது. இந்நிலைமை தொடருமானால் காலப்போக்கில் இப்பாதை சிலவேளைகளில் இருந்த இடம் தெரியாமல் போகலாம். எனவே போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பாதையை புனரமைப்புச்செய்து தருமாறு உரியவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தமிழ்















இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | வைகாசி–27 | 10–06–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–112



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12122) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## அவசர தேர்தலை நோக்கி சனாதிபதி தரப்பு நகர்வு

(கொழும்பு)

சிறிலங்காவில் தற்போதைய அரசியல் ஸ்திரமற்ற நிலையை அடுத்து சனாதிபதி தரப்பினர் அவசர தேர்தல் ஒன்றைப் பற்றிய இலக்கை நோக்கி நகர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளரை அழைத்து அவசர தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளதுடன் உடனடித் தேர்தல் ஒன்றுக்காக தேர்தல் ஆணையாளருக்கு செய்து தரப்பட வேண்டிய

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாக பிரதமர் கூட்டணித்தலைவர்களுடன் ஆலோசனை

### ஜே.வி.பி யும் பங்கேற்றது

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் விருப்பத்திற்கு மாறாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி. உட்பட கட்சித் தலைவர்கள் பங்கேற்றிருந்தனர்.

பொதுக்கட்டமைப்பு உருவாகுவதை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விரும்பாத நிலையில் இவ்வாறான கட்சித் தலைவர்கள் கூட்டத்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்

பொதுக்கட்டமைப்பு முயற்சிகளுக்கு எதிராக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேசிய நாட்டுப்பற்றாளர் இயக்கத்தில் அங்கம் வகிக்கும் சுமார் 42 அமைப்புக்கள் சேர்ந்து கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளதாக ஜே.வி.பி யின் பிரச் சாரச் செயலர் விமல் வீரவன்ச கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஜே.வி.பி. சார்பு தேசிய நாட்டுப்பற்றாளர் இயக்கம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச இவ்வாறு கூறினார்.

# பொதுக்கட்டமைப்பை அமைக்க வேண்டாம்

# புலிகளை அழிக்க அரசு தயாராகவேண்டும்

### பௌத்த மகாநாயக்க தேரர்கள் சனாதிபதிக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆழிப்பேரலை புனரமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை அமைக்கவேண்டாம். புலிகளை அழிக்க உடன் அரசு தயாராகவேண்டும் என பௌத்த மகா நாயக்கதேரர்கள் சனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பான அறிவித்தல் நேற்று சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கலதேரர், அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம புத்தரக்கித தேரர், ராமான்ய மகாநாயக்கர் வேவல் தெனிய மேதாலங்கார, அமரபுர மகா நாயக்கர் தௌவுல்தன ஞானேஸ்வர தேரர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி பல்கலைக்கழகங்களில் பிரச்சினைகளை உருவாக்குகின்றது

### ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைகழகங்களுக்குள் ஜே.வி. பியே பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக ஐக்கிய தேசியகட்சி குற்றம் சாட்டியுள்ளது

கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினுள் ஏற்பட்ட முரண்பாட்டு நிலையை அடுத்து பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவி விலகத் தீர்மானித்தது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தற்போது பல பல்கலைக்கழகங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. சப்ரகமுவ பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிவிலகத்தீர்மானித்துள்ளார். இந்த அனைத்து முரண்பாடுகளுக்கும் முக்கியகாரணம் ஜே. வி .பி யின் அரசியல் நடவடிக்கைகள் பல்கலைக்கழகங்களுக்குள் நடைபெறுவதே என்றார். (32)

## சிறிலங்காவின் அரசியல் தற்சமயம் பாரிய ஆபத்திற்குள் சிக்கியுள்ளது

### –சிறிலங்காவின் தேசிய புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் பாரிய ஆபத்திற்குள் அகப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் தேசிய புலனாய்வுத் துறையினரின் விசேட அறிக்கையொன்று சுட்டிக்காட்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் சிறிலங்காவின் ஆளும் அரசியல் நகர்வுகள் அதலபாதாளத்திற்குச் சென்றுள்ளது. இந்த நகர்வுகள் தொடருமாக இருந்தால் சிறிலங்காவில் பாரிய விளைவுகள் சிங்களமக்களுக்கு எதிராக ஏற்படும் சந்தர்ப்பங்கள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழர்களைத் தற்போது உள்ள அரசியல் பொறிக்குள் அகப்படவைக்க வேண்டிய கட்டாயநிலைக்கு சிறிலங்கா அரசியல் தலைமைகள் தள்ளப்பட்டுள்ளதாகவும் தேசிய புலனாய்வுப்பிரிவு எச்சரித்துள்ளது. சிறிலங்காவில் மின்சாரசபை ஊழியர்களின் போராட்டம், புகையிரத ஓட்டுனர்கள் போராட்டம்,பல்கலைக்கழக மாணவர் போராட்டம் போன்றவை ஜே.வி.பி யினரால்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் பகுதியில் ஒருவர் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொலை

(தென்மராட்சி)

மிருசுவில் கொட்டிகை அம்மன் கோவிலுக்கு அருகே நேற்று மாலை 6.15 மணியளவில் இனந்தெரியாதோரால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சுட்டுக்கொலலப்பட்டுள்ளார்.

வேலைக்குச் சென்று வீடு திரும்பும் வழியில் இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கொடிகாமம் பொலிசார் தெரிவித்துள்ளனர். (28)

## செங்கலடியில் இனம்தெரியாதோர் தாக்குதல் ஈ.பி.டி.பி. உறுப்பினர் உட்பட மூவர் காயம்!

### இராணுவத்தாக்குதலில் பொதுமகன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி ஈ.பி.டி.பி முகாமில் இருந்து செங்கலடிச் சந்தைக்கு சிறிலங்கா இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் வந்து கொண்டிருந்த ரவி எனப்படும் தருமலிங்கம் இளமாறன் என்ற ஈ.பி.டி.பி உறுப்பினர் மீது இனந்தெரியாதவர்களினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 9:40 மணிக்கு நடந்த இத்தாக்குதலில் குறித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர், இராணுவ லான்ஸ் கோப்ரல் பிரேமதிலக, பொலிஸ் கான்ஸ்டபிள் நிமால் ஆகியோர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது ஈ.பி.டி.பியினரும், பொலிசாரும் ஆயுததாரிகள்மீது பதில் தாக்குதல் மேற்கொண்டதில் வீதியில் வந்தவர் கொல்லப்பட்டுள்ளார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத் தனியரசை நோக்கி புலிகள் முன்னேறி வருகின்றனர்

### -தேசிய பிக்கு முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்பு மூலம் புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை சிறிலங்கா அரசு வழங்கியுள்ளது. புலிகள் தமிழீழத் தனியரசுநோக்கிப் படிப்படியாக முன்னேறி வருகின்றார்களென தேசிய பிக்கு முனனணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுக்கட்டமைப்பைத்தடுக்க மல்வத்தை மகா நாயக்க தேரர் உடனே தலையிடவேண்டுமெனறு பௌத்தபிக்குகள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்ர அமில தேரர்,செயலாளர் கல்வெல்கல சந்தலோக்க தேரர் ஆகியோர் நேற்று மல்வத்த மகாநாயக்க தேரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வடக்கு-கிழக்குப் பகுதியில் தனியரசை உருவாக்கி நாட்டைப் பிளவுபடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள்

(IV ஆம் பக்கம் பார்க்

## 8 ஆம் ஆண்டில் உன் நினைவுடன்



## வீரவேங்கை 2ஆம் லெப்.சுதர்சனா

(அருந்தவராசா நிக்சனாமேரி)

கொக்குழாய்)

**தாயின் மடியில்:-12-12 -1981**

**தாயகமண்ணில்:-10 - 06 - 1997**


தாயக விடுதலைப்போரில் தன்னை
இணைத்துக்கொண்ட சுதர்சனா
தாய் மண்காக்க தாய் தந்தையை விட்டு
தானைத்தலைவன் வழி நடந்து எதிரியுடன் மோதி
தன்மானத்துடன் வீரச்சாவடைந்து எட்டு
ஆண்டு சென்றாலும் ஆறாது எம் மனது

இன்று சுதர்சனாவின் 8ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அவர்களது தற்காலிக குடியிருப்பான செல்வபுரம் குடியிருப்பில் நடைபெறுவதால் அந்த நாளில் போராளிகள், நண்பர்கள், உறவினாகளைக்கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

தகவல்:-
செல்வபுரம்தற்காலிக
குடியிருப்பு, வட்டுவாகல். குடும்பத்தினா.

(5933)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



## வீரவேங்கை இந்திரா

(பிறேமரஞ்சினி -சிவசாமி)

**தாயின் மடியில் :- 04-03-1980**

**தாயக மண்ணில்:- 10-06-1997**

என் அன்புச் செல்வமே!
கருவறைச் சிறை திறந்து
கால்பதித்து நடந்த தேசத்தின்
தெருவெங்கும் வெடியோசையால்
தேன் தமிழ் ஈழத்தின் அழுகுரல் கேட்டு
தங்கை நீயும்!
தாய் நிலத்து சிறையுடைக்க
தரணி போற்றும் தமிழர்
தலைவன் அணியில் ~உன்
தடம் பதித்து சாதனை புரிந்து நீயும்
தாண்டிக்குளமதிலே
தலை சாயாது சமராடி
தாய்மண்ணை முத்தமிட்டனையோ
உன் உயிர தந்து
எம் உயிர காத்திட்ட
உடன் பிறப்பே~என்றும்
உன் நினைவு அழியாது

"இம்மண்ணின் விடிவிற்காய் அர்ப்பணமாகிய அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

தகவல்: –குடும்பத்தினர்
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

(6243)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இல.405, ஜெயந்திநகரில் வசிக்கும் கோபால் குகதாசன் என்பவரது குடும்பதிவு அட்டை பயண அனுமதி வழங்கும் செயலகத்திற்கும், நிமலன் புகைப்படக்கலையகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(6245)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை, மல்லாவி வீதி, வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5" x 6" x 12" - ரூபா 23.00
4" x 6" x 14" - ரூபா 20.00

(6210)

### வீடு விற்பனைக்கு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன்ஒழுங்கையில் உள்ள 2ஏக்கர் காணியுடன் பெரிய கல்வீடு, கிணறு, மலசல கூட வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- திருமதி: பூமணி-தர்மலிங்கம், 3ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(6166)

## பொது மண்டபம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன்பற்றுக் கிராமத்தில் இடைத்தங்கல் முகாமிற்குரிய பொது மண்டபம் நேற்று மாலை மூன்று மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக மங்கல விளக்கினை போரூட் திட்ட முகாமையாளர் ஆன் அவர்களும், செயலணித் குழுத்தலைவர் யாழமுதனும் ஏற்றி வைத்தனர்.

மண்டபத்திற்கான நாடாவினை போரூட்திட்ட முகாமையாளர் ஆன் வெட்டிதிறந்து வைத்தார். தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெற்றன.(தீ)

## தொழிற் பயிற்சிநெறி-விண்ணப்பங்கோரல்

யு.என்.எச்.சி.ஆர் (**UNHCR**) நிறுவனத்தின் நிதியுதவியுடன் மற்றும் ஜப்பானிய அரசாங்கம் வழங்கும் நிதியுதவியுடனும், உலக உணவுத்திட்டம் வழங்கும் உணவுப் பொருட்களின் உதவியுடனும் ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும் (**BAJ**), கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் (**REERDO**) இணைந்து 155ஆம் மைல்கல் ஏ-9 வீதி, கிளிநொச்சியில் நடாத்தும் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்:-**

01) உழவு இயந்திரத்திருத்தம் (இருபாலரும்)
02) தையல் (பெண்கள்)

**பயிற்சி நெறிக்கான காலம்:**-06 மாதங்கள்

**தகைமைகள்:-**

0 17-29 வயதிற்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
0 ஆண்டு 10 வரை கல்வி கற்றவராயிருத்தல் வேண்டும்.
0 நலிவுற்ற குடும்ப அங்கத்தவராயிருத்தல் வேண்டும்

**பயிற்சி அனுகூலங்கள்:-**

0 தொழில்சார் பயிற்சிச் சான்றிதழ்
0 சுயதொழில் முயற்சிக்கான தகுதி
0 இத்தொழில்பயிற்சி நிலையம், மூன்றாவதும், தொழில்சார்பானதுமான கல்வி ஆணைக்குழுவில் (**TVEC**) அங்கீகாரம் பெற்றதாகும். பதிவு இல:- P24/0001

**ஊக்குவிப்பு:-**

பயிற்சிக்காலத்தில் உலக உணவுத்திட்டத்தின் மூலம் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:-** 24.06.2005

**குறிப்பு:-**

பயிற்சிக்கான விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு சுயவிபரங்கள் சரிவர நிரப்பப்பட்டு தபாலிலோ அல்லது நேரிலோ கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல்வேண்டும்.

தொழிற்பயிற்சி நிலையம்,
155மைல்கல் ஏ–9 வீதி,
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி. **பணிப்பாளர்.**

(சி.12191)

யூலை ஆரம்பமாகிறது

LONDON TR TEC
நிறுவன அனுசரணையுடன்
கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் நடாத்தும்
பின்வரும் கற்கை நெறிகளுக்கான

## விண்ணப்பம் கோரல்

சர்வதேச அங்கீகாரம் உடைய **City & Guilds (LONDON)** சான்றிதழுக்கான பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☐ e-Quals (Information Technology (MS Word, MS Excel, MS Access, etc..)
☐ ESOL City & Guilds Pitman Qualification (Diploma in English)

தேசிய ரீதியில் அங்கீகாரமுடைய சான்றிதழ்களுடனான AAT கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடைவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

☐ Stage I அடிப்படை (Foundation Level)
☐ (Stage II)

தகைமை

க.பொ.த. (சா/த) கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 20–06–2005இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
பயிற்சி நெறிக்கான கட்டணம் இலவசம்.

1) நவீன ஆய்வுகூட வசதிகளுடன் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கணினிகள் பயிற்சி நேரத்தில் ஒதுக்கப்படும்.
2) நவீன இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் நூலக வசதிகளுடன் கூடியதும் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் விரிவுரைகளும் நடாத்தப்படும்.
3) பயிற்சிக்கான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

குறிப்பு: eQuals, ESOL ஆகிய இரண்டு பயிற்சி நெறிகளுக்கும் City & Guilds நிலைய அனுமதி (Centre Approval) கிடைக்கப்பெற்றுள்ளமையால் ஆர்வமுள்ளவர்கள் இந்நிலையமூடாக பரீட்சை எழுதலாம். பரீட்சைக்கான கட்டணம் தாங்களே செலுத்த வேண்டும்.

**அதிபர்,**
தொழில்நுட்ப கல்வி நிறுவனம்
A-9 சாலை, கிளிநொச்சி.

(சி-12197)

# சர்வதேச சந்தையில் எரிபொருள் விலையுயர்வுக்கேற்ப உள்நாட்டிலும் உயர்த்த அரசுக்கு உரிமையில்லை

## -ஐக்கிய தேசியக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் எரி பொருள்விலை அதிகரிக்கும்போது உள்நாட்டிலும் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கத்திற்கு எந்தவித உரிமையும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையின் மாற்றங் களுக்கேற்ப இலங்கையிலும் விலை அதிகரிக்கப்படுமானால் அரசாங்கம் ஒன்று அவசியம் இல்லை எனத் தெரிவித்த ஜே.வி. பி. இன்று மக்கள் மீது சுமத்தப்படும் பொருளாதாரச் சுமை பற்றிய விடயங்களை மழுங் கடித்து விட்டு பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் விவாதித்துக் கொண்டிருக் கிறது.

எரிபொருள்விலை அதிகரிப்பானது மக்களின் சாதாரண வாழ்க்கை நட வடிக்கைகள் மீது பாரிய தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (32)

# பாதுகாப்புக் குறைப்பினால் உயிருக்கு ஆபத்து: ஜெயலத் ஜெயவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தனக்குரிய பாதுகாப்பு அரசினால் குறைக் கப்பட்டுள்ளமையால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய அவர் அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளமை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்குரிய பதிலெதுவும் கிடைக்கவில்லையெனவும், பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதிலும் அதற்கும் பதிலெதுவும் கிடைக்கவில்லையெனவும் அவர் கூறினார்.

# ஆழிப்பேரலை நிவாரண சபை; பத்திரிகை விளம்பரத்திற்கு எதிர்ப்பு!

(கொழும்பு)

உத்தேச வடக்கு மற்றும் கிழக்கு ஆழிப்பேரலை நிவாரணசபை தொடர்பாக பத்திரிகைகளில் அரசாங்கம் வெளியிட்டுள்ள விளம்பரம் தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வழக்குத்தாக்கல் செய்ய வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள குறிப்பிட்ட சபை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்ற வினாவையும் சில கட்சிகள் எழுப்பியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் அமைச்சர்களிடம் இந்த சந்தேகத்தை எழுப்பியபோது அப்படி எதுவும் இடம்பெறவில்லை என அமைச்சர் ஒருவரால் பதிலளிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் இதுவரை ஏற்படுத்தப்படாத சபை தொடர்பாக எப்படி விளம்பரத்தை அரசாங்கம் தேசிய பத்திரிகைகளுக்குக் கொடுக்க முடியும் என்பது குறித்தே சர்ச்சைகள் எழுந்துள்ளன. (32)



ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் கிளி. கிழக்கு புனர் வாழ்வு நிறுவனத்தினரால் விவசாயிகளுக்கு நேற்று முன் தினம் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களும், இரு மருந்து தெளி கருவிகளும் வழங்கப்பட்டன. கிளி. கிழக்கு புனர் வாழ்வுக்கழக இணைப்பாளர் சிவரஞ்சினி விவசாயி ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரத்தை வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: ரூபன்)

# திலீபன் மருத்துவ சேவையின் அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பணம்

(அலுவலக செய்தியாளர்)

ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பண நிகழவு அண்மையில் நடைபெற்றது.

மேற்படி குழுவின் தலைவராக கட்டைக்காடு அ.த.க. பாடசாலை அதிபர் வே. புவனேந்திரன் தெரிவுசெய்யப் பட்டார்.

இக்குழுவின் திட்டம் வடமராட்சி கிழக்கு இடைத் தங்கல் முகாம்களில் வாழ்கின்ற மக்களை மையப் படுத்தியே செயற்படவுள்ளது.

இத்திட்டம் மூலம் மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளாக சூழல் சுகாதாரம் தொடர்பாகவும், தனிநபர் சுகாதாரம் தொடர்பாகவும் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படவுள்ளன.

இக்குழுவின் முதற்கட்டச் செயற்பாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கட்டைக்காடு இடைத்தங்கல் முகாமில் ஆரம்பமாகவுள்ளது.

(தீ)

# சமகால அரசியல் கருத்தரங்கும் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவும்

(உடையார்கட்டு)

சமகால அரசியல் கருத்தரங்கும் உடையார்கட்டு-சுதந்திரபுரம் புதிய தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு நிகழ்வும் உடையார்கட்டுப் பிர தேச தேசிய எழுச்சிப்பேரவை துணைச் ...லர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமகால அரசியல் கருத்துரைகளை முல்லை மாவட்ட ...சிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் ...சாளர் வேதவனம், உடையார் ...ப் பிரதேச அரசியல்துறைப் ...றுப்பாளர் புகழரசன் ஆகியோர் ...ங்கினர்.

...திய நிர்வாகத் தெரிவில் 11 பேர் ...ண்ட உறுப்பினர் தெரிவாகினர். ...தில், செயலாளராக பொ. விதன், ... செயலாளராக நா. அழகேசன், ...ருளாளராக சுஜீவன் ஆகியோரும், ...வாக உறுப்பினர்களாக பாபுஜி, ...திரமோகன், கலைக்குமரன், அ.இராசம்மா, கிருஸ்ணராதா, கோகு லன், சதானந்தகுமார், விவேகானந் தன், சுதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (19)

# கட்டாக்காலி கால்நடைகளால் விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் தென்மேற்குப் பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வலி காமம் தென்மேற்கு பிரதேசசெய லாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தென்மேற்குப் பிர தேசத்திலுள்ள மாதகல், சில்லாலை, நவாலி, சங்குவேலி போன்ற பகுதி களில் அதிகளவு விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் உள்ள பல்லாயிரக்கணக்கான குடும் பங்கள் விவசாயத்தையே நம்பி வாழ் கின்றன.

இந்நிலையில் இப்பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் பலரும் தமது ஆடு, மாடுகளை கட்டாக்காலியாக மேய விடுகின்றனர். இவை இங்குள்ள விவசாய நிலங் களுள் அத்துமீறி நுழைந்து பயிர் களுக்குச் சேதம் விளைவிக்கின்றன.

இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் பொருளாதாரப் பாதிப்புகளுக்குள் ளாவதாகச் சுட்டிக்காட்டியுள்ள வலி காமம் தென்மேற்கு பிரதேச செய லாளர் ரூபினி வரதலிங்கம். கால்நடை வளர்ப்பாளர்கள் பொறுப்புடன் கால் நடைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (33)

# ...திய அறங்காவலர் சபை தெரிவு

(நமது நிருபர்)

இராமநாதபுரம் மாவடி சிறிமாரி அம்பாள் ஆலய புதிய அறங்காவலர் சபை கடந்த ஐந்தாம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக க. தர்மசூரியர், உபதலைவராக வே. செல்லத்துரை, இணைத் தலைவராக த. கோகிலன், செயலாளராக க. செல்வராசா, உப செயலாளராக ச. சாந்தகுமார், பொரு ளாளராக நா. பத்மநாதன், கணக் காய்வாளராக இ. விஜயகுமார் ஆகியோரும், நிர்வாக உறுப் பினர்களாக கி. வசந்தன், ஆ. துரை சிங்கம், சி. அங்குசன், பொ. சச் சிதானந்தம், நா. பாலசிவராம் ஆகி யோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# விபத்தில் குடும்பஸ்த்தர் படுகாயம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு-சுதந்திரபுரம் 16ஆம் கட்டைப் பகுதியில் வீதி விபத்தில் குடும்பஸ்த்தர் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. வீதியின் கரையோர மாகச் சென்று கொண்டிந்தவரைப் பின்னால் இருந்து வந்து கொண் டிருந்த கன்ரர் வாகனம் மோதியதில் அவர் கையில் பலத்த காயமடைந் துள்ளார்.

உடையார்கட்டு நேசன் தையலக உரிமையாளரான கந்தசாமி நேசன் (வயது-25) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். (19)

# ஒன்றுகூடல்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு வர்த்தகர் களுக்கான ஒன்றுகூடல் கடந்த செவ்வாய்க்கிழமை உடையார்கட்டு வர்த்தகர் சங்கப் பொருளாளர் பொ. விதன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வொன்றுகூடலில் கருத் துரைகளை உடையார்கட்டு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் க. விஜயகுமார், முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் மூர்த்தி ஆகியோர் வழங்கினர். (19)


## மனமார்ந்த நன்றிகள்

என்னால் தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை, ஊழியர் அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்களைக் கண்டெடுத்து எனது தொழில் முகவரிக்கு அனுப்பிவைத்த நற்குணம் படைத்தவருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

உடையார்கட்டு தெற்கு.

தி. ஜெயக்குமார்.

(சி-12046)



**கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்.**

பதிவு எண்:- பி.ஏ.047 திகதி:-1971.02.10

## பகிரங்க ஏல விற்பனை 2005.06.18

**கழற்றப்பட்ட இசுசு (ISUZU) பாரவூர்தி உடற்கோப்பு**

பாவனையிலிருந்த இசுசூ பாரவூர்தியின் கழற்றப்பட்ட உடற்கோப்பு நல்ல நிலையிலுள்ளது. இவ் உடற்கோப்பினை 2005.06.18ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள் வனவு செய்ய விரும்பியவர்கள் தலைமை அலுவலகத்தில் ரூபா ஐந்நூறு (500/-) செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2005.06.13ஆம் திகதி தொடக்கம் பரந்தன் சந்தியிலுள்ள எமது தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன்.

(சி-12177)



## சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணி வேண்டுகை



தமிழர் புனர்வாழ்வுக்கழ கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆள ணிகள் வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகின்றனர்.

க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்று தொழில் வாய்ப்புக்களின்றி உள்ளவர்களும், க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்று சமூகமட்டத்தில் சேவையாற் றியதற்கான அனுபவம் வாய்ந்தவர்களும் தகுந்த ஆவ ணங்களுடன் எதிர்வரும் 13.06.2005 அன்று முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கண்டிவீதி,
கிளிநொச்சி.

(சி.12041)

# ஹெலஉறுமய பிக்குவின் போராட்டம் தொடர்கிறது

# மற்றொருவரும் உண்ணாவிரதத்தில் குதிக்க முடிவு!

## -பேச்சுவார்த்தைக்கான அழைப்பும் நிராகரிப்பு

(கொழும்பு)

கண்டியில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஜாதிகஹெல உறுமயவின் மற்றும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரான கொட்டபொல அமரகீர்த்தி தேரரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளார். நாளை சனிக்கிழமை முதல் தாம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை கொழும்பில் ஆரம்பிக்கப்போவதாக கொட்டபொல அமரகீர்த்திதேரர் எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த கொட்டபொல அமரகீர்த்தி தேரர் கண்டியில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தேரரின் உடல்நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வருகிறது.

எனினும் சனாதிபதியோ பிரதமரோ, எதிர்க்கட்சித் தலைவரோ தேரரின் போராட்டத்தைப் பொருட்டாகக் கருதவில்லை. இதன் காரணமாக தேரரின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாம் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு யோசனையை சனாதிபதி கைவிடும் வரை தமது உண்ணாவிரதப் போராட்டத்தினைக் கைவிடப்போவதில்லையென உண்ணாவிரதம் இருந்து வரும் ஜாதிக ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்த தேரர் பிரதமர் மகிந்தராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு எதிராக ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினரான ஓமல்பேசோபித்த தேரர் கடந்த திங்கட்கிழமை காலை முதல் கண்டி சிறி தலாதாமாளிகையில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மத்திய மாகாண ஆளுநர் மொண்டி கொபல்லாவ ஆகிய இருவரும் உண்ணாவிரதம் இருந்துவரும் ஓமல்பே சோபித்ததேரரை நேரில் சென்று சந்தித்துள்ளனர். (32)

# புதுக்குடியிருப்பு சந்தியில் கோர விபத்து

# "டிப்பர்" மோதியதில் குடும்பஸ்த்தர் பலி!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சந்தியில் நேற்று இடம்பெற்ற



கோர வீதி விபத்தில் குடும்பஸ்த்தா ஒருவர் ஸ்தலத்திலேயே

பலியானார். காலை சுமார் 11.45 மணிக்கு இக்கோரச் சம்பவம் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் வீதி வழியாக வந்த டிப்பர் புதுக்குடியிருப்பு சந்தியில் பரந்தன் வீதியால் செல்லும்வேளை, அதே வழியில் துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த புதுக்குடியிருப்பு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பஸ்த்தரான க.அரிச்சந்திரன் என்பவர் மீது மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

சம்பவத்தை அறிந்த காவல்துறையினரும், நீதியாளரும் சம்பவஇடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவத்தை அறிந்து புதுக்குடியிருப்பு சந்தியில் திரண்ட பெருமளவான மக்கள் டிப்பரைத்தாக்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்னையடுத்து முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் மற்றும் காவல்துறையினர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (08,19)

## சிறிலங்காவின்....

அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இறுதியாகத் திருமலையிலும் புதிய போராட்டம் உருவாகியுள்ளது. இவற்றிலிருந்து சிறிலங்கா அரசை மீட்டெடுக்க வேண்டுமாயின் சனாதிபதி சந்திரிகா உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தனது அரசைப் பாதுகாக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வுப்பிரிவு எச்சரித்துள்ளது. இதுமட்டுமல்லாமல் மிகவிரைவில் தொழிற்சங்க மட்டங்களில் மிகப்பெரும் போராட்டங்களை ஜே.வி.பி யினர் நடாத்தத் திட்டம் தீட்டிவருகின்றனர். இவை கட்டம கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே ஜே.வி.பி யினரின் நகர்வுகளை அரசியலில் இருந்து ஓரம்கட்டும் நடவடிக்கையில் சந்திரிகா உடனடியாக இறங்க வேண்டும் என்று தேசிய புலனாய்வுப்பிரிவு எச்சரித்துள்ளதாகவும் இதன் அடிப்படையிலேயே தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒருவருட பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு அரசு வரமுற்படுவதாகவும் கூறப்படுகிறது.

## செங்கலடியில்....

ஆத்திரமுற்ற படையினரும், ஈ.பி.டி.பியினரும் வீதியால் வந்தவரைத் திட்டமிட்டுத் தாக்கியதாக அறியமுடிகிறது. இத்தாக்குதலில் செங்கலடி ரமேஸ்புரத்தைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி கருணாமூர்த்தி என்ற பொதுமகன் உயிரிழந்துள்ளார். இவர் விடுதலைப்புலி உறுப்பினர் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். 40 வயதான இவர் ஒரு முச்சக்கரவண்டிச் சாரதி என்பது குறிப்பிடத்தக்கது. காயமடைந்த லான்ஸ்கோப்ரல் பிரேமதிலக மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் அத்தகவல் மேலும் கூறுகின்றது.

## பொதுக்கட்டமைப்பு....

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பானது பாராளுமன்றத்தின் அனுமதியைப்பெறாமல் பயங்கரவாத, பிரிவினைவாத, இனவாத அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தத்தை செய்துகொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே இந்த நிலையில் அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு திட்டம் ஒன்றைச்செயற்படுத்துமாறு தாம் யோசனை ஒன்றை முன்வைப்பதாகவும் குறித்த மகாநாயக்கர்கள் கே[illegible]கள்.தமது யோசனையை சனா[illegible] ஏற்றுக் கொள்ளாமல் பொதுக்[illegible]டமைப்பை செயற்படுத்துவாரா[illegible] அவருக்கு எதிராக சங்க ஆணை[illegible]க்கப் போவதாகவும், [illegible]ளத்த மக்கள் அனைவரையும் திர[illegible]டி இறுதித்தீர்மானத்தை எடுக்கப்போவதாகவும் மகாநாயக்கர்கள் எச்சரித்துள்ளனர்.

அத்துடன் வவுனியா திருகோணமலை மற்றும் கிழக்கு மாகாணத்தில் பௌத்த சிலைகளுக்குச்சேதம் விளைவித்து மத உரிமை மற்றும் உயிர்வாழும் உரிமை ஆகியவற்றைப் பறித்து தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கான நடவடிக்கை ஒன்றை உடனடியாக அரசாங்கம் எடுக்கவேண்டும் என்றும் மகாநாயக்கர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்தப்படவுள்ள ஆழிப்பேரலை புனரமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு நல்குவதாக அஸ்கிரிய மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் சனாதிபதி சந்திரிகாவிற்கு ஏற்கெனவே உறுதி வழங்கியிருந்தனர். இதனைத் தொடர்ந்தே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் பணிகளை முன்னெடுத்திருந்தார்.

எனினும் தற்போது நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் இரு பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும் சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கையெப்பமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஹெல உறுமயவின் கடும் நிர்ப்பந்தத்தையடுத்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேணடாம் புலிகளை அழிக்க அரசுஉடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் இரு பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும் கையெழுத்திட்டதாகக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டாம் எனக்கூறி கண்டி தலதாமாளிகையில் உண்ணாவிதரமிருக்கும் ஓமல்பே சோபித்ததேரருக்கு ஆசி வழங்குமாறும் இவர்கள் மகாநாயக்கர்களை நிர்ப்பந்தித்திருந்ததாகவும, அதறகமைவாகவே மகாநாயக்கர்கள் ஆசி வழங்கியதாகவும் தெரிய வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

# சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவளிக்கும்

## -கொழும்பில் நட்வர்சிங் கருத்து

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் நேற்று மாலை 4.45இற்கு கொழும்பு வந்தடைந்தார். சிறிலங்கா இந்திய கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் பங்கேற்கும் நோக்குடன் இந்த விஜயத்தை நர்வர்சிங் மேற்கொண்டுள்ளார்.

வானூர்தித் தளத்தை வந்தடைந்ததும் கருத்துரைத்த இந்திய வெளியுறவு அமைச்சர், இரண்டு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் உறவின் காரணமாக பிராந்தியத்தில் சமாதானமும், ஸ்திரத்தன்மையும் ஏற்படும் எனக் குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலையின் பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா இலங்கையின் சமாதான ஏற்பாடுகளுக்குத் தமது பூரண ஆதரவை நல்கும் அதேநேரம் நாட்டின் இறைமையை உறுதிப்படுத்தவும் உறுதிபூண்டுள்ளதாக நட்வர்சிங் குறிப்பிட்டார்.

# ஆதரித்து ஆர்ப்பாட்டம்

யுத்தத்திற்கு எதிரான முன்னணி என்ற அமைப்பு பொதுக்கட்டமைப்பை சனாதிபதி உடனடியாகப் புலிகளுடன் சேர்ந்து ஏற்படுத்த வேண்டுமெனக் கூறியுள்ளது. இந்த யுத்தத்திற்கு எதிரான முன்னணியைச் சேர்ந்த சுமார் எண்ணூற்றிற்கும் மேற்பட்டோர் கொழும்பின் புறநகர்ப் பகுதியான மஹரகமவில் நேற்றுக் கூடி சனாதிபதி புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என ஒருமித்துக் குரல் கொடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை, பொதுக்கட்டமைப்பு உடனடியாக ஏற்படுத்தப்படாவிட்டால் அது நாட்டில் பல பாரிய விளைவுகளை ஏற்படுத்துமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# திருகோணமலை கடற்புரப்பில் 56 முஸ்லிம் மீனவர்கள் கைது!

## -பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசித்தனராம்

(திருமலை)

திருகோணமலைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 56 மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

ஆறு படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இவர்களை கைது செய்து திருகோணமலை சிறிலங்காப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.இவர்களின் கைது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சிறிலங்காப் பொலிசார் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் மீனபிடித் தொழிலில் ஈடுபட்டதுடன் சட்ட விரோதமான வலைகளைப் பயன்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவரும் முஸ்லிம் மீனவர்கள் ஆவார். இதேவேளை இப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சிங்கள மீனவர்கள் எவரும் சிறிலங்காக் கடற்படையினரால் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(41)

## அவசர....

ஏற்பாடுகள் தொடர்பில் வினாவப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை வெளியிட்டுள்ள சிங்கள நாளிதழ் ஒன்று உடன் தேர்தலுக்கான ஆவணங்களை அச்சிடுவது தொடர்பிலும், அரச அச்சகத்திடம் உள்ள வசதிகள் தொடர்பிலும் சனாதிபதி செயலகத்தினால் வினாவப்பட்டதாகத் தெரியவருகிறது.

## சனாதிபதியின்....

திற்கு சனாதிபதி எதிர்ப்பினை வெளி யிட்டிருந்தனர்.

இருப்பினும், பிரதமர் தனது செல்வாக்கை நிலை நிறுத்தும் வகையிலும் அடுத்த தேர்தலில் தனது நிலையை உறுதி செய்யும் வகையிலுமே இந்தக் கூட்டத்தை அவர் ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம், நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்காத ஜே.வி.பி. நேற்றுப் பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (32)

## தமிழீழ....

இயக்கம் முனைகிறது. உத்தேச பொதுக்கட்டமைப்பின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சட்டரீதியான அங்கீகாரத்தை சிறிலங்கா அரசு அளிக்க இருக்கிறது. நாட்டின் முன்னுள்ள மிகப்பெரும் பேராபத்து இது. தமிழீழத்தனியரசை நோக்கி விடுதலைப் புலிகள் ஒவ்வொருபடி நிலையாக முன்னேறி வருகின்றனர்.

இதற்காகத்தான் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள். பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் முழு தமிழர் தாயகப் பகுதியையும் அவர்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடுவார்கள். இது அவர்களின் தனியரசுக்கு வழிவகுக்கும். கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சிறிலங்கா அரசு இது போன்ற ஒப்பந்தங்களுடன் இயங்கியபோதும் இறுதியில் விடுதலைப்புலிகள் இயக்கமே பயனடைந்திருக்கிறது. அது தான் தற்போதும் நடக்கப்போகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பிரதமர் மகிந்தராஜபக்ஷ தனக்கு எதுவும் தெரியாது என்கிறார். அமைச்சர்களும் எதுவும் தெரியாது என்கின்றனர். இதர அரசியல் கட்சிகளும் அது குறித்து அறிந்திருக்கவில்லை. ஆகவே இப்பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வெளிப்படையான விவாதம் நடத்த வேண்டும்.

இந்த நாட்டைப் பேராபத்திலிருந்து காப்பாற்ற மகாநாயக்க தேரர் இதில் உடனே தலையிட்டு பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம்

## மாணவர் தங்குமிடவசதி தேவை

வன்னி ரெக்கின் மூன்றாவது தொகுதி மாணவர்கள், மாணவிகளுக்கு விடுதிவசதி அளிக்க விரும்பும் வீட்டு உரிமையாளர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம். விடுதி வன்னி தொழிநுட்பவியல் நிறுவகத்திலிருந்து 2Km தொலைவிற்குள் இருத்தல் நன்று.

தொடர்பு முகவரி:- வன்னி தொழிநுட்பவியல் நிறுவகம்,
தபாலகம் அருகாமை,கிளிநொச்சி.

தகவல்:-
பதிவாளர்

தொலைபேசி இல:- 228- 5876, (சி.6248)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது